Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
பெப்.04-10,1996

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 139

## தொண்டமானின் துருப்புச் சீட்டு



## கிழக்கில் சூறாவளி

## பட்டுச் சேலை



## இந்த வாரம் யாருக்கு?

## ரஜினி+ சரத் கூட்டணி

# முரசம்

## பட்டுச்சேலையல்ல...

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

ஆக்கங்கள்-
இடம்பெற்றேயாக வேண்டும்
என்ற பிடிவாதத்தோடு
பலர் தொடர்ந்து எழுதுகிறீர்கள்.

முயற்சியைக் கண்டு வியந்தாலும்
வெளியிடக் கூடியவற்றை
மட்டுமே பிரசுரிக்கிறோம்.

ஆக்கங்களில் உள்ள
குறைகளை சுட்டிக்காட்டி
விரிவாக மடல் எழுத
வாய்ப்புக் கிடைக்காமைக்கு
உண்மையாகவே வருந்துகிறேன்.

புதிய எழுத்தாளர்கள் பலரை
முரசு உருவாக்கியிருக்கிறது.
அவர்களின் முகம் தெரியாவிட்டாலும்
தொடர்ந்து இடம்கொடுத்து
ஊக்கமான களம் கொடுத்திருக்கிறது.

திறமையுள்ளவர்களை
இனம்கண்டு ஊக்குவிப்பதில்
முரசு ஒருபோதும் தயங்காது!

தமது ஆக்கங்கள் வரவில்லை;
ஏன் என்று விளக்கமும்
தரவில்லையே என்று
நிறையப்பேர் மடல் போட்டதால்
மேற்கண்ட சுய விளக்கம்!

முரசில் மேலும்
மாற்றங்கள் ஏற்பட உள்ளன.
பிரபல எழுத்தாளரின்
சமூகத் தொடர் ஒன்றும்
இடம்பெறவுள்ளது.

பட்டுச்சேலை பரிசுப்போட்டிக்கு
பெண்கள் மத்தியிலிருந்து
அமோக வாக்குகள்!
மலையாக குவிந்துள்ள
பரிசுக்கூப்பன்களும்
பாராட்டு மடல்களும்
இமாலய வியப்பு!

அதனால் பரிசு பெறுபவரின்
புகைப்படத்தை
வண்ணத்தில் வெளியிட
முரசு முடிவு செய்துள்ளது.
விரும்பினால் அனுப்பிவைக்கலாம்.
(அதிஷ்டசாலிகள் மட்டும்)

"பொங்கல் வாழ்த்துக்களை
அனுப்பிவைத்தோமே!
நன்றி சொல்லாவிட்டாலும்
கிடைத்தது என்று
ஒரு குறிப்பாவது சொல்லியிருக்கலாமே!"
என்று மடல் எழுதியவர்கள்
மன்னிப்பீர்களாக!
கிடைத்தன! இனித்தன!!

பட்டுச்சேலை பற்றிப்
பேசும்போதுதான்
அரசியல்தீர்வு சட்ட யாப்பு
நினைவில் வருகிறது!

பட்டுச்சேலை கிடைக்கும்
என்று நம்பியவர்கள்கூட,
கிடைக்கப்போவது
பொத்தல் விழுந்த
கந்தல் சேலையோ என்று கவலைப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள்!

நல்ல சேலை கிடைக்க
சில மாதங்கள், வருடங்கள்
சென்றாக வேண்டும் என்பதுபோல
ஜனாதிபதி பேசியிருக்கிறார்.
அதாவது-
"இனப்பிரச்சனை
ஒரே இரவில் தீரக்கூடியதல்ல"
என்று சொல்லியிருக்கிறார்.

அப்படியே வைத்துக் கொண்டாலும்
தரப்படும் சேலை,
தற்காலிகமாக அணியக்கூடிய
தரத்திலாவது இருக்கிறதா
என்று பார்க்கக் கூடாதா?

கந்தல் என்றால்
கசக்கிக் கட்டலாம்.
பொத்தல் அதிகம் என்றால்
எப்படிக் கட்டலாம்?!

எல்லைகள் மீள அமைப்பு
என்ற பெயரில்
பாராளுமன்ற தெரிவுக்குழு
எத்தனை பொத்தல்கள்
போடப் போகிறதோ?
யார் அறிவார்? நாமறியோம்!

ஒரு விடயம் மிகத் தெளிவு-
இனவாதிகளை 75 வீதம்
திருப்திப்படுத்த செலவிட்ட
கடுமையான உழைப்பு
சட்டயாப்பில் தெரிகிறது!

மீதியுள்ள 25 வீதத்தை
பாராளுமன்ற தெரிவுக்குழு
ஒரு வழி பண்ணிவிடுமோ?!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை- என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## மாறுகிற உலகில் மாறாதவர்

"பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனுமல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண்-23:19)



கர்த்தர் ஆதியும் அந்தமுமாய் இருக்கிறார். அவர் சாரோனின் ரோஜா, அவர் இரட்சகராய் இருக்கிறார். மேசே ஆண்டவரைப் பார்த்து, "உம்முடைய நாமம் என்ன" என்று கேட்டான். அதற்கு அவர் "இருக்கிறவராய் இருக்கிறேன்." என்றார். அவர் நேற்று, இன்று என்றும் மாறாதவராய் இருக்கிறார். மனிதன் மாறி விடுவான். பொய் சொல்லுவான். இன்று உன்னோடு இருப்பேன் என்பான், "உன்னை விட்டால் யாருமில்லை" என்பான். ஆனால் நாளை உன்னைத் தெரியாது என்பான். மாறுகிற உலகம் இது. மாறுகிற உலகில் மாறாத ஆண்டவர் இருக்கிறார். அவர் சொன்னதைச் செய்கிறவர். உலகில் பொய்யை மெய்யாக்கி வாதாடி ஜெயிக்கும் வக்கீல் தான் ஜனரஞ்சன வக்கீல். ஆனால் இறைவன் எப்போதும் உண்மை உள்ள வக்கீல். ஒருவர் உண்டு, அவர் தான் இயேசு கிறிஸ்து. அவர் தான் உலக மக்களுக்காக பரிந்து பேசும் வக்கீல். நீ இன்றே இயேசு வண்டை வா. ஆமென்.

சகோதரி பத்மா முதலியார் (இந்தியா)

## செம்மல் நபியின் சிறப்புரைகள்

1. ரமழான் மாதத்தைத் தவிர வேறு எந்த மாதத்திலும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மாதம் முழுவதும் நோன்பு நோற்றதில்லை.
2. எவர் ரமழான் மாத நோன்பை நோற்று அதைத் தொடர்ந்து ஆறு நோன்பையும் நோற்கின்றாரோ அவர் காலமெல்லாம் நோன்பு நோற்றவரைப் போலாவார்.
3. நோன்புப் பெருநாள் அன்றும், ஹஜ்ஜுப் பெருநாள் அன்றும்- ஆக இந்த இரண்டு நாட்களிலும் நோன்பு நோற்றல் கூடாது.
4. நோன்பு வைத்திருப்பவன் எல்லாவித தீயபேச்சிலிருந்தும் தன் நாவை அடக்கிக் கொண்டு பிறரால் தமக்கு செய்யப்படும் தீமையைப் பொறுத்துக் கொள்ளவும்.
5. ரமழான் மாதத்தின் இறுதி பத்து நாட்களில் (ஒற்றைப் படை நாட்களில்) லைலத்துல் கத்ர் இரவை தேடிக் கொள்ளுங்கள். அது ஆயிரம் மாதங்களைவிட சிறந்தது.

வெல்லம்பிட்டிய-கவிப்பிரியா நிஷா.

## கவிதைப்போட்டி இல-136

### பரிசுக்குரிய கவிதை

### விதி

உதைப்பட்ட நாமோ
இறுதியிற் குப்பை.
உதைத்த உமக்கோ
தங்கக் கோப்பை!

பீ.எம்.எம். அன்ஸார், வெலிகம.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### வெற்றிக்கனி

மக்கள் பந்து
எவர் பக்கம்.....
வெற்றிக் கனியும்
அவர்கள் பக்கம்.

அ.சிவஞானம், மணற்சேனை.

### மனம் குழம்பியது தானோ...?

பந்து வருவது என்று
நிமிர்ந்த நீ,
பாதியில் விழுந்தது ஏனோ?
குண்டு வருவது என்று-உன்
மனம் குழம்பியது தானோ....?

அளவை சுபா, (லண்டன்)

### எச்சரிக்கை

அடித்த பந்து
அருகில் வந்து
பின்
வெடிக்கும் குண்டாக
வேறு வடிவமாகலாம்,
பிடிக்கும் முன்
எச்சரிக்கை!

வை.சித்திக்கிருஷ்ணா,
பாண்டிருப்பு-01.

### பூமிப்பந்து!

பூமியொரு
பந்தோ?
நாடுகள்
வீரர்களோ?
ஐ.நாதான்
நடுவரோ?

ரேணுகா றிபாய்தீன்,
ஏறாவூர்-02.

### நனவு?

சமாதானப் பந்தில்
சந்திரிக்காவுக்கும்
இதேவேகம்
இருந்துவிட்டால்...!

த.விக்னராஜா,
ஆரையம்பதி-01, (யாழ்
மருத்துவபீடம்.)



வெற்றியின் முதற்படி
கடும்-
பயிற்சியும் முயற்சியும்!

செல்வி.சிவாஜினி சதாசிவம்,
மாத்தளை.

### கொலையும் கலையும்

குண்டுகளை விதைத்து
கொலை விளைக்கும் வடபுலத்தில்
பந்துகளை ஆடி
பரிசுபெறும் நாள் வருமா?

சதா கணபதி, உடபுஸ்ஸலாவ.

### முயற்சித்துப்பார்!

இடியே இடித்தாலும்...,
இன்னல் கொடுத்தாலும்...,
இறுதி மூச்சு இருக்கும் வரையில்!!!

நிட்டம்புவ-கலாயுவன்.

## கவிதைப் போட்டி இல-139



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 10.02.1996.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 139. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

### ஒற்றுமை

பந்தே!
இந்த தேசத்தில்,
நீயும் நானும்,
ஒன்றே-
மாறிமாறி,
உதைவாங்குவதால்!

ஆரையம்பதி-இதயம்.

### இதற்குமா?

பந்தைத் தகர்க்கக் கூட
மனித வெடி குண்டா....?

வ.வீரகுலசிங்கம்,
கோட்டைக்கல்லாறு-02.

கையால் பிடித்தாலும் குற்றமடா! காலால்
தட்டா விட்டாலும் நஷ்டமடா!
குற்றம் இல்லாமல் நஷ்டம் இல்லாமல்
பந்தை பார்க்கிறேன் ஒரு பக்கமடா!

ஸ்ரீதேவி, கொழும்பு-11.

### வம்பு...

வெடிகுண்டு ஐயா!
குடிகெட்டுப் போச்சு,
வீண் வம்பு வேண்டாம்,
விலகியே போங்கள்....!

நஸபியா பஹ்றீன், பெருக்குவட்டான்
'B' முகாம், கொத்தான்தீவு.

# வாசக(ர்) சாலை

உரியதைத் தரலாம் என்ற மகுடத்தோடு வெளியான ஆசிரியர் தலையங்கம் அருமை. உரியவர்களின் செவியில் ஏறுமோ என்பதுதான் சந்தேகம்.

ஆர்.சந்தானம், கேகாலை.

••

கவிதைப் போட்டி மூலம் நாட்டு நடப்பை விமர்சிக்கும் வாய்ப்பை வாசகருக்குத் தரும் உனது அணுகுமுறையை பாராட்டுகிறேன்.

எம்.கனகசிங்கம்,கல்லடி, மட்டக்களப்பு.

••

நாரதர் ஜாக்கிரதை! புட்டுப் புட்டு வைக்கும் எக்ஸ்ரேயால் சிலருக்கு மனப்புழுக்கம் அதிகரித்திருக்கலாம்.

வி.விஜயகுமார், வவுனியா.

••

கிரிக்கெட் செய்திகளை தொகுத்து தந்தவிதம் நன்றாக இருந்தது. விளையாட்டுச் செய்திகளை மேலும் விரிவாக்கிக்கொள்ளவும்.

கே.பூரணி, கண்டி.

••

பல சினிமா இதழ்களைப் படித்தாலும் ஒருவார சினிவிசிட்டுக்கு ஈடாகாதப்பா. பிழிந்து சுவையாக தரும் ஜூஸ்போல சினிமா செய்திகளை சுவைபடத் தொகுத்து தருகிறாய்.

எல்.ரமேஷ், ஹட்டன்.

••

தித்திக்கும் இனிய தினமுரசே,
வளரத் துடிக்கும் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களின் ஆக்கங்களுக்கும் களம் அமைத்திடும் உன் பணி உன்னதமானது! உன் பணி தொடர உளம் நிறைந்த வாழ்த்துக்கள்!

ஒஸ்லி. கபூர், அநுராதபுரம்.

••

கார்லோஸின் நிஜப்படத்தை நிறுத்தி எம் அகத்துக்கு உவகை தந்தது போல் தளபதி வாடி ஹாட்டாட்டின் படத்தையும் எங்கள் முன் நிறுத்துவாயா? தொடர் தரும் ரசிகனுக்கு காங்கிராட்ஸ்!

எம்.எம். ஸன்பர், கிண்ணியா-06

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படமுடிந்தவர்கள்:**

- ★கோகிலா குமாரவேல், இரத்தினபுரி.
- ★என்.ரீ.அமீனுதீன், அக்கரைப்பற்று-06.
- ★வ.துரைராஜ், வவுனியா.
- ★கல்லடி மூர்த்தி, மட்டக்களப்பு.
- ★எம்.சறீமா சனூன், புத்தளம்.
- ★எம்.பர்தான், மொரட்டுவ.
- ★கி.புஸ்பராஜ், இறக்குவானை.
- ★வரதன் விஜயகுமார், பொகவந்தலாவ.
- ★எம்.ஐ.எம்.றகீம், பொத்துவில்-02.
- ★நசூர்தீன், தெல்தோட்ட.
- ★எஸ்.கௌரி, நவகம்புர.
- ★வி.நாகேந்திரசர்மா, கண்டி.
- ★ஏ.ஆர்.பாகிமாபானு, சிறாஜ்நகர்.
- ★மனோமலர், தெனியாய.
- ★ஆர்.ராஜேஸ்வரன், நமுனுகல.
- ★ஜி.ஜெயசீலன், மட்டக்களப்பு.
- ★திருமதி முத்துலட்சுமி ராமநாதன், நிக்கலோயா.
- ★என்.எஃப்.நப்ரா, புத்தளம்.
- ★முகம்மது லாபீர், புல்மோட்டை.01.
- ★எம்.எச்.அன்வர், மடுல்சீமை.
- ★ப.ஷாலினி, ப.சுபா, டெமேரியா-பசறை.

எனது.
இனிய தினமுரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. லேடிஸ் ஸ்பெஷலில் வெளியாகும் அம்சத்தில் அப்துல் ரகுமான் எழுதிவரும் கவிதை என்னை மிகவும் கவர்ந்தது. அத்தோடு புதிதாக பரிசு போட்டி வெளியிட்டமைக்கும் நன்றிகள் பல (பட்டுச் சேலை பரிசு திட்டம்). உன் சேவை ஓங்கி வளர வாழ்த்துக்கள் பற்பல கூறும், இவள்-

செல்வி. ஆர். ஜீவராணி,வெள்ளம்பிட்டிய.

*******




அன்பின் அபிமான தினமுரசே! வாரந்தோறும் அருமையான பல்சுவை அம்சங்களையும், அரசியல் அலசல்களையும் அள்ளிவழங்கும் அரிய பணிக்கு அன்பு வாழ்த்துக்கள்.

ஏ.செபஸ்தியன், உடுப்பிடிய, உக்குவலை.

*******

### கார்லோஸ் கார்லோஸ்

முரசின் அனைத்து அம்சங்களும் நன்றாக இருந்தன. குறிப்பாக அப்துல் ரகுமானின் வினோத நெருப்பு-ரசிகனின் மனித வெடி குண்டு- அருமையிலும் அருமை. ஸ்போர்ட்ஸ் பகுதியை இன்னும் விரிவாக்கினால் நன்றாக இருக்கும்.

எம்.ஏ.எம்.மிஸ்வர்-பாணந்துறை

*******

முரசே!! பல வாரங்களாக ஒரு கலக்கு கலக்கி வந்த கார்லோஸை காணவேண்டும் என்ற எங்களுக்கு தகுந்த தீனியளித்து விட்டாய். புகைப்படத்திலும் அவரது சாகஸத்தை காட்டத்தவறவில்லை.

ஏ.எச். ராஸீன் மொகமட், ஏத்தாலை.

*******

ரசிகனின் மனித வெடிகுண்டு வாராவாரம் உசாராகிறது. கார்லோசின் துணிச்சல் என்னிடமிருந்த அச்சத்தை விரட்டியடித்து விட்டது. ரசிகனுக்கும் கார்லோசுக்கும் (முரசுக்கும் சேர்த்து) எனது மனமார்ந்த நன்றிகள்!!

எஸ்.கணேசமூர்த்தி, ஆரையம்பதி-02, மட்டக்களப்பு.

*******

அன்பின் தினமுரசே! உன்னில் நான் பார்க்காத பக்கங்கள் எதுவும் இல்லை. அப்படி ஒரு பைத்தியம் உன்னில் உள்ளது. ரசிகனின் கைவண்ணத்தோடு உருவாக்கப்படும் கார்லோஸ்சின் "மனித வெடி குண்டு" என்ற தொடரை நான் மறக்காது வாசித்து வருகிறேன். 136ம் முரசில் 'ஒப்பேக் மாநாடு டிசம்பர் 20.1995 ஆரம்பமானது, என்று எழுதப்பட்டுள்ளது. எனக்கு விளங்கி கொள்வதற்கு கஷ்டமாக உள்ளது.

சி.சதீஸ்குமார்,மட்டக்களப்பு.

*1975 என்பதே சரி. தவறுக்கு வருந்துகிறோம்.ஆ.ர்.*

# "எம்.ஐ. 17. ஐ நாம்தான் சுட்டு வீழ்த்தினோம்"

## "பாதுகாப்பரண்களை தாக்க தற்கொலைப்படை அனுப்புவோம்"

அரசோடு நேரடியாகவோ மூன்றாவது மத்தியஸ்தம் முன்பாகவோ பேசத் தயார் என்று தான் கூறவில்லை என்று விடுதலைப் புலிகளது அரசியல்பிரிவு துணைத்தலைவர் கரிகாலன் கூறியுள்ளார்.

வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு முன்னர் வழங்கிய பேட்டியில் தான் கூறிய கருத்தை சரியான அர்த்தத்தில் அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை என்று கரிகாலன் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் மட்டக்களப்பில் பத்திரிகையாளர்களை சந்தித்துப் பேசியபோதே கரிகாலன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது: கிழக்கில் அரச படைகளிடம் இருந்து பெரும் பிரதேசத்தை நாங்கள் மீட்டெடுத்துள்ளோம். தரவையிலும், கட்டுமுறிவிலும் இரண்டு பாரிய தாக்குதல்களை மேற்கொண்டோம். கட்டு முறிவில் சிறப்புப் பயிற்சிபெற்ற 300 கொமாண்டோ அணியினர் இருந்தனர். அவர்களைச் சிதறடிப்பதில் வெற்றி கண்டோம். ஏராளமான ஆயுதங்களையும், வெடி பொருட்களையும் கைப்பற்றினோம். மட்டக்களப்பில் 80 சதவீதமான நிலப்பரப்பு எங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

மட்டக்களப்பில் பொதுமக்களைப் பாதிக்கும் வகையில் நாம் குண்டுகளை வைப்பதாகக் கூறுவதில் உண்மையில்லை.

பாதுகாப்பரண்களையும், இராணுவத்தினரையும் தாக்குவதற்கு எமது தற்கொலைப் படையினரை அனுப்பிவைப்போம். பொது மக்களை பயன்படுத்த மாட்டோம்.

வந்தாறுமூலையில் கிழக்கு பல்கலைக் கழகத்தின் அருகில் ஒரு வாகனத்தில் இரண்டு குண்டுகள் வைக்கப்பட்டிருந்தமைக்கும் எமக்கும் ஒரு தொடர்புமில்லை. பொதுமக்கள் மத்தியில் எமக்குள்ள ஆதரவைச் சிதறடித்துவிட இவ்வாறான செயல்கள் திட்டமிட்டு நடத்தப்படலாம்.

யாழ்ப்பாணத்தை நாங்கள் மீண்டும் கைப்பற்றியே தீருவோம். யாழ்ப் பாணத்தில் படையினர் நிலை கொண்டுள்ள வரையோ, அல்லது தமிழ் மக்களின்அபிலாசைகள் நிறைவேறாத வரையிலோ நாங்கள் ஆயுதங்களை கீழே போடப்போவதில்லை.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் போரிடுவது சுலபம். பொதுமக்கள் அங்கே இல்லையென்பதால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படப் போவதில்லை.

பலாலியிலிருந்து வெற்றிலைக்கேணி நோக்கி சென்று கொண்டிருந்த எம்.ஐ. 17 ஹெலிகொப்டரை நாம்தான் சுட்டு வீழ்த்தினோம்.

நம்மால் சுட்டு வீழ்த்தப்பட்டவை அனைத்துக்கும் நாம் உரிமை கோரியுள்ளோம்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனையை ஒரு நடுவர் மூலம் கையளித்தால் அதனை பரிசீலனை செய்ய முன்வருவீர்களா? என்று 'சண்டே லீடர்' நிருபர் பேள் தேவநாயகம் கேட்ட கேள்விக்கு, கரிகாலன் பின்வருமாறு பதிலளித்தார்:

"இல்லை, அரசாங்கம் எம்முடன் நேரடியாகப் பேச முன்வரவேண்டும். இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சந்திரிக்கா அரசுக்கு அக்கறை இருப்பதாக எம்மால் நம்பமுடியாதிருக்கிறது." இவ்வாறு கரிகாலன் தெரிவித்தார்.

# திருமலையில் தாக்கியது சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு!

## படை முன்னேறுவதை தடுக்க பரவலான தாக்குதல்கள்!

**கிழக்கில் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் தீவிரமாகிவருவதால், புலிகள் அமைப்பினர் வேறு முனைகளில் பரவலான தாக்குதல்களை தொடுக்க திட்டமிட்டுள்ளனர். கடந்த 29.01.96 அன்று திருமலை மாவட்டத்தில் புல்மோட்டையில் நடைபெற்ற தாக்குதல்- சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையினர் மீது பரவலான தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளதாக சென்றவாரம் செய்தி வெளியிட்டிருந்தோம். அதனை உறுதிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் பரவலான மோதல்கள் நடைபெற்றுள்ளன.**

(நமது நிருபர் வர்மா)

### புல்மோட்டைத் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரது நடவடிக்கை ஆரம்பமானதையடுத்து, திருமலையில் பாரிய தாக்குதல் ஒன்று புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பில் சூரியகிரண இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபின்னர் புலிகள் நடத்திய முதலாவது பாரிய தாக்குதல் இதுவாகும்.

பிரபாகரனது நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவினரே திருமலையில் புல்மோட்டை இராணுவ முகாம்மீது தாக்குதல் நடத்தினார்கள்.

சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவின் சிறப்புத் தளபதியாக சொர்ணம் இருக்கிறார். யாழ் மாவட்ட புலிகள் இயக்க இராணுவத் தளபதியாக முன்பிருந்த செல்வராசாவின் பொறுப்பின்கீழ் திருமலையில் உள்ள சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு இயங்கிவருகிறது.

புலிகள் இயக்கத்தில் நிரந்தர இராணுவ கட்டமைப்போடு முதன் முதலில் உருவாக்கப் பட்டது சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் நடவடிக்கைகளை கட்டுப் படுத்தும் வகையிலும், படைக் குவிப்பை தடுக்கும் நோக்கத்தோடும் வேறு முனைகளில் புலிகளது தாக்குதல்கள் நடத்தப்படும் என்று நம்பப்படுகிறது.

### வன்னியில்

வன்னியில் இராணுவத்தினர் முன்னேறித்தாக்கும் முயற்சிகளில் ஈடுபடாமல் தடுப்பதற்காக, அங்கும் பரவலான தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று தெரிகிறது.

கடந்தவாரத்தில் மட்டும் முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பகுதியில் புலிகள் இயக்கத்தினரால் மூன்று தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் சுன்னாகம், இணுவில் பகுதிகளில் புலிகள் இயக்கத்தினர் படையினர் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

ஊர்காவற்துறை வேலணையில் ஈ.பி.டி.பி. முகாமின் காவலரண் ஒன்று புலிகளால் தாக்கப்பட்டது. ஈ.பி.டி.பி. தரப்பில் ஒருவர் பலியானார்.

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடித்தாக்குதல் ஒன்றில் (27.01.96) இராணுவ வாகனம் ஒன்று முற்றாக சேதமடைந்தது என்று புலிகளது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இணுவில் பகுதியில் 26.01.96 அன்று நடைபெற்ற மோதலில் புலிகள் தரப்பில் ஆறுபேர் பலியானதாக புலிகளது சர்வதேச செயலகம் தெரிவித்துள்ளது.

பொன்னாலைப் பகுதியிலும் புலிகள் ஒரு தாக்குதலை நடத்தினார்கள். காவலரணை பலப்படுத்திக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே தாக்குதல் நடத்தப் பட்டது. சேத விபரங்கள் தெரியவில்லை.

# எம். ஐ.17 விமானி யார்?

## புலிகள் சந்தேகம் தெரிவிப்பு!

வெற்றிலைக்கேணியில் வீழ்ந்த எம்.ஐ. 17 ஹெலிகொப்டரை செலுத்திய விமானி யார் என்று புலிகள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக புலிகளது இலண்டன் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"முப்பத்தொன்பது பேருடன் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட எம்.ஐ.17 ஹெலிகொப்டரில் பலியானவர்களில் 37 பேரின் பெயர் விபரங்களை மட்டுமே சிறீலங்கா அரசு வெளியிட்டுள்ளது. ஏனைய இருவரைப் பற்றி குறிப்படும்போது மேலும் இருவர் என்றே தெரிவித்துள்ளது.

விமானப்படை விமானங்கள்மீது புலிகள் மேற்கொண்டுவரும் தாக்குதல்களால் வட பகுதியில் பறப்பை மேற்கொள்ள விமானிகள் தயக்கம் காட்டி வருகிறார்கள். இந்த நிலையில் வெளிநாட்டு விமானிகள் எம்.ஐ. 17ஐ செலுத்திச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது." இவ்வாறு புலிகளது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# காசோலை இலக்கம் 559086

திருமலை நகரசபைத் தலைவர் திரு.சூரியமூர்த்தி தனது சொந்த மின்சாரக் கட்டணத்திற்காக, நகரசபை காசோலையை செலுத்தியிருந்தார். இதனை ஏன் மோசடி நடவடிக்கையாக கருதக்கூடாது என்று நகரசபையில் கேள்வி எழுப்பப்படவுள்ளது. இது தொடர்பான செய்தி கடந்தவார முரசில் பிரசுரமாகியிருந்தது. காசோலை இலக்கத்தில் மட்டும் ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டது. சரியான இலக்கம்: 559086. அதுதான் சொந்த நிலுவைக்காக நகரசபைத் தலைவர் செலுத்திய நகரசபை காசோலை இலக்கம்.

# கரிகாலன் மீது கண்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் துணைத் தலைவர் கரிகாலன் மட்டக்களப்பில் தங்கியிருக்கிறார். பத்திரிகையாளர்களையும் சந்தித்து வருகிறார்.

வடபகுதிக்கு செல்ல பத்திரிகையாளர்கள் எவரையும் பாதுகாப்பு படையினர் அனுமதிப்பதில்லை.

அதனால் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் யோசனைப்படி கரிகாலன் மட்டக்களப்பில் தங்கியிருந்து பத்திரிகையாளர்களை சந்தித்துவருகிறார்.

கரிகாலன் பத்திரிகையாளர்களை சந்திப்பதை தடுப்பதற்காகவே அவரை கைது செய்ய உதவுமாறு பொலிஸ்மா அதிபரது அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கரிகாலன் பற்றிய தகவல்களை தருமாறு பின்வரும் தொலைபேசி இலக்கங்களையும் பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவு வெளியிட்டுள்ளது: 693173, 685155, 691500. சகல பத்திரிகைகள் மற்றும் வெகுஜனத் தொடர்பு சாதனங்களிலும் பொலிஸ் மா அதிபர் செயலக அறிவித்தல் படத்தோடு வெளியாகியுள்ளது.

# இரவு நேரத்தில் கல்வீச்சு

தென்மராட்சியில் உள்ள புலிகளது முகாம்கள் சிலவற்றின்மீது இரவு நேரங்களில் கல்வீச்சு சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

யாழ்ப்பாணம் செல்ல, அல்லது வவுனியா வருவதற்கு அனுமதி கிடைக்காமல் அதிருப்தியுற்ற சிலரே இரவு நேரங்களில் தூரத்தில் நின்று கல்லெறிந்துவிட்டு, இருளில் மறைந்து விடுகிறார்கள்.

இடம்பெயர்ந்து வந்து வடமராட்சியில் தங்கியுள்ளவர்களில் 25 வீதத்திற்கு மேற்பட்டோர் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் செல்ல விருப்பம் கொண்டுள்ளார்கள். அவர்களை கட்டுப்படுத்துவதுதான் புலிகள் அமைப்பினருக்கு பெரும் பிரச்சனையாக இருக்கிறது.

# மன்னாரில் விமானத் தாக்குதல்

**மன்னார்-இரணமாதா நகரில் 20-01-1996 அன்று 'புக்காரா' விமான 'ரொக்கெற்' தாக்குதலில் படுகாயமடைந்து சிகிச்சை பெறுவோர் மற்றும் இறந்தோர் விபரம் வருமாறு:**

**செல்வராஜா ஜெயராணி (23) இரணைதீவு, செல்வராஜா கவுசல்யா (10) இரணைதீவு, தங்கவேலு தாரதா (12) இரணைதீவு, ஜேசுதாசன் பிலசில்பி (28) யாழ்ப்பாணம், ஜேசுதாசன் கபின் (10) யாழ்ப்பாணம்,**

**படுகாயமடைந்தோர்:**

**ஜேசுதாசன் றீகான் (8) யாழ்ப்பாணம், கிறிஸ்ரியன் பிறான்கிளின் (8) யாழ்ப்பாணம், திருஞானன் மனோகரசீலன் (17) இரணைமாதா, டன் போஸ்கோ கீதாபோனிலாலன் (20) இரணைமாதா, பாலசிங்கம் ரதி (8) காக்கைதீவு, சபீன் லூஜிஸ்வோஸ் (19) இரணைமாதா, தங்கவேலு குணபாலன் (15) யாழ்ப்பாணம், காணிக்கை லர்து (70) யாழ்ப்பாணம், தங்கவேலு வசந்தி யாழ்ப்பாணம், ஆம்ரோன் சந்திரா (20) யாழ்ப்பாணம், பாலசிங்கம் டிகோசலா யாழ்ப்பாணம், யோகதாசன் றூபான் (7) யாழ்ப்பாணம், மனுவேற்பிள்ளை மறுசேகலா (19) யாழ்ப்பாணம், மரியநாயகம் செல்வமலர் (19) யாழ்ப்பாணம், தங்கவேலி குமாமபல்க (20) யாழ்ப்பாணம், வஸ்தியாம்பிள்ளை செலான் (20) யாழ்ப்பாணம், எட்வேட் றஞ்சிதமலர் (36) யாழ்ப்பாணம், சந்திரிக்கா வேதநாயகம் (35) யாழ்ப்பாணம், எட்மன் கோன்சி (36) யாழ்ப்பாணம். இவர்களில் பலர் இடம்பெயர்ந்து சென்றோர் ஆவர்.**

# ஏப்ரல் முதல் பாடசாலைகள் இயங்கும்?

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளில் தங்கியிருப்பதால் ஏப்ரல் மாதம் வரை பாடசாலைகள் அங்கு இயங்க முடியாமல் இருக்கின்றன.

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உள்ள பாடசாலைகள் சிலவற்றில் ஐந்தாம் வகுப்புக்கு உட்பட்ட வகுப்புக்களை ஆரம்பிக்க முயற்சி செய்யப்பட்டது. பின்னர் அதுவும் நிறுத்தப்பட்டுவிட்டது.

கிளிநொச்சியிலும் வன்னிப் பகுதியிலும் அதே நிலமைதான். எவ்வாறெனினும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் சகல பாடசாலைகளையும் இயங்கச் செய்வதற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா அரசாங்க அதிபர்கள் துரித முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை வெளியே தங்கவைக்க கூடாரங்கள், குடிசைகள் என்பவற்றை அமைக்க உபகரணங்கள் இல்லாமல் இருக்கிறது.

கிடுகு தவிர்ந்த வேறு உபகரணங்களை கூரை அமைக்க கொண்டு செல்வதற்கு வவுனியாவில் படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

கிடுகுகள் கூட குறிப்பிட்ட அளவுதான் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறது.

மலசல கூடங்களை அமைப்பதற்குரிய உபகரணங்களை எடுத்துச் செல்லவும் பாதுகாப்பு காரணம் கூறி அனுமதி மறுக்கப்படுகிறது. அதற்கும் பாதுகாப்புக்கும் என்ன சம்மந்தம் என்று தெரியாமல் சம்பந்தப்பட்டவர்கள் குழம்பிப் போயுள்ளனர்.

# பிரிப்பதே திட்டம் என்கிறார் பாதிரியார்

கிழக்கு மாகாணத்தை துண்டாடி மொழி ரீதியாகப் பிரிப்பதே அரசின் திட்டமாகும். இவ்வாறு அமெரிக்க மதகுருவான ஹாரி மில்லர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் வாழ்ந்துவரும் கிறிஸ்தவ மதகுருவான ஹாரி மில்லர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது, அரசின் தீர்வு யோசனையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்தார்.

மட்டக்களப்பில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையால் மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர். புலிகளோடு வாழ வேண்டும் என்று மக்கள் நினைக்கின்றனர் என்று கூறினார்.

# ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிக்கத் தடை?

வடக்கில் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஐந்தாம் வகுப்புவரைதான் கல்வி கற்க வேண்டும் என்று புலிகள் அறிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகி யிருந்தன.

இது தொடர்பாக முரசுக்கு கிடைத்துள்ள தகவல் வருமாறு: "புலிகள் இயக்கத்தில் உள்ள சாதாரண உறுப்பினர்கள் சிலர் அவ்வாறு சில இடங்களில் கூறியுள்ளனர். ஆனால் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள் எவரும் அவ்வாறு தெரிவிக்க வில்லை.

இயக்கத்திற்கு உறுப்பினர்கள் திரட்டு வதில் ஏற்படும் பிரச்சனைகளால் சில உறுப்பினர்கள் அவ்வாறு கூறியிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

# காடுகளை நோக்கி எறிகணைவீச்சு

மட்டக்களப்பிலும், மட்டக்களப்பு பொலநறுவை எல்லைக் காட்டுப் பகுதிகளிலும் ஷெல் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. விமானத் தாக்குதல்கள் காரணமாக காட்டு மரங்கள் சேதமடைந்துள்ளன.

தொப்பிகலை காட்டுப்பகுதியில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வேலுப்பிள்ளை பத்மநாதன் (வயது21) காயமடைந்தார்.

கிழக்கில் படையினரது நடவடிக்கையின் போது புலிகள் பின்வாங்கிக் காட்டுப்பகுதிகளுக்கு செல்லலாம் என்று கருதி அப் பகுதிகளில் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

மட்டக்களப்பில் உள்ள வேம்பு என்னும் கிராமத்தில் இராணுவ ரோந்துப் பிரிவினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டனர். கே.சுமதி வயது 20, கதிரவேல் வயது 57 ஆகியோரே பலியானவர்களாவர்.

பலியான இருவரில் ஒருவரான சுமதி வாகனேரியில் இருந்து அகதியாக வந்து தங்கியிருந்தவர்.

பல தமிழ் கிராமங்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தொண்டர் நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு

இலங்கையில் எத்தனையோ தொழில்நுட்ப முன்னேற்றங்கள் அறிமுகமாகிவிட்டன. ஆனால் யாழ்ப்பாணத்தில் வடமராட்சியில் இப்போதும் வாளி மலசலகூடங்கள்தான் பாவனையில் இருக்கின்றன, என்று வேதனைப்பட்டுள்ளார் வடபகுதி அரச அதிகாரி ஒருவர்.

இடம்பெயர்ந்த மக்கள் தொகை அதிகரித்துள்ளதால் வாளி மலசல கூடங்கள் பெரும் சுகாதார சீர்கேட்டை விளைவித்து வருகின்றன.

இளம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் மலசல கூடம் சம்பந்தப்பட்ட தொழிலுக்கு வரத் தயங்குவதால், வாளி மலசல கூடங்களை அகற்றி சுத்தம் செய்ய முடியாதுள்ளது. வயதான தொழிலாளர்கள் சிலரை மட்டுமே வைத்துத்தான் வாளிகளை எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

தற்காலிக ஏற்பாடாக வாளியில்லாத மலசல கூடங்களை அமைப்பதற்குரிய ஏற்பாடு செய்ய முடியும். அதற்கான உபகரணங்களை கொண்டு செல்ல படையினர் அனுமதி கொடுக்காமையால் மாற்று ஏற்பாடு தடைப்பட்டுள்ளது.

இதேவேளை வடபகுதியில் முன்பிருந்தே இயங்கிவரும் தொண்டர் நிறுவனங்கள் தவிர, புதிய தொண்டர் நிறுவனங்கள் சென்று இயங்குவதற்கு அரசாங்கம் அனுமதியளிக்க மறுத்து வருகிறது.

ஏற்கெனவே இயங்கும் தொண்டர் நிறுவனங்களும் வெளிநாடுகளில் இருந்து புதிய பிரதிநிதிகளை அழைப்பதாயின் அனுமதி பெறவேண்டும்.

# படையினர் 30 இலட்சம் பாக்கி

(காத்தான்குடி நிருபர்)

மக்கள் மயப்படுத்திய மட்டக்களப்பு போக்குவரத்துச் சபைக்கு, இராணுவத்தினரால் வழங்கப்படவுள்ள பஸ்வாடகைப் பாக்கியான 30 இலட்சம் ரூபாவில் புத்தாண்டில் 9 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.சந்திரசேகரம் தெரிவித்தார்.

மட்டு. போக்குவரத்துச் சபை பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருந்தது. இப்பணம் கிடைத்ததன் பயனாக ஊழியர்களுக்கான சம்பளம், போனஸ், வைத்தியச் செலவு முதலியவற்றை கடந்தவாரம் வழங்கியதாகவும் அவர்மேலும் சொன்னார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பீக்கள் கடந்த மாதம் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது மேற்படி விடயம் தொடர்பாக எடுத்துக் கூறியதையடுத்தே இப்பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒற்றுமை முயற்சிக்கு கூட்டணி மறுப்பு

புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ், ஈ.பி.டி.பி. ஆகிய ஐந்து கட்சிகள் அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பாக தமக்குள் உடன்பாட்டுக்கு வந்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனியாக தனது யோசனைகளை சமர்பிக்கவுள்ளது. ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து பேசிய பின்னரே கூட்டணியினர் தமது கருத்தை பகிரங்கமாகக் கூறுவார்கள் என்று தெரிகிறது.

ஆயுதம் தாங்கிய தமிழ் அமைப்புக்களோடு இணைந்து செயற்படுவதில்லை என்று கூட்டணி கூறிவருகிறது

சில மாதங்களுக்கு முன்னர் ஏனைய தமிழ் கட்சிகளோடு இணைந்து போர்நிறுத்தக் கோரிக்கையை கூட்டணி முன்வைத்திருந்தது. தமிழ் கட்சிகளது பேச்சாளராக ஜனாதிபதியோடு நடந்த சந்திப்பிலும் கூட்டணித் தலைவர் கலந்துகொண்டிருந்தார்.

அரசியல் தீர்வு யோசனை விடயத்தில் கூட்டணிக்குள்ள மறைமுகமான உடன்பாடுதான் ஏனைய தமிழ் கட்சிகளோடு இணைந்து செயற்பட தடையாக இருப்பதாக ஏனைய தமிழ் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

# மாகாண சபையில் நடப்பது என்ன?

## ஆளுநரின் செயலாளரும் கொழும்பில்!

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரை மக்கள் சந்திக்க முடியாத நிலையில் உள்ளனர். இவரும் இவரின் செயலாளரும் கொழும்பில் இருந்து செயற்படுகின்றனர். பாதுகாப்பு காரணமாக ஆளுநர் கொழும்பில் இருக்கிறார் என்பதை ஏற்றுக்கொண்டாலும், அவரது செயலாளர் மாகாண அலுவலகத்தில் இருந்து கொண்டு மக்களின் பிரச்சனைகளை கவனிக்கலாமல்லவா?

நிர்வாக சட்டதிட்டங்கள், அறிவுரைகள், இங்கு காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன. ஆளுநருக்கு அறிவித்தால் அவரின் செயலாளரோ கடிதத்தை குப்பைத் தொட்டியில் வீசிவிடுகிறார். ஜனாதிபதியாவது கடிதம் கிடைத்தமை பற்றி அறிவிக்கிறார்; ஆனால் ஆளுநரின் செயலாளரோ அது பற்றி அறிவிப்பதில்லை.

சுமார் 4 1/2 வருடம் சேவையாற்றிய ஊழியர் ஒருவர் சொந்த கோபதாபத்தின் பேரில் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது. நீதிமன்றத்திற்கு கூட அதிகாரிகள் தங்கள் தலைக் கறுப்பைக் காட்ட அஞ்சுகிறார்கள்.

இரண்டு தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் சுமார் 4 வருடங்களாக ரூபா 1000/- மாதச் சம்பளமாக பெற்று வருகின்றார்கள். இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் இல்லை. நியமனங்களில் குளறுபடி; தன்னிச்சையான செயல்பாடுகள், புறக்கணிப்புக்கள், சொல்ல முடியாத சீர்கேடுகள் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடந்து கொண்டே இருக்கின்றன.

அரசாங்க கட்டட வேலைகள் அரை குறையுடன் வெய்யிலிலும் மழையிலும் காய்ந்தும் நனைந்தும்கொண்டு இருக்கின்றன. கல்வி அமைச்சுக்குரிய கட்டடம் பாழடைந்து கொண்டு இருக்கிறது. இது ஒரு புதிய கட்டடம். மேல்மாடி வேலைகள் பூர்த்தி இன்மையால், இலட்சக்கணக்கான ரூபாய்களுக்குரிய இவ்வேலை எவருக்கும் பிரயோசனப்படாத வகையில் சீரழிந்து கொண்டு இருக்கின்றது.

சிங்களம், தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் சுமார் ஒரு வருடத்திற்கு அதிகமான காலத்தை கழித்தும் சட்டபூர்வமாக அவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. அவர்களின் மாத வேதனம் 1500/-ரூபா மட்டுமே. எந்தவித அரசாங்க கொடுப்பனவுகளுக்கும் இவர்கள் உரித்துடையவர்கள் அல்லாதவர்களாகவே இருந்து வருகிறார்கள்.

எதைக் கேட்டாலும் ஆளுநரின் தலையில் போட்டுவிட்டு அதிகாரிகள் தப்பி விடுகிறார்கள். தங்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக்கூட சில அதிகாரிகள் பாவிப்பதில்லை. சிலர் அதிகாரங்களை துஷ்பிரயோகம் பண்ணுவதிலே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.

ஜே.எஸ். மரியதாஸ்-பாலையூத்து, திருமலை.

# கார்ட்டூன் மூலை




# அம்பாறை றவுண்டப் செய்திகள்!

(அம்பாறை மாவட்ட நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேசசபை ஒன்றின் முக்கியமான செயலமர்வு அண்மையில் நடைபெற்றபோது, ஆளும் தரப்பில் தவிசாளர், உபதவிசாளர் உட்பட மூவர் மட்டுமே பிரசன்னமாக இருந்தனராம். எதிர்த்தரப்பினர் ஐந்து பேரளவில் பிரசன்னமாகவிருந்தனர். 1996ம் ஆண்டுக்கான பஜட் அங்கீகரிக்க வேண்டிய இந்த செயலமர்வில் நிலமையைப் புரிந்து எதிர்த்தரப்பினர் "பச்சைக்கொடி" காட்டியதால் பஜட் அங்கீகாரம் பெற்றதாம். "உள்நாட்டுப் போர்" உக்கிரமடைந்துள்ளதோ?

### ★ மீண்டும் தலைவர்!

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச செய்தியாளர் சங்கத்தின் தலைவராக ஜனாப். ஏ.எல்.எம்.சலீம் (ஜே.பி.) மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### ★ தலைவர் உரை! தலைமைத்துவ உரை!!


ஆலங்குளம் கிராமத்திற்கான மின்சாரத்திட்ட திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும், சி.ல.மு.காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஜனாப். ரவூப் ஹக்கீம், திகாமடுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப். யூ.எல்.எம். முகைடீன் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர். விழாப் பொதுக் கூட்டத்தில் ஒரு வேடிக்கை! தலைவர் உரை என்று ஒருவரும், தலைமைத்துவ உரை என்று மற்றொருவரும் உரையாற்றியதுதான் அந்த வேடிக்கை. உள்போட்டியோ?

### ★ பாராட்டு!

ஆலங்குளம் கிராமத்திற்கு மின் வசதி கிடைப்பதற்கு ஆவன செய்த அமைச்சர் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரபுக்கு பாராட்டும், நன்றியும் தெரிவித்தார் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஐ.தே.க. உறுபினர் திரு.பீ.எச். சிறிபால! அத்துடன் அவர் நிற்கவில்லை. திகவாப்பி பகுதிக்கு மின்சாரம் தரவும் அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமெனவும் பகிரங்கமாகக் கோரினார்!

# பலியாகிவிட்ட பரிவர்த்தனை நிலையம் கண்கள் திறக்குமா? காரியம் நடக்குமா?

கல்முனையில் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட தொலைபேசி பரிவர்த்தனை நிலையம், குண்டுத்தாக்குதலுக்குள்ளாகி 'அகாலமரணமடைந்த'பின்னுள்ள தோற்றத்தையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.



இந்தத் தாக்குதல் காரணமாக மேற்படி பரிவர்த்தனை நிலையத்தினூடாக இயங்கிய சுமார் 900 தொலைபேசிகள் முற்றாகச் செயலிழந்து, தொலைபேசிப் பாவனையாளர்களும் பொது மக்களும் பெரும் அவலங்களுக்குள்ளாகியுள்ளனர்.

1980ம் ஆண்டு சூறாவளி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த பரிவர்த்தனை நிலையம் ஐந்து வருட ஆயுள் உத்தரவாதத்துடனேயே நிறுவப்பட்டதாகும்.

எனினும் குற்றுயிருடன் 15 வருடங்களைக் கடந்து உயிர் ஊசலாட்டத்துடன் இயங்கிவந்த இப்பரிவர்த்தனை நிலையம் தகர்க்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலமையை சீராக்குவதிலும், புதிய பரிவர்த்தனை நிலையம் ஒன்றை பாதுகாப்பான பிரதேசத்தில் நிறுவி, கல்முனைப் பிரதேச மக்களுக்கு மீளவும் தொலைபேசி வசதி அளிக்க சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. கண்கள் திறக்குமா? காரியம் நடக்குமா?

# மரணத்தில் சந்தேகம்!

கடந்த இரண்டு மாதங்களில் குவைத்தில் வீடுகளில் பணிபுரிந்த மூன்று இலங்கை பணிப்பெண்கள் மர்மமான முறையில் இறந்துள்ளனர். இவற்றில் 13.12.95 அன்று அல்கிரேன் என்ற இடத்தில் இலங்கையைச் சேர்ந்த அநுராதபுரம் கோவில் பொந்தாவ என்னும் முகவரியைச் சேர்ந்த தாஜுதீன் பேவி நோனா என்பவரும் ஒருவர். இவருக்கு வயது 18.

இரவில் குளிருக்கு நெருப்பு போட்டு தூங்கியவேளையில் நெருப்பினால் ஏற்பட்ட புகையின் காரணமாகவே இறந்துள்ளதாக இப்பெண் பணிபுரிந்த வீட்டுக்காரர்கள் காரணம் சொல்கின்றனர். இதில் எந்தளவு உண்மை உண்டு என்பது தெரியாமல் குவைத்தில் பணிபுரியும் அனைத்து நாட்டு மக்களும் அச்சத்துடன் காணப்படுகின்றனர், மேற்படி இறந்த பணிப்பெண்ணுடைய ஜனாசா இலங்கைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

சாகுல்கமீட், சுபியான் ஜாபீர் அல்-அலி, குவைத்.

# பகலிலும் நுளம்புச் சுருள்!

களனிப்பகுதியில் பகல் வேளையிலும் கூட நுளம்புச் சுருள் பாவிக்கப்படுகிறது. காரணம் களனி கங்கையை அடுத்து சதுப்பு நிலங்களிலும் குட்டைகளிலும் நீர் தேங்கி நிற்பதேயாகும். களனி, பேலியாகொடை தொடர்ந்து களனி கங்கையை அடுத்த பிரதேசங்கள் வரை நுளம்புத் தொல்லை அதிகம். இரவில் சொல்லவும் வேண்டுமோ?

இப்பகுதி மக்கள் பலர் முறையிட்டும் பிரயோசனமில்லை. மருந்து தெளிப்பது கிடையாது. சுகாதார பரிசோதகர்கள்கூட கண்கொண்டு பார்ப்பதில்லை. யானைக்கால் நோய், மூளைக்காய்ச்சல், மலேரியா போன்ற பயங்கர ஆள்கொல்லி நோய்கள் தீவிரமாகப் பரவி வருகிறது. தக்க நடவடிக்கை எடுப்பார்களாக!

கல்லொளுவை பாரிஸ்

# விவசாயிகள் இடம் பெயர்வு


மட்டக்களப்பு மாவட்டத்தில் வயல் சார்ந்த பிரதேசங்களில் தற்போது சூரிய கிரகண இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் இடம்பெயர்ந்துள்ளனர். இன்னும் ஓரிருவாரங்களில் அறுவடை செய்யப்படவேண்டிய வயல்களைக் கைவிட்டு சந்தனமடு, வடமுனை பிரதேச விவசாயிகள் இடம் பெயர்ந்துள்ளனர்.

கடந்த வருட பெரும் போகச் செய்கையில் பருவமழை பொய்த்ததால் உற்பத்தி கணிசமான அளவு குறைந்துள்ளது. தற்போது எஞ்சிய வயல்களையும் கைவிட்டு விவசாயிகள் வெளியேறி வருவதால் உணவுப் பஞ்சம் இவ்வருடம் ஏற்படலாமென அஞ்சப்படுகிறது.

மேலும் மண்முனை, அம்பிலாந்துறை, குறுமண்வெளி துறைகள் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு பிரதேசத்திற்கு வாகனங்களை எடுத்துச் செல்ல விசேட அதிரடிப்படையினர் கடந்த சில வாரங்களாகத் தடைவிதித்துள்ளனர்.

இதனால் படுவான்கரைப் பிரதேசத்தில் அறு வடை செய்வதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள். சூடடிப்பதற்கு டீசல் எடுத்துச் செல்லவும், நெல் மூடைகளை நகருக்கு எடுத்து வந்து சந்தைப்படுத்தவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


## கலை அலங்கார வகுப்புக்கள்



- ★ சிகை அலங்காரம்
- ★ அழகுக்கலை
- ★ மணப்பெண் அலங்காரம்
- ★ 4 மாத கற்கை நெறி

ஆரம்பம்: 01-02-96

FASNAZ BEAUTY SALON

இல.142, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை,
கொழும்பு-06.
தொலைபேசி: 589457


# தடங்கலான தேனிலவு வரம்புமீறும் சோதனைகள்

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை நகரில் சுற்றிவளைப்புகள் அதிகரித்துள்ளன. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றதைத் தொடர்ந்தே சுற்றிவளைப்புகள் இடம்பெறுகின்றன.

உவர்மலைப் பகுதியில் இடம் பெற்ற சுற்றிவளைப்பின் போது ஹோட்டல் ஒன்றில் தங்கி தேனிலவு அனுபவித்துக் கொண்டிருந்த மணமகன் ஒருவரும் கைது செய்யப்பட்டார். எனினும் பலரது தலையீடுகளால் சிலமணிநேரத்தில் இவர் விடுதலையானார்.

கட்டைபறிச்சான் நெற்களஞ்சிய சோதனைச் சாவடிகளில் சோதனைகள் கடுமைப்படுத்தப்பட்டுள்ளன. மூதூரிலிருந்து வாங்கி வரும் பொருட்கள் அனைத்தும் கீழே கொட்டிப் பரிசோதிக்கப்படுகின்றன. பயணிகள் தனித்தனியாக மறைவிடத்தில் வைத்து ஆடைகளனைத்தும் சோதனை செய்யப் படுகின்றனர். ஆண்களை ஆண்களும் பெண்களைப் பெண்களும் சோதனை செய்கின்றபோதிலும் பாலியல் சில்மிஷங்கள் சிலரால் மேற்கொள்ளப்படுவதாக பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கும்புறுபிட்டிப் பகுதியில் மீளவும் குடியேறிய மக்கள் தனித்து வாழ்கின்ற நிலையில் கவலையடைந்துள்ளனர். சுமார் 750 குடும்பங்கள் வாழ்ந்த கும்புறுபிட்டியில் தற்போது 75 குடும்பங்களுக்கும் குறைவானவர்களே குடியேறியுள்ளனர். மக்கள் செறிவு இன்மையால் தாங்கள் வனாந்தரத்தில் வாழ்வது போன்ற மனோநிலையில் இருப்பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

-சஞ்சயன்-


## புறூஃப் ரீடர் தேவை


பதிப்பகம் ஒன்றிற்கு தமிழில் நல்லறிவுள்ள அனுபவமிக்க ஒப்புநோக்காளர் (புறூஃப் ரீடர்) தேவை. தொடர்பு கொள்ளவும்.

மே/பா. தினமுரசு வாரமலர், த.பெ.இல.1772, கொழும்பு.



மரண அறிவித்தல்

## கேட்க யாருமில்லை!



மலர்வு: 22-11-1964
உவர்மலை, திருமலை.

மறைவு: 5-1-1996
கோவில் குளம், வவுனியா.

### தோழர் அர்ச்சுனா
### சிங்கராசா நேசராசா

புளொட் மத்திய குழு உறுப்பினரும், முன்னாள் திருமலை மாவட்ட புளொட் பொறுப்பாளருமான அன்பு நெஞ்சன் அர்ச்சுனாவிற்கு அஞ்சலிகள்.

*வீரரை அழிக்க – நீ*
*விலை பேசினாயாம் – உன்*
*கொலைக்குக் கிடைத்த பதில்!*
*இல்லை. இல்லை.*
*உன் எடுப்பான*
*கோலத்திற்கும் கொள்கைக்கும் பயந்த*
*கோழைகளால் கோரமாக....*
*ஐயோ! கேட்க யாருமில்லை!*
*கேட்பின்! "மீட்க" யாருமில்லை.!*

சிவம் – நண்பர்கள்
கொழும்பு-04

Advt.





## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.) J.P
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி (J.P)
(J.D.G.A.N.)
**P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD**
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இரண்டு தோணியில் கால்

## நீண்ட நிலப்பரப்புக்களில் படைத்தரப்பின் பலம் நெகிழ்ந்து பரவலாவதை புலிகள் ஆவலோடு எதிர்பார்க்கின்றார்கள்.

**நாரதர்**

யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்கு பின்னர் படைத்தரப்புக்கு சூரியன்மீது ஒரு பிடிப்பு வந்துவிட்டது.

கிழக்கிலும் ஒரு 'சூரிய கிரண' நடவடிக்கையில் படைத்தரப்பு இறங்கியது.

கிரணம் சூழ்வதற்கு முன்னரே புலிகள் தந்திரோபாயமாக தமது அணிகளோடு பின்வாங்கிவிட்டதால், மழை வந்ததால் தடைப்பட்ட கிரிக்கெட் ஆட்டம் போல படையினரது முதல் கட்ட நடவடிக்கை முடிந்து போனது.

சூரியக் கிரண நடவடிக்கையில் தமது தரப்பில் எவ்வித இழப்புமில்லை என்று புலிகள் வடக்கில் அறிவித்திருக்கிறார்கள்.

சில பகுதிகளில் மட்டும் மேலோட்டமான எதிர்ப்பை புலிகள் காட்டினார்கள். ஏற்கெனவே புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளில் சிக்கி படைத்தரப்பில் சிலர் காயமடைந்தார்கள்.

படைத்தரப்பின் சூரிய கிரண நடவடிக்கையில் கிழக்கில் புலிகளது பலத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதற்கு கரிகாலனின் பத்திரிகையாளர் மாநாடு ஒரு சான்று.

இராணுவ சோதனை முகாம்களை கடந்துபோய் கரிகாலனை சந்தித்து பேட்டி எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் கொழும்பு பத்திரிகையாளர்கள்.

ஒரே ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டு பாதுகாவலர்களை பின்னால் எற்றிக் கொண்டு, பந்தாவே இல்லாமல் வந்து பத்திரிகையாளரை சந்தித்திருக்கிறார் கரிகாலன்.

கிழக்கை முழுவதும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க இரு தரப்பிடமும் பலம் போதாது.

புலிகளைப் பொறுத்தவரை கிழக்கில். காடுகளைத்தான் அதிகம் நம்பியிருக்கிறார்கள்.

படைத்தரப்பு முன்னேறினால் மரபுச் சமர் முறையில் நின்று போரிடக்கூடிய ஆட்பலமோ, கனரக ஆயுதபலமோ கிழக்கில் புலிகளிடம் இல்லை.

கிழக்கின் தரையமைப்பு புலிகளை விட படைகளுக்குத்தான் அதிக சாதகம்.

எனவே, கிழக்கில் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் அடிக்கடி கைமாறுவது தவிர்க்க முடியாத ஒரு அம்சம்.

அதே சமயம் முன்னரைவிட, அதாவது இரண்டாம் கட்ட ஈழப்போரை விட, தற்போது கிழக்கில் புலிகளது ஆட்பலமும், படைத்தரப்பை நிம்மதியாக இருக்கவிடுவதில்லை என்ற உத்வேகமும் அதிகமாகியிருக்கிறது.

வடக்கிலும், தலைநகரிலும் மட்டுமே மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்கள் மூன்றாம் கட்ட ஈழப்போருடன் கிழக்குக்கும் நகர்ந்துள்ளன.

பெண்களும் கணிசமானளவு திரட்டப்பட்டு காடுகளில் வைத்து பயிற்சியளிக்கப் படுகிறது.

'சாதகமான சகல முனைகளிலும் தாக்கு' என்ற கெரில்லா யுத்த சூத்திரத்தை உடும்புப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெரிய முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் என்றில்லை, ஒரு சிறிய காவலரண் என்றாலும் வாய்ப்புக் கிடைத்தால் குறிவைக்கப்படுகிறது.

பேருந்துகளில் பயணம் செய்யும் பொலிசாரையும், படையினரையும் கூட புலிகள் துருவித் துருவித் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

எதுவும் கிடைக்கவில்லையென்றால் ட்ரான்ஸ்போமர்களையாவது தகர்த்து விடுகிறார்கள்.

ஏனைய தமிழ் அமைப்புக்களது உறுப்பினர்கள் கண்களில் பட்டாலும் சுட்டுத்தள்ளுகிறார்கள்.

கிழக்கில் தமது கைகள் மேலோங்கியிருப்பதை தினசரி தெரிவித்துக் கொண்டிருப்பதுதான் புலிகளது ஒரே நோக்கம்.

உண்மையில் படைத்தரப்புக்கு பெரிய தலைவலிதான். எதிரி யார் என்று அடையாளம் காணமுடியாதபோது, சாதாரண பொதுமக்களைப் பார்த்து முறைக்கிறார்கள்.

சோதனைச் சாவடிகளில் உள்ள படையினர் சலித்துப் போய்விட்டார்கள். அவர்களது மெதுவான மந்தமான சோதனைகளால் பயணிகள் நீண்டநேரம் தவித்துக் கொண்டிருக்க வேண்டி ஏற்படுகிறது.

சில 'குறும்புக்கார' படையினர் சோதனைகளின்போது விஷமம் செய்கிறார்கள். பெண் இராணுவத்தினர்கூட 'கிள்ளல்' பண்ணுகிறார்கள் என்று புகார் கிளம்பியிருக்கிறது.

புலிகளின் நடவடிக்கையால்தான் இப்படியான சிரமங்கள் ஏற்படுத்துவதாக மக்கள் நினைத்துக் கொள்வார்கள் என்று ஒரு தவறான நம்பிக்கை அரசாங்கத்திடம் இருக்கக்கூடும்.

ட்ரான்ஸ்போமரைத் தாக்குவது, பேருந்துகளில் செல்லும்போது தாக்குவது, வாகனங்களை கடத்துவது போன்ற புலிகளது நடவடிக்கைகளுக்கு எதிராக முணு முணுப்புக்கள் இருக்கத்தான் செய்கின்றன.

மின்சாரம் இல்லாமல், தொலைபேசித் தொடர்புகள் இல்லாமல் மக்களுக்கு ஒரு செயற்கையான நெருக்கடியை புலிகள் ஏற்படுத்த நினைப்பதை யாரும் விரும்புவதாகத் தெரியவில்லை.

இருட்டில் இருந்தால்தான் மக்கள் விடுதலைப் போருக்குரிய மனப்பக்குவத்தில் இருப்பார்கள் என்று புலிகள் நினைப்பதும் தவறான நம்பிக்கைதான்.

இரு தரப்புமே தமது எதிரிகளை தேடி அலையும்போது இடையில் மாட்டிக்கொண்டு முழிப்பதும், உயிரிழப்பதும், பயந்து கொண்டிருப்பதும் பொதுமக்கள்தான்.

படைத்தரப்பு தனது ஆட்பலத்தை அதிகரித்து கிழக்கில் இரண்டாம் கட்ட நடவடிக்கைக்கு தயாராகி வருகிறது.

பேருந்துகளில் படையினர் சென்று குவிந்து கொண்டிருக்கிறார்கள். பதுளை வீதியை சுத்தப்படுத்தி தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவர படைத்தரப்பு நினைப்பதாகத் தெரிகிறது.

எனினும் கிழக்கில் புலிகளது தாக்கும் திறன் அதிகரித்திருப்பதால், முன்பைவிட அதிக படைபலத்தை கிழக்கில் வைத்திருந்தால்தான் படைத்தரப்பு தனது அணிகளையும், முகாம்களையும் பாதுகாக்க முடியும்.

அவ்வாறு செய்யும்போது வடக்கிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் படைத்தரப்பின் பலம் குறைய வேண்டியிருக்கும்.

புதிய ஆட்திரட்டல்கள் மூலம் அரசு தனது படைபலத்தை அதிகரிக்க முயற்சிக்கிறது. ஆனால் ஒரு வரையறைக்கு அப்பால் படைபலம் பெருகினால் அதற்கான செலவீனங்களை நாடு தாங்கமுடியாமல் போகலாம்.

தற்போது கிழக்கில் உள்ள படைத்தரப்புக்கு இரண்டு சவால்கள் இருக்கின்றன.

ஒன்று; தற்போதுள்ள முகாம்களை பாதுகாத்து வைத்திருப்பது.

இரண்டு; முன்னேறும் நடவடிக்கைகள் மூலமாக புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கணிசமானவற்றை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது.

இரண்டுக்கும் ஆட்பலம் தேவை. அரச படைகளின் முக்கிய பலமே அதன் ஆட்பலத்தை பொறுத்ததுதான்.

தற்போதுள்ள நிலையில் படைத்தரப்பு தனது முகாம்களை பாதுகாக்கக்கூடியளவில் இருக்கிறது. குறிப்பிட்டளவு முகாம்களே இருப்பதால் அதிகளவு ஆட்பலத்தால் பாதுகாப்பை கவனிக்க முடிகிறது.

ஆனால், மேலும் புதிய முகாம்களை நிறுவினால் ஆட்பலம் பரவலாக வேண்டி ஏற்படும். புலிகளுக்கும் சுலபமான இலக்குகள் வாய்த்துவிடும். அதனை கருத்தில் கொண்டுதான் முகாம்களது எண்ணிக்கை கிழக்கில் குறைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் புலிகளது முதுகெலும்பை உடைத்துவிட்டால், கிழக்குக்கான விநியோகம் தடைப்பட்டுவிடும். கிழக்கில் உள்ள புலிகள் தனிமைப்பட்டுவிடுவார்கள். உற்சாகமும் குறைந்துவிடும். அந்த நேரத்தில் கிழக்கை கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நடவடிக்கையை ஆரம்பிக்கலாம் என்றுதான் படைத்தரப்பு முதலில் திட்டமிட்டது.

ஆனால், யாழ்ப்பாண போர்க்களத்தில் கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாகி விட்டது.

பிரதேசத்தை பிடித்துவைத்துக் கொண்டு அடுத்தது என்னவென்று தெரியாமல் படைத்தரப்பு சலித்துப் போய் விட்டது.

இலட்சக்கணக்கான மக்களை நகர்த்திக் கொண்டுபோய், வன்னிப் பகுதியை தளமாக்கி விட்டார்கள் புலிகள்.

அடுத்த கட்ட நடிவடிக்கை ஒன்றை வடக்கில் மேற்கொண்டால்கூட, வன்னித் தளப்பிரதேசத்தில் இருந்து பிரபாகரன் தனது அணிகளை அனுப்பிக்கொண்டே இருக்கப் போகிறார்.

வடக்கிலும், கிழக்கிலும் ஒரே நேரத்தில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட படைத்தரப்பால் முடியும். ஆனால் அந்த நடவடிக்கையை பாரிய நடவடிக்கையாக மேற்கொள்ளக் கூடிய ஆட்பலம் படைத்தரப்பிடம் இல்லை.

யாழ்ப்பாணத்தில் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்ட பகுதிகளுக்குள்கூட புலிகளது நடமாட்டங்களை படைத்தரப்பால் கட்டுப்படுத்த முடியவில்லை.

மானிப்பாயிலும், வட்டுக்கோட்டையிலும் புலிகளது அணிகள் சர்வசாதாரணமாக நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். அங்கெல்லாம் சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு முகாம்களை அமைத்தால் படைபலத்தை பரவலாக்க வேண்டி ஏற்படும்.

1000 பேர் கொண்ட முகாம்களுக்கு பதிலாக 500 பேர் கொண்ட முகாம்களை அமைக்கவேண்டும். புலிகள் சுலபமாகத் தாக்கிவிடுவார்கள்.

இவ்வாறான நிலையில் வடக்கில் மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கை மூலம் புதிய பகுதிகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால் நீண்டகால நோக்கில் நஷ்டம் படைத்தரப்புக்குத்தான்.

அப்படியானால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. கிழக்கை சில காலம் மறந்து விட்டு வடக்கில் படைத்தரப்பின் முழுப் பலத்தையும் குவிக்க வேண்டும்.

அது முடியாத காரியம். கிழக்கு பறிபோய்விட்டது என்று ஐக்கிய தேசியக்கட்சி சொல்லிக்கொண்டிருக்கிறது.

கிழக்கில் புலிகள் நடத்தும் தாக்குதல்களை சுட்டிக்காட்டி ஐக்கிய தேசியக்கட்சி தனது பிரசாரத்திற்கு காரம் சேர்த்துக் கொள்ளும்.

யுத்த வெற்றிகளை துருப்புச் சீட்டாக பயன்படுத்த நினைக்கும் ஆளும்கட்சிக்கு அது பெரிய சங்கடமாகிவிடும்.

எனவே-கிழக்கை தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக காட்டிக்கொள்ள அங்கு பாரிய நடவடிக்கை ஒன்றில் படைத்தரப்பு ஈடுபட்டேயாகவேண்டியுள்ளது.

வடக்கிலும், கிழக்கிலும் ஒரே நேரத்தில் நடவடிக்கையில் ஈடுபடுவது இரண்டு தோணியில் கால்வைப்பது போன்றதுதான்.

கிழக்கில் நடவடிக்கையில் ஈடுபட வடக்கிலிருந்தும் படைத்தரப்பு தருவிக்கப்பட வேண்டும் என்று கிழக்கின் இராணுவ தலைமை கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஏற்கெனவே பல ஆயிரக்கணக்கான படையினர் கிழக்கில் குவிக்கப்பட்டு தாக்குதலுக்கு தயாராகிவருகின்றனர்.

விரைவில் சூறாவளி வேகத்தில் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகலாம்.

சூறாவளி வீசும்போது புலிகள் எதிர்த்து நின்று தமது அணிகளை இழக்கப்போவதில்லை.

படையினர் நிலைகொள்ளும்வரை காத்திருந்துவிட்டு பின்னர் தாக்கத் தொடங்குவார்கள்.




வடக்கிலும், கிழக்கிலும் ஒரே சமயத்தில் நீண்ட நிலப்பரப்புக்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க படைத்தரப்பினர் நினைப்பது தவறான போர்த்தந்திரமாகப் போகிறது.

**அரச படைகளது பிரதான பலம்:** ஒன்று குவிந்திருக்கும் ஆட்பலமும், அதனைச் சார்ந்த மரபுப் போர் முறையும்.

**புலிகளது பலம்:** குறைந்த ஆட்பலத்தை வைத்து கெரில்லா போர் முறையில் ஈடுபடுவது.

படைத்தரப்பு நீண்ட நிலப்பரப்புக்களில் தனது ஆட்பலத்தை பரவலாக்கிக் கொள்ளும் போது ஒன்று குவிந்திருப்பதில் நெகிழ்வு ஏற்படும்.

அதனைத்தான் கெரில்லாக்கள் ஆவலோடு எதிர்பார்ப்பார்கள். தாக்குவதற்கு அதுதான் வசதி.

பிரதேசங்களை கைப்பற்றுவது அரசின் யுத்த வெற்றிப் பிரசாரங்களுக்கு தற்காலிக ஊட்டம் கொடுத்தாலும், நிரந்தர நிலை கொள்ளலுக்கு உத்தரவாதமாக அமையாது.

□ □

ஜனாதிபதியோடு இரண்டாம் சுற்றுப் பேச்சு நடத்தியிருக்கிறார் அமைச்சர் தொண்டமான்.

முதல் சுற்றுப் பேச்சு திருப்தியில்லாமல் முடிந்திருந்தது.

ஜனாதிபதித்தேர்தலில் இ.தொ.கா உளப்பூர்வமாக ஆதரவு காட்டவில்லை என்று ஜனாதிபதி சொல்ல, அதற்கு தொண்டா விளக்கம் சொல்ல அத்தோடு முதல் சுற்று முடிந்திருந்தது.

கடந்த வாரம் மீண்டும் ஜனாதிபதியைச் சந்தித்தார் தொண்டா.

திருப்தியாக இருந்தது என்று வழக்கமான சம்பிரதாயப்படி பத்திரிகைகளுக்கு சொல்லியுமிருக்கிறார்.

இ.தொ.காவின் கோரிக்கைகளை ஜனாதிபதி செவிமடுத்தார் என்பதுமட்டும் அக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கான உத்தரவாதமாக கொள்ள முடியாது.

தொண்டாவின் துருப்புச் சீட்டு அவரிடமுள்ள வாக்கு வங்கிதான்.

அதனைவைத்துதான் ஜே.ஆர், மற்றும் பிரேமதாசா போன்ற பெரும் யானைகளையே கட்டிப்போட்டுவைத்திருந்தார் தொண்டா.

அலட்சியமாகப் பேசிய முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்காவைக் கூட இறுதியில் தொண்டாவோடு கைகுலுக்க வைத்ததும் அந்த வாக்கு வங்கியின் பலம்தான்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிக்கா இ.தொ.காவின் வாக்கு வங்கியை நம்பியிருக்கத் தேவையில்லை என்று நினைக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு கிடைத்த வாக்குகளை கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு அவ்வாறான முடிவுக்கு வந்திருக்கலாம்.

தொண்டா முரண்டுபிடித்தால் மலையக மக்கள் முன்னணியை வைத்து ஏதாவது செய்து கொள்ளலாம் என்றும் கணக்குப் போடலாம்.

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளில் அரசு வெற்றி பெறுவதும் தொண்டாவின் கையில் உள்ள வாக்கு வங்கியை பலவீனப்படுத்தும்.

யுத்தத்தில் வெற்றி பெற்ற தலைவி என்ற புகழோடு பெரும்பான்மை இன மக்களது பெருவாரியான வாக்குகளை கவரமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டால், இ.தொ.கா போன்ற கட்சிகளது தயவை ஜனாதிபதி நாடவேண்டி ஏற்படாது.

அதனால் பாதிப்பு இ.தொ.காவுக்கு மட்டுமல்ல, மலையக மக்கள் முன்னணிக்கும்தான்.

தொண்டா அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர். புதிய சூழ்நிலைக்கு ஏற்றப்படி தனது வியூகத்தை வகுக்கத் தெரிந்தவர்.

அதனால்தான் விட்டுப் பிடிக்கும் தந்திரத்தோடு போய்க்கொண்டிருக்கிறார்.

**தொண்டாவின் பாராட்டுக்களில் மறைமுகமான நன்றி தெரிவிப்பும் அடக்கம்**


அரசின் கணிப்புக்கள் பொய்யாகி, தொண்டாவின் வாக்கு வங்கியை நாடிவர வேண்டி ஏற்பட்டால், அப்போது தொண்டா இப்போது இழப்பதற் கெல்லாம் சேர்த்து வட்டியும் முதலுமாக வாங்கிக் கொள்ளுவார்.

அதனால் தொண்டா இப்போது நம்பியிருப்பது பிரபாகரனைத்தான். அவர் தனது அணிகளை நகர்த்தி படைத்தரப்பின் வெற்றிச் செய்தியை சேதப்படுத்தினால், அரசுக்கு அரசியல் ரீதியான பலம் குறையும்.

அப்போது இ.தொ.கா போன்ற கட்சிகளது உதவியும், அவற்றின் வாக்கு வங்கியும் ஆளும் கட்சிக்கு நிச்சயம் தேவைப்படும்.

பிரபாகரனை நேரடியாகவே பாராட்டிப் பேசும் ஒரே ஒரு தலைவர் தொண்டாதான். அந்த பாராட்டுக்களுக்குள் நன்றி தெரிவிப்பும் அடக்கம் என்பது பலருக்குத் தெரியாது.

# அதிரடி அய்யாத்துரை



சட்ட நகலை பிரபலசட்ட நிபுணர்களைக் கொண்ட கூட்டான கட்சி நுணுக்கமாக ஆராய்வதாக அறிக்கை வந்தது. அதில் எ('ன அப்படியொரு சூக்குமம் ஒளிந்துகிடக்குது எண்டு தெரியேல்லை. ஒருவேளை மூக்குக் கண்ணாடிகளை தவறவிட்டுப் போட்டு கண்களை இடுக்கிக்கொண்டு வாசித்துப் பார்த்தவையோ?

கிழக்கில் பணியாற்றும் சிகப்பு சிலுவைக்காரர் சிரத்தையாக கருமம் பார்க்கேல்லையாம் அவை மட்டுமில்லைப் பாருங்கோ, பல தொண்டு நிறுவனத்தாரும் தங்கடை புனர்வாழ்வை மட்டும்தான் கவனிக்கினம். நல்ல சம்பளம். கொழும்பில் கொழுத்த வாடகையில் வீடு. வாகன வசதி. இப்படியாக புனர்வாழ்வு நிதியில் பெரும்பகுதி புல்லுக்குப் போக மீதிதான் நெல்லுக்குச் சேருகிறது. நெல்லுக்கும் இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கு பொசியும் எண்டது பழைய கதை.

ராஜ ராஜ சோழனின் மறுபெயர் கொண்ட கிழக்கின் ரெண்டு எழுத்துத் தலைவருக்குத்தான் பலத்த மரியாதை. பத்திரிகையாளர்கள் வலைபோட்டு தேடித் திரியினம். படைத்தரப்பாரால் பிடிக்க முடியாதவரை பத்திரிகையாளர் பிடிச்சு பேட்டியும் எடுத்துக் கொண்டு வந்தது சாதனைதான். அரசியல்வாதியாகத் தயார் எண்டு அவர் சொன்னதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் வெளியிட்ட பேட்டியில் கூறப்பட்டது உண்மையில்லையாம். மொழி பெயர்ப்பில் ஏற்பட்ட கோளாறாம். அதை திருத்தம் செய்யத்தான் கடந்தவாரம் பத்திரிகையாளர்களை சந்திச்சு, போர் என்றால் போர்தான். பேச்சே கிடையாது எண்டு ஒரே போடாய் போட்டவராம்.

சிங்கப்பூரில் தமிழ் அமைப்புக்களது ஒற்றுமை மாநாடு. இலவச விமான ரிக்கெற் என்றவுடன் தமிழ் கட்சிகளது பிரதிநிதிகளும் ஓ.கே. சொல்லிப்போட்டினம். ஆயுதம் ஏந்திய கட்சிகளோடு சேரமாட்டோம் எண்டு அடம்பிடிக்கும் கூட்டான கட்சியும் சிங்கப்பூரில் போய் சேர்ந்து பேச சம்மதம் சொல்லிப் போட்டுதாம். அதென்ன பாருங்கோ, கொழும்பிலை கூடிப்பேச மட்டும்தான் கொள்கை குறுக்கே நிக்குமாக்கும். ஓசிப் பயணம்! ஏன் விடப் போகினம்?

பாதாள உலகக் கோஷ்டிகளும் நவீனரக துப்பாக்கிகளோடு களம் கண்டு ஒரு பயத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கினம். அதெல்லாம் கிடக்க, இந்த சண்டைகளால் கிளம்பும் டும் டும் ஓசைகள் வதந்திகளையல்லோ கிளப்புது. பள்ளிக்கூடத்திலை குண்டு வைக்கப் பட்டது எண்டு கொழும்பிலை வதந்தி பரவி, பெற்றோர்கள் பதறியடித்து பள்ளிகளுக்கு படையெடுத்ததும் அப்படித்தான். முந்தி மாதிரி கத்திகளை பாவிச்சு சண்டை செய்தால் 'சதக் சதக்' எண்டு காரியம் முடியும். சனமும் பயந்து நடுங்காது.

ஏற்கெனவே ஒரு வான் பறவை விழுந்த கதை தணிக்கையோடை போச்சு. அடி முடி காணமுடியேல்லை. இப்போது மற்றொரு பறவை வடக்கில் விழுந்திருக்கு. அப்படித்தான் விழுந்ததாம். செய்தியில் 'காணவில்லை' எண்டு அறிவிச்சவை. "அடிபட்டாலும் காணாமல் தானே போகும், அந்தரத்திலையோநிற்கும்" எண்டு கேட்டார் செய்தி கேட்ட ஒரு நண்பர். சனம் முன்னேற்றம்தான்.

இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை சூட்டோடு சூடாக வாசிக்கும் போது தமிழ்செய்திவாசிப்பாளர்களுக்கு திக்கல் திணறல் ஏற்படுவதை காது கவனிக்குது. கடற்படையென்று சொல்வதற்கு பதிலாக, கடற்துறை எண்டு தடுமாறி வாசிச்சதும் அப்படித்தான்.

சுயாதீன தொலைக்காட்சியிலை படங்களை ஒளிபரப்ப தெரிவு செய்யிறது யார் எண்டு தெரியேல்லை. மறுவிசாரணை போன்ற படங்களுக்கு ஒரு விருதும் கொடுக்காவிட்டாலும், தெரிவு செய்தவைக்கு ஏதாவது கொடுக்கலாம். (!?) நிற்க: ஐ.ரி.என் ஒரு சிங்கள படவிளம்பரம் போடுது. தொலைக்காட்சித் தணிக்கை குழுவைத் தாஜா பண்ணிப்போட்டினமோ? அந்த மாதிரியான காட்சி போடப்படுகிறது.

வசனக் கவிதை எப்படியிருக்கும்? கவிதையாகவும் இராது. கட்டுரையாகவும் இராது. இதோ உதாரணம்.

> "குழந்தைகள் கண்ணீர் சிந்தும் போது
> வானத்து நட்சத்திரங்கள்
> உதிர்கின்றன.
> அவைகள் சிரிக்கும்போது தேவதைகள்
> பூத்தூவுகிறார்கள்."

(நா.காமராசன்)

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# 64

## அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# யாழ் நகரில் நடந்த இயக்க மோதல்

# செல் எழுந்தால் அலாரம் ஒலிக்கும்

### புரிந்துணர்வோடு தாக்குதல்

'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள இயக்கங்கள் ஒன்றாதல் கண்டே' என்று 1986 இல் பாடியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

1986 இல் யாழ்-குடாநாட்டுக்குள் படையினரின் பிரவேசத்தை தடுப்பதில் சகல இயக்கங்களும் ஒரு புரிந்துணர்வோடு செயற்பட்டன.

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாம், வசாவிளான் இராணுவ முகாம், நாவற்குழி இராணுவ முகாம் போன்றவற்றிலிருந்து படையினர் முன்னேற முயற்சி செய்வார்கள்.

முகாம்களுக்கு அண்மையில் இயக்கங்களின் காவல் அரண்கள் அமைந்திருக்கும்.

இராணுவத்தினர் முன்னேறுவதாகத் தகவல் கிடைத்ததும் ஒவ்வொரு இயக்கமும் தமது உறுப்பினர்களை அங்கே அனுப்பிவிடும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் மேற்கொள்ளும் மோட்டார் ஷெல் தாக்குதலுக்கு ஒரு குறிப்பிட்ட பங்கு இருந்தது.

அப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். மட்டும் தான் மோட்டார் வைத்திருந்தது.

தொழில் நுட்பக் கோளாறு காரணமாக பல தடவைகள் ஷெல் மேல் எழாமல் மோட்டாருக்குள்ளேயே வெடித்துவிடும்.

அவ்வாறு பல உறுப்பினர்களை ஈ.பி.ஆர்.எல்.எஃப். பறிகொடுத்திருக்கிறது.

எனினும் மோட்டார் ஷெல் தாக்குதல் இராணுவத்தினரை அச்சுறுத்தும் விதமாக அமைந்திருந்தமையால், இழப்புக்கள் மத்தியிலும் மோட்டார் தொடர்ந்து பாவிக்கப்பட்டது.

### முகாமுக்குள் பிரசுரம்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவத் தளபதியாக இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் திட்டப்படி மோட்டார் ஷெல்லில் துண்டுப்பிரசுரங்களை வைத்து யாழ் கோட்டை முகாமுக்குள் ஏவிவிட்டார்கள்.

பிரசுரங்கள் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டிருந்தன. பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது இதுதான்:

"படைவீரர்களே! நீங்கள் யாருக்காகப் போராடுகிறீர்கள்?

உங்களையும், எங்களையும் ஒடுக்கிக்கொண்டிருக்கும் முதலாளித்துவ அரசுக்கு எதற்காக சேவகம் செய்கிறீர்கள்?

நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவில்லை!

சிங்கள-தமிழ் பாட்டாளிகளது பொது எதிரியான சிறீலங்கா நவபாசிச அரசுக்கு எதிராகவே போராடுகிறோம்.

ஈழமக்களது விடுதலை சிங்கள பாட்டாளிகளதும், உழைக்கும் மக்களதும் விடுதலைக்கு முதற்படியாக அமையப் போகிறது.

இலங்கையில் சோசலிசப் புரட்சிக்கான முதலாவது போர்முனையை நாம் ஈழத்தில் திறந்திருக்கிறோம்.

இரண்டாவது போர்முனையை நீங்கள் சிறீலங்காவில் திறக்க வேண்டும்.

நீங்கள் எமது எதிரிகளல்ல; நாங்கள் உங்கள் விரோதிகளுமல்ல.

நமது பொது எதிரி சிறீலங்கா அரசுதான்.

எனவே-திரும்பிச் செல்லுங்கள். நாம் அனைவரும் சோசலிசப் புரட்சியின் பங்காளர்களாக மாறுவோம்." என்று பிரசுரத்தில் கூறப்பட்டிருந்தது.

### பாரிய இழப்பு

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மோட்டார் உற்பத்தி செய்வதைப் பார்த்துவிட்டு, தாமும் மோட்டார் உற்பத்தியில் ஈடுபட்டது தமிழீழ இராணுவம்-(TEA).

தமது உற்பத்தியை ஒரு வெட்ட வெளியில் பரிசோதித்துப் பார்த்தார்கள். ஷெல் உயர எழுந்து வெடித்தது.

யாழ்-கோட்டை இராணுவ முகாமில் இருந்து விமானப்படை உதவியோடு இராணுவத்தினர் முன்னேறிவர முயன்று கொண்டிருந்தனர்.

புலிகள் அமைப்பினரும், ரெலோ அமைப்பினரும் பதிலடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஒரு முனையில் இருந்து மோட்டார் ஷெல் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் கொட்டடிச்சந்திக்கு மிகப் பெரிய மோட்டார்களோடு வந்து சேர்ந்தது தமிழீழ இராணுவம்.

மோட்டாருக்குள் ஷெல்லைப் போட்டார் ஒருவர்.

அடுத்த நொடியே விபரீதம் நிகழ்ந்தது. மோட்டாருக்குள் போடப்பட்ட ஷெல்-மோட்டாருக்குள்ளேயே வெடித்துச் சிதறியபோது,

அதன் அருகில் நின்ற தமிழீழ இராணுவ உறுப்பினர்கள் ஆறுபேர்வரை காணாமல் போனார்கள்.

அங்கங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்ததால் எந்த உடலும் அடையாளம் காணக் கூடிய நிலையில் இருக்கவில்லை.

மிகக் கோரமான வெடிவிபத்து அது. முதலாவது பெரிய வெடிவிபத்தும் அதுதான்.

### அலார அறிவிப்பு

யாழ்-கோட்டை இராணுவமுகாமில் இருந்து அடிக்கடி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படும்.

ஏவப்படும் ஷெல்கள் யாழ் நகருக்குள் விழுந்து வெடிக்கும்.

யாழ் பொது மருத்துவ மனைக்கு முன்பாகவெல்லாம் ஷெல்கள் வந்து விழுவதுண்டு.

ஷெல் தாக்குதலால் பொதுமக்களுக்கு ஏற்படும் உயிரிழப்புக்களைத் தடுக்க புளொட் அமைப்பினர் ஒரு திட்டம் போட்டனர்.

யாழ் கோட்டை முகாமுக்குள் இருந்து ஷெல் ஏவப்படும் சத்தம் கேட்டதும், கோட்டை முகாமுக்கு அருகில் உள்ள புளொட் கண்காணிப்பு நிலையில் இருந்து ஒரு சுவிட்சை அமுக்க வேண்டியதுதான்.

அடுத்த நொடியே யாழ் நகரில் பல இடங்களில் உள்ள அலாரங்கள் அலறத் தொடங்கிவிடும்.

யாழ் நகரில் பிரதான இடங்களில் மண மூட்டைகள் அடுக்கி பங்கர்கள் அமைத்து வைத்திருந்தது புளொட்.

அலாரம் அடித்ததும் மக்கள் ஓடிப் போய் பங்கருக்குள் மறைந்துகொள்ள வேண்டியதுதான்.

மிகவும் திட்டமிட்டு, கோட்டை முகாமுக்கு அருகில் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்து புளொட் மேற்கொண்ட அந்த நடவடிக்கைக்கு பலத்த வரவேற்பு இருந்தது.

### தவறுதல்தானா?

1986 இல் புலிகளுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் மோதல் நிலை ஏற்பட்டது.

யாழ்-கோட்டை இராணுவ முகாமுக்கு அருகில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். காவலரணுக்கு அந்த இயக்க உறுப்பினர்கள் சென்று கொண்டிருந்தனர்.

இரவு நேரமாக இருந்தாலும் கோட்டை இராணுவ முகாமின் அதிக சக்திவாய்ந்த மின்சார லைட்டுக்கள் அந்தப் பகுதியை பகலாக்கி வைத்திருந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களை நோக்கி திடீரென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

ஓர் உறுப்பினர்மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்துவிட்டது.

அவரையும் தூக்கிக்கொண்டு ஏனைய உறுப்பினர்கள் பாதுகாப்பு நிலை எடுத்தபோது, சுட்டுக்கொண்டிருப்பது இராணுவத்தினர் அல்ல என்பது தெரிந்தது.

கோட்டை முகாமுக்கு அருகில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள்தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்வதை நிறுத்திவிட்டு ஓடி வந்த புலிகள் இயக்கத்தினர் தாம் தவறுதலாக நினைத்து சுட்டுவிட்டதாகக் கூறினார்கள்.

"இராணுவத்தினர் என்று நினைத்துத்தான் சுட்டோம்" என்று விளக்கம் சொன்னார்கள்.

புலிகளது துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டவர் அமீன். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப்பிரிவைச் சேர்ந்தவர். லெபனானில் டாக்டர் ஜோஜ் ஹபாஷ் தலைமையிலான பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியிடம் பயிற்சி பெற்றவர்.

முன்னர் வவுனியாவில் புலிகள் இயக்கத்தினரால் கொல்லப்பட்ட றேகனும் அமீனுடன் பயிற்சி எடுத்தவர்தான்.

லெபனானில் பயிற்சி பெற்றவர்களை குறிவைத்து புலிகள் இயக்கத்தினர் தீர்த்துக்கட்டி வருகின்றனர் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களுக்குள் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

### சந்தேகங்கள்

"தவறுதலாக நடந்துவிட்டது" என்று புலிகள் சொன்னதை மறுத்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். பின்வரும் சந்தேகங்களை எழுப்பியிருந்தது:

'நகர்ப் பக்கமிருந்து கோட்டை முகாம் நோக்கிச் சென்றவர்களை இராணுவத்தினர் என்று எப்படி சந்தேகப்பட்டிருக்க முடியும்? கோட்டை முகாம் இருந்த பக்கமிருந்து வந்திருந்தால் சந்தேகப்பட்டிருக்கலாம்.

பகல் போல வெளிச்சம் இருந்த நிலையில் அடையாளம் காணமுடியாமல் போனது எவ்வாறு?

எவ்விதமான முன்னெச்சரிக்கையும் செய்யாமல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது ஏன்?'

என்பன போன்ற கேள்விகளை ஈ.பி.ஆர்.எல்.எஃப். தொடுத்திருந்தது.

### கிட்டு விளக்கம்

புலிகள் இயக்க யாழ் மாவட்ட இராணுவத் தளபதி கிட்டு, ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப் பிரிவுத் தளபதி டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து வருத்தம் தெரிவித்தார்.

"வேண்டுமென்றே திட்டமிட்டு நடக்கவில்லை. தவறுதலாக நடந்தது என்பதுதான் உண்மை" என்று கிட்டு வலியுறுத்திக் கூறினார்.

புலிகள் இயக்கத்தில் ஒருவரையாவது தீர்த்துக்கட்ட வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் கோபப்பட்டுக் கொண்டிருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் பத்மநாபாவும் அப்போது யாழ்ப்பாணத்தில் தங்கி நின்றிருந்தார்.

புலிகள் அமைப்பினர் வருத்தம் தெரிவித்துவிட்டமையால் மோதலைத் தூண்டும் வகையில் எவ்விதமான பதில் நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் என்று பத்மநாபாவும், டக்ளஸ் தேவானந்தாவும் உத்தரவிட்டிருந்தனர்.

அதற்கிடையே கோபப்பட்ட சில உறுப்பினர்கள் கோட்டை முகாமிற்கு அருகில் இருந்த புலிகளது காவலரணுக்குச் சென்று அமீனைச் சுட்ட உறுப்பினர்களை தேடினார்கள்.

ஆனால் சம்பவம் நடைபெற்ற உடன் குறிப்பிட்ட உறுப்பினர்களை கிட்டு அழைத்துச் சென்றுவிட்டார்.

### இறுதிச்சடங்கு

சாவகச்சேரியில் அமீனின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டார்கள்.

சாவகச்சேரியில் கடைகளை மூடுமாறு ஈ.பி.ஆர்.எல்.எஃப். கேட்டுக் கொண்டதற்கு இணங்க கடைகள் மூடப்பட்டன.

புலிகளது தீவிர ஆதரவாளர்கள் சிலரது கடைகள் மட்டும் திறந்திருந்தன.

அக் கடைகளுக்கு முன்பாக வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தார்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள்.

ஒரு சிறுவன் காயமடைந்தான். வெடிகுண்டை வெடிக்கவைத்த உறுப்பினர், இராணுவப் பிரிவில் முக்கியமானவர்.

அவரை அழைத்து கடுமையாகக் கண்டித்தார் டக்ளஸ் தேவானந்தா.

### மீண்டும் மோதல்

முதலாவது சம்பவம் மோதல் இல்லாமல் முடிந்தபோதும், மற்றுமொரு சம்பவத்தால் மோதல் வெடித்தது.

யாழ்ப்பாணம் நல்லூரில் வைமன் வீதியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமைச் செயலகம் இருந்தது.

தலைமைச் செயலகத்தின் பின்புறமிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

காவல்பணியில் இருந்தவர்கள் ஓடிச் சென்று பார்ப்பதற்கிடையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் தப்பிச் சென்றுவிட்டார்கள்.

அருகிலிருந்த ரெலோ முகாமில் விசாரித்தபோது, கிட்டுவின் கார் அவ்வழியாகச் சென்றதைப் பார்த்ததாகக் கூறினார்கள்.

அதனால் புலிகள் மீது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினருக்கு சந்தேகம் வந்துவிட்டது.

புலிகள் அமைப்பினது பிரதான முகாம் யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்திக்கு அருகாமையில் இருந்தது.

நல்லூர் சம்பவம் நடைபெற்று முடிந்தகையோடு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவத் தளபதி டக்ளஸ் தேவானந்தாவும், மத்தியகுழு உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தட்டாதெருச் சந்தி வழியாக மானிப்பாய் நோக்கி ஒரு வேனில் சென்றுகொண்டிருந்தனர்.

வேனுக்கு முன்பாக டக்ளஸ் தேவானந்தாவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

தட்டாதெரு சந்திக்கருகில் காவல்பணியில் ஈடுபட்டிருந்த புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் மோட்டார் சைக்கிளை மறித்தார்.

மறித்தபடியே பிஸ்டலை எடுத்து நெற்றிக்கு எதிராக நீட்டினார். மோட்டார் சைக்கிளில் சென்ற டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாவலர், பிஸ்டலை எட்டிப்பிடித்துக் கொண்டு பிஸ்டலை நீட்டியவரை கீழே வீழ்த்திவிட்டார்.

டக்ளஸ் தேவானந்தாவின் வேனில் இருந்தவர்களும் தமது ஆயுதங்களோடு கீழே குதித்தபோது புலிகளது முகாமில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் ஆரம்பித்தது.

இரு தரப்பினரும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்க, முதலில் பிஸ்டலை காட்டிய புலிகள் இயக்க உறுப்பினரான ரிச்சாட்டை அவரது பிஸ்டலாலேயே டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாவலரான ரமணன் சுட்டுவிட்டார்.

ரிச்சாட் சாகவில்லை; உயிர் இருந்தது. மீண்டும் அவரைச் சுடமுயன்றபோது டக்ளஸ் தேவானந்தாவின் சகோதரரான பிரேம் குறுக்கே விழுந்து தடுத்துவிட்டார். அவரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்.

துப்பாக்கிச் சமர் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, ரிச்சாட்டை தூக்கி வேன் ஒன்றில் போட்டு வைத்தியசாலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டார் பிரேம்.

அதேநேரம் டக்ளஸ் தேவானந்தாவையும், சுரேஸ் பிரேமச்சந்திரனையும் பாதுகாப்பாக வெளியேற்றி அனுப்பிவிட்டார்கள்.

அரைமணிநேர சமரின் பின்னர் துப்பாக்கி முழக்கங்கள் ஓய்ந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் நால்வரை புலிகள் பிடித்து வைத்துக் கொண்டார்கள்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் கொல்லப்பட்டனர். அவர்களது உடல்களை தூக்கிக் கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் சென்றுவிட்டார்கள்.

அதனையடுத்து தம்மிடம் பிடிபட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் ஒருவரை புலிகள் சுட்டுக்கொன்றார்கள்.

### சமரசம்

இச் சம்பவம் நடைபெற்ற மறுநாள் யாழ்ப்பாணம் எங்கும் ஒரே பதட்டமாக இருந்தது.

புலிகள் இயக்க மானிப்பாய் பொறுப்பாளர் ஐயர், ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களால் தாக்கப்பட்டார்.

"புலிகள் வசம் உள்ள நான்கு பேரையும் உடனடியாக விடுவிக்காவிட்டால் தட்டாதெரு முகாம்மீது மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தப்படும். அருகிலுள்ளவர்கள் வேறு இடங்களுக்கு செல்ல வேண்டும்" என்று டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

யாழ் மாநாகர முன்னாள் மேயர் விசுவநாதன் சமரசம் செய்ய முன்வந்தார். அவரது வீடும் தட்டாதெருப்பகுதியில்தான் இருந்தது.

யாழ்-பல்கலைக் கழகத்தில் இரு தரப்பும் சந்தித்துப் பேசுவதாக முடிவு செய்யப்பட்டது.




'ஷெல்' தாக்குதலின்போது சல்லடையாக்கப்பட்ட றீகல் திரையரங்கம். அருகில் வீரசிங்கம் மண்டபம்.

ஒரு புறம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். மறு புறம் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆயுதம் ஏந்தி வரிசையாக நின்றார்கள்.

புலிகளது சார்பாக கிட்டுவும், திலீபனும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ், பாலா ஆகியோரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

நல்லூர் அலுவலகம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது தாம் அல்லவென்று கிட்டு உறுதியாக தெரிவித்தார். "நம் இரு அமைப்புக்களுக்கிடையேயும் மோதல் ஏற்படுத்த விரும்பும் இயக்கமொன்றுதான் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு, பழியை எங்கள் மீது போட்டிருக்கிறது" என்று கூறினார் கிட்டு.

(பின்னர் விசாரித்துப் பார்த்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.; கிட்டு சொன்னதில் பொய்யில்லை என்று தெரிந்தது.)

மேற்கொண்டு எந்தப் பிரச்சனை வந்தாலும் இரு தரப்பும் நேரடியாகப் பேசித்தீர்ப்பது என்ற முடிவோடு இரு தரப்பினரும் கைகுலுக்கிக் கொண்டனர்.

இரண்டு புலிகள் இயக்க உறுப்பினர்களது உடல்களையும் இராணுவ மரியாதையோடு திரும்பி ஒப்படைத்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

புலிகளும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினரது உடலை ஒப்படைத்தனர்.

(தொடர்ந்து வரும்)

## அலசுவது - இராஜதந்திரி

# மிக்கேயில் இண்டஸ்றீஸ் - ரகம் 17 (MI-17)

வடக்கே விமானப்படையினரின் எம்.ஐ.17 ரக ஹெலிகப்டர் ஒன்று மறைந்து போயுள்ளது.

எல்.ரி.ரி.ஈ.யினர் சுட்டு வீழ்த்தினார்களா? அல்லது அந்த இராட்சத ஹெலிகப்டர் இயந்திரக் கோளாறு காரணமாக கடலுக்குள் வீழ்ந்ததா? என்பதே புரியாத புதிராக இருக்கின்றது.

கடந்த ஆண்டு ஏப்ரலில் அடுத்தடுத்து இரு அவ்ரோ விமானப்படை விமானங்கள் எல்.ரி.ரி.ஈ.யினரால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதில் நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து வடக்கே பலாலிக்கும், தென்னிலங்கைக்குமிடையிலான ஆகாயமார்க்கப் போக்குவரத்துக் தொடர்புகள் அறுந்துபோகும் நிலையில் இருந்தன.

வடக்கே உள்ள படையினரின் உயிர்நாடியாக ஆகாயமார்க்கமான போக்குவரத்தே விளங்குகின்றது.

கடல்மார்க்கமாக படையினருக்குரிய பொருட்கள் கொண்டு செல்லப்படும் போது, 'கடற் புலிகள்' உறுமிக்கொண்டு தாக்கவருகின்றனர். அத்தடன் பலபீரங்கிப் படகுகளைக் கடந்த காலங்களில் தாக்கியழித்தும் உள்ளனர்.

இதன்காரணமாக கடல்மார்க்கமான படையினரின் விநியோகங்கள் என்பன பெருமளவு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளன.

எனவேதான் ஆகாயமார்க்கமாகப் போக்குவரத்து விமானங்கள் மூலமாக விநியோகங்களை மேற்கொள்வதில் நாட்டம் காட்டப்படுகின்றது.

இருந்தபோதிலும் இந்த ஆகாயப்போக்கு வரத்துக்கும் தற்போது முழுஅளவிலான அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதையே எம்.ஐ.17 ரக ஹெலிகப்டர் காணாமல் போயுள்ள விவகாரம் புலப்படுத்துகின்றது.

எம்.ஐ.17 ரக ஹெலிகப்டர் ஒரு ரஷ்யத் தயாரிப்பாகும். ரஷ்யாவின் உக்ரேயின் பிரதேசத்தில் தயாரானதொன்று.

**Mikhail Industries (M-I)** மிக்கேயில் இண்டஸ்றீஸ் என்பதன் சுருக்கமே எம்.ஐ. என்பதாகும்.

மேல்பாகத்தில் விசிறிகளுடன் தரையில் இருந்து ஏனைய ஹெலிகப்டர்களைப் போன்றே செங்குத்தாக எந்தவொரு இடத்திலும், ஏறி இறங்கக்கூடியதே

இந்த ஹெலிகப்டராகும். ஆயினும் இதில் சுமார் 30 பேர் வரை அமர்ந்து செல்லமுடியும்.

ஒரு சிறிய விமானம்போல இதில் பயணிகளைக் கொண்டு செல்லமுடியும்.

ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக அதிகளவில் எம்.ஐ. ரக ஹெலிகப்டர்களைக் கொண்டுள்ள நாடு இந்தியாவாகும்.

ரஷ்யா, இராணுவத் தேவைகளின் பொருட்டு இந்தியாவுக்கு பெருந்தொகை யான அன்டநோவ் விமானங் களையும், மிக் விமானங்கள், மற்றும் எம்.ஐ.ரக ஹெலிகப்டர்களையும் வழங்கியுள்ளது.

எம்.ஐ.ரக ஹெலிகப்டர்கள் இந்தியாவுக்குப் பெருமளவில் துணைபுரிகின்றது.

ஏனெனில் இந்தியாவின் எல்லைகள் வெறுமனே சமவெளிப் பகுதிகளில் மட்டுமல்ல; உயர்ந்த மலைச் சிகரங்களூடாகவும் செல்லுகின்றது.

இமயமலைச் சாரலில் உள்ள சியாச்சென் மலைச்சிகரம் இந்தியாவின் எல்லைகள் விடயத்தில் முக்கியமானதாகும்.

இந்தியாவும் பாகிஸ்தானும் சியாச்சென் மலைச்சிகரத்தினூடாகச் செல்லும் தமது எல்லைகள் குறித்து யுத்தங்களை நடத்தியுள்ளன.

எனவே இந்த சியாச்சென் பனிமலைச் சிகரத்துக்கு துருப்புகளை கொண்டு செல்வதற்கு இந்த எம்.ஐ.ரக ஹெலிகப்டர்களையே இந்தியா பெருமளவில் பயன்படுத்துவதுண்டு.

விமானங்கள் ஏறி - இறங்கக்கூடியவாறு ஓடுபாதைகள் மலைச்சிகரப்பகுதிகளில் இல்லை. இதன் காரணமாகவே செங்குத்தாக ஏறி-இறங்கக்கூடிய இந்த எம்.ஐ. இராட்சத ஹெலிகப்டர்கள் சிக்கலான தரையமைப்புகளுக்கு ஏற்றவையாக இருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த எம்.ஐ. ஹெலிகப்டர் முக்கியத்துவம் மிக்கதொன்றாகவே இருக்கின்றது.

இலங்கை அரசு ஆயுதப்படைகளுக்கு அண்மைக்காலங்களில் பெருமளவு யுத்த தளபாடங்களை வாங்கியிருந்தது.

இந்த ஆயுதத் தளபாடங்களில் அநேகமானவை ரஷ்யாவிடமிருந்தே வாங்கப்பட்டன. ரஷ்யாவிடமிருந்து அதிகளவில் வாங்கப்பட்டமைக்குக் காரணம் இருக்கவே செய்தது.

ஏனெனில் ரஷ்ய இராணுவத் தளபாடங்கள் சர்வதேச சந்தையில் தற்போது மலிவுப் பண்டங்களாகியுள்ளன.

தொழில்நுட்ப ரீதியாகவும், வேறு விதத்திலும் இந்த ரஷ்ய விமானங்கள், ஹெலிகப்டர்கள் என்பன ஏனைய மேற்கத்தைய நாடுகளின் உற்பத்திகளை விட மலிவானவையாகவே இருக்கின்றன.

இலங்கையின் கையிருப்புக்கேற்ற வகையிலும் இவற்றின் பெறுமதி இருப்பதாலேயே இலங்கை அரசு இவற்றைப் பெருமளவில் வாங்கியுள்ளது.

ஆயினும் இலங்கை கொள்வனவு செய்த அன்டநோவ் விமானங்களில் இரண்டு கடலுக்குள் வீழ்ந்து மூழ்கின. இந்த இரு விமானங்களும் சுட்டு வீழ்த்தப்படவில்லை. இயந்திரக் கோளாறு காரணமாகவே இவை செயலிழந்து வீழ்ந்தன.

இலங்கையில் அன்டநோவ் விமானங்கள் வீழ்ந்து மூழ்கிய காலப்பகுதியில் வேறு நாடுகள் சிலவற்றிலும் ரஷ்ய

# சுதுமலை முதல் வெற்றிலைக்கேணி வரை

அன்டநோவ் விமானங்கள் வீழ்ந்திருந்தன. இதன் மூலம் இந்த விமானங்களின் தொழில்நுட்பம் கேள்விக்குறியாகியிருப்பதையே அறியமுடிகின்றது.

சோவியத் யூனியன் என்ற அமைப்பின் கீழ் ரஷ்யா பலமடைந்திருந்தபோது ரஷ்ய தொழில்நுட்பம் சிறப்பாகவே இருந்தது.

ஆனால் தற்போது ரஷ்யாவில் அனைத்துமே சீர்குலைந்து போயுள்ளன.

அச்சீர்குலைவின் பிரதிபலிப்பை அதன் தொழில்நுட்பங்கள் மூலமாகவும் அறியமுடிகின்றது.

எனவே இலங்கையில் அன்டநோவ் விமானங்கள் வீழ்ந்து நொருங்கியமை, மற்றும் எம்.ஐ.ரக ஹொலிகப்டர் காணாமல் போயுள்ளமை என்பன ரஷ்யாவின் உக்ரேயின் பிரதேச விமானத்தயாரிப்புகளில் ஏற்பட்டுள்ள பிசகுகளை வெளிப்படுத்துகின்றன.

வடக்கே எம்.ஐ. ஹெலிகப்டர் காணாமல் போயுள்ளதையடுத்து, அதுபற்றி தற்போது பரவலாகப் பேசப்படுகின்றது.

ஆனால் இந்த எம்.ஐ.ரக ரஷ்ய ஹெலிகப்டர் சுமார் ஆறு வருடங்களுக்கு முன்னர் யாழ்குடா நாட்டவரின் கவனத்தை ஈர்த்திருந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தயாராகிக் கொண்டிருந்தவேளை, அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் வகையில் அன்றைய இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி புதுடில்லியில் இலங்கைத்தமிழ் அரசியலாளர்களைச் சந்தித்திருந்தார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை இலங்கைத்தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்கவேண்டுமென்பது ராஜீவ் காந்தியின் நிலைப்பாடாக இருந்தது.

தமிழ் கட்சிகள் அனைத்தும் இந்த ஒப்பந்தத்துக்கு உடன்பட்டிருந்தன. ஆனால் இதுகுறித்து எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் நிலைப்பாட்டையும் அறிய வேண்டிய நிலைக்கு இந்திய அரசு தள்ளப்பட்டிருந்தது.

எல்.ரி.ரி.ஈ. இயக்கம் ஒரு பலம் மிக்க ஆயுத அமைப்பென்பதை இந்திய அரசு நன்கு அறிந்து வைத்திருந்தது.

இந்நிலையில் 1987ம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்காக அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை வரவிருந்த தருணம்.

யாழ்ப்பாணத்தின் ஆகாயவெளியில் இரு ராட்சத ஹெலிகப்டர்கள் தென்பட்டன. இந்த இரு ஹெலிகப்டர்களும் தாழ்வாகப்பறந்து வட்டமிட்ட பின்னர், யாழ் குடாநாட்டின் மானிப்பாய் கிராமத்தைச்சேர்ந்த சுதுமலைப்பிரதேசத்தில் தரை இறங்கின.

இந்த இரு ஹெலிகப்டர்களும் தரை இறங்கிய சுதுமலைப் பிரதேசத்திலேயே, யாழ் குடாநாட்டின் பிரசித்திபெற்ற சுதுமலை அம்மன் கோயிலும் அமைந்துள்ளது.

இந்த சுதுமலை அம்மன் ஆலயச் சுற்றாடல் கண்களுக்குக் குளிர்ச்சியானதொரு பகுதியாகும். வயல்வெளிகளுடனும், பனந்தோப்புகளுடனும் இப்பகுதி காணப்படுகின்றது.

இங்கே அம்மன் கோயிலை அண்டிய சமவெளியான தரைப்பகுதியிலேயே அந்த இரு இராட்சத ஹெலிகப்டர்களும் இறங்கி நின்றன.



இந்த இரு ஹெலிகப்டர்களைக் கண்டதும் மக்கள் வெள்ளம் திரண்டுவந்தது. திடீரென அந்த ஆலயப்பிரதேசத்தில் ஒரு முற்பகல் வேளை அந்த இரு ஹெலிகப்டர்களும் இறங்கி நின்றமை அனைவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தன.

அவை ஏன் அங்கு இறங்கி நிற்கின்றன? அவற்றில் யார் வந்துள்ளார்கள்?

என்பதை அறிவதில் மக்கள் ஆர்வமாக இருந்தனர்.

அந்த ஹெலிகப்டர்களை ஓட்டிவந்த ஆஜானுபாகுவான இந்திய விமானப்படை விமானிகளும் தரையில் அந்த ஹெலிகப்டர்களுக்கு அருகே இறங்கி நின்றனர்.

சிறிது நேரத்தில் அந்த இரு ஹெலிகப்டர்களையும் சூழவர நின்ற மக்களை விலகி நிற்கும்படி

ஆயுதபாணிகளான எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் சத்தமிட்டபடி வந்தனர்.

அந்த எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களைத் தொடர்ந்து வேறு சிலர் கூட்டமாக சிலரை அழைத்துக் கொண்டு அந்த ஹெலிகப்டர்களை நோக்கி நகர்ந்து வந்தனர்.

மக்கள், அனைத்தையுமே வியப்போடு பார்த்த வண்ணம் நின்றனர். ஹெலிகப்படரை நோக்கி வந்தவர்கள் வேறுயாருமல்ல.

எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தலைவர் வே.பிரபாகரன், அந்த இயக்கதின் அரசியல் பிரிவு முக்கியஸ்தரான திலீபன் ஆகியோரே அந்த ஹெலிகப்டர்களை நோக்கிவந்து அவற்றில் ஒன்றில் ஏறிக்கொண்டனர்.

இதனையடுத்து எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள், மேலும் பலத்த சத்தத்துடன் ஹெலிகப்டர் அருகே நின்ற மக்களை விலகி நிற்கும்படி சத்தம் போட்டனர்.

அவ்வேளை எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே-பிரபாகரன், திலீபன் ஆகியோர் ஏறிய ஹெலிகப்டரின் கதவுகள் மூடப்பட்டன. அதன் காற்றாடியும் சிறிது சிறிதாகச் சுழல ஆரம்பித்தது.

அச்சமயம் அனைத்தையும் பார்த்து நின்ற பத்திரிகையாளர் ஒருவர் பிரபாகரனை ஏற்றிய ஹெலிகப்டரின் விமானி இருந்த பகுதியை நோக்கி ஓடிச்சென்று, அவ்விமானியிடம் இந்த ஹெலிகப்டரின் பெயர் என்ன? என்று கேட்டார்.

அச்சமயம் ஹெலிகப்டரின் இயந்திரங்கள் இரைச்சலுடன் இயங்க ஆரம்பிக்கவே அதன் விமானியும் "இது 'எம்.ஐ.17" என்று உரக்கக் கத்தி பதிலளித்தார்.

இதனையடுத்து சில நொடிகளில் அந்த எம்.ஐ. ஹெலிகப்டர் தரையிலிருந்து மேலெழுந்தது. தொடர்ந்து அதனோடு வந்திருந்த மற்றய ஹெலிகப்டரும் புகைமண்டலத்தைக் கிளப்பியவாறு மேலெழுந்தது.

பின்னர் அவை இரண்டும் நன்கு உயரக்கிளம்பி சுதுமலை அம்மன் கோயில் பகுதியை வட்டமிட்டவாறு இந்தியா நோக்கிப் பறந்தன.

மறுநாள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் காலைப்பத்திரிகைகள் இந்த ஹெலிகப்டர்கள் வந்திறங்கிய விடயத்தைக் 'கொட்டை' எழுத்துக்களில் பிரசுரித்தன.

அச்செய்தியிலேயே அன்றைய இந்தியப் பிரதமரினால் விசேடமாக ஹெலிகப்டர்கள் யாழ்குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தலைவர் வே.பிரபாகரன் இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்ட விபரமும் வெளியாகியிருந்தது.

திரு. பிரபாகரன் இந்தியாவில் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுக் களை நடத்திய பின்னர் இந்தியாவில் இருந்தசமயமே, ராஜீவ்காந்தி கொழும்பு வந்து இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார்.

இதனையடுத்து இந்தியத்துருப்புக்களும் யாழ்குடாநாடு வந்து அந்த ஒப்பந்தத்தின் அமுலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தன.

இருந்தபோதிலும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நாளடைவில் எல்.ரி.ரி.ஈ. நிராகரித்து இந்தியப்படைக்கு எதிராக மோதல்களை ஆரம்பித்தது.

அச்சமயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவக்கல்லூரி மைதானத்தில் 1987ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒருநாள்- நள்ளிரவுக்குப் பிந்தியவேளை - பேரிரைச்சலுடன் இராட்சத ஹெலிகப்டர்கள் வந்திறங்கின.

அந்த ஹெலிகப்டர்களும் எம்.ஐ.ரக ரஷ்ய ஹெலிகப்டர்களே.

ஆனால் அவற்றிலிருந்து இத்தடவை இந்திய இராணுவத்தின் விசேட கமாண்டோக்கள் வெளியே குதித்தனர்.

எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரனை மடக்கிப் பிடிப்பதே அந்த கமாண்டோக்களின் நோக்கம்.

ஆனால் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் முந்திக்கொண்டனர்.

தரையிறங்கிய கமாண்டோக்களில் முக்கால் வாசிப்பேர் அந்த நடுச்சாம வேளையிலேயே வேட்டையாடப் பட்டனர்.

இந்த வேட்டையையடுத்தே இந்தியப்படையினருக்கும், எல்.ரி.ரி.ஈ.யினருக்குமிடையிலான மோதல்களும் 1987ம் ஆண்டில் பூதாகரமாக வெடித்தன.

எனவே மிக்கேயில் இண்டஸ்றீஸ் **(Mikhail Industries)** எம்.ஐ.ரக ரஷ்ய ஹெலிகப்டர்களுக்கும் இன்றைய இலங்கை நிலவரத்திற்கும் உள்ள தொடர்பு குறிப்பிடத்தக்கதாகவே இருக்கின்றது.

## கலைஞர் கருணாநிதி பதில்கள்



### சென்ற முறை ஈழப்போராளி இயக்கங்களுக்கு நேரடியாக நிதியுதவி அளித்த தி.மு.க. இம்முறை செஞ்சிலுவைச் சங்கத்திடம் அளித்தது ஏன்?

**★ தனி ஈழம் என்ற தீர்வை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? சென்றமுறை ஈழப் போராளி இயக்கங்களுக்கு நேரடியாக நிதியுதவி அளித்த தி.மு.க. இம்முறை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அளித்தது ஏன்? போராளி இயக்கங்கள் மீது நம்பிக்கை இழந்துவிட்டதாகச் சொல்லலாமா?**

*• ஈழத் தமிழர்கள் எந்த முடிவை ஏற்றுக்கொள்கிறார்களோ; அம்முடிவை தி.மு.க. ஆதரிக்குமென்று பலமுறை கூறியிருக்கிறேன். ஈழத்தில் போர் நடக்கிற காலத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் நிதி வழங்கி, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களை அந்த மக்களுக்கே வழங்குவதே சரியென்ற காரணத்தால் அச்சங்கத்திடம் நிதியை வழங்கினோம்.*

**★ அரசியல் தெளிவு, கொள்கைத்திட்டம் சிந்தாந்தம், கட்சி அனுபவம் ஏதுமில்லாத நிலை யில் நடிகர் ரஜினிகாந்த் தமிழக அரசியலில் ஒரு சக்தியாக சித்தரிக்கப்படுவதை, அரசியல் அனுபவம் முதிர்ந்த நீங்கள் எப்படி சகித்துக் கொள்கிறீர்கள்? அவரைப்பற்றி கறாராக விமர்சிக்க, நீண்டகால கள அனுபவமும், பெரிய அமைப்பும் உடைய தி.மு.கழகம் தயங்குவது ஏன்?**

*• நண்பர் ரஜினிகாந்த் அவர்களைப்பற்றி, உங்கள் கேள்வியின் முதல் பகுதியில் அமைந்துள்ள சொற்றொடர் முழுவதையும் நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அரசியல் தெளிவு அவருக்கு இருக்கிற காரணத்தால்தான், "ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பிறகு தமிழ்நாட்டு மக்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்று தனது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் அதேசமயம் அவர் அரசியலுக்கு வராத இன்றைய சூழலில்-தி.மு.கவுடன் மோதாத இன்றைய சூழலில், அவர் தொழிலை அவர் பார்த்துக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில்; அவரைப் பற்றிக் கறாராகவோ, கடுமை யாகவோ விமர்சிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? தி.மு.க போன்ற கட்சிகள் ரஜினியை விமர்சிக்கத் தொடங்கினால், ஜெயலலிதாமீது உருவாகியுள்ள எதிர்ப்புக்கள் குறையுமே என்று சிலர் எதிர்பார்க்கிறார்கள். அதற்கு நாங்கள் கருவியாகிடத் தயாராக இல்லை.*

*பாம்புகூட தன்னை மிதித்தவரைத்தான் கடிக்கிறது. வலியச் சென்று யாரையும் கடிப்ப தில்லை. பாம்பே அப்படியென்றால் பண்பாடு மிக்க பராம்பரியத்தில் வந்துள்ள அரசியல் இயக்கமான தி.மு.கழகம் எப்படியிருக்கும் என்பதை உங்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.*

**★ ஜெயலலிதாவிடம் நீங்கள் காணும் பாராட்டத்தக்க அம்சம் ஏதும் உண்டா?**

*• அவரது நூறாது படவிழாவுக்கு என்னை அழைத்திருந்தார். அப்போது அவரது நடிப்புத் திறனை பாராட்டியிருந்தேன். இப்போதும் அந்தத் திறனைப் பாராட்டுகிறேன்.*

**★ சசிகலா இல்லாத ஜெயலலிதா ஆட்சி எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?**

*• நாணயத்தின் ஒரு பக்கத்தை எடுத்துவிட முடியுமா? போலி நாணயத்திற்குக்கூட இருபக்கம் இருந்தால்தானே, அது கண்டுபிடிக்கப்படும்வரையில் புழக்கத்தில் விடமுடியும்.*

**★ ஒரு வரியில் நரசிம்மராவ் ஆட்சி, ஜெயலலிதா ஆட்சி இரண்டையும் விமர்சியுங்கள்?**

*• இருதலைக் கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி!*

**★ நடைபெறவிருக்கும் தேர்தலில் வாக்காளர்கள் பரிசீலிக்க வேண்டிய முக்கிய அம்சம் என்ன?**

*• கடந்த தேர்தலில் எப்படி ஏமாற்றப்பட்டோம் என்பதை சிந்தித்து முடிவுக்கு வந்தால்; அதுவே போதும்.*

**(தினமணிக்கதிரில் ஞாநியின் கேள்விகளுக்கு சொன்னது.)**

எழுதுவது ரசிகன் 20

ஈராக் உப அதிபர் சதாம் ஹுசேனின் திட்டப்படி எண்ணெய் வள நாடுகளது மாநாட்டு (ஒபேக்) பிரதிநிதிகள் கார்லோஸ் குழுவினரால் பணயக் கைதிகளாக்கப்படுகின்றனர். 11 நாடுகளது அமைச்சர்கள் உட்பட 70 பேர் கார்லோஸின் காலடியில்!

கார்லோஸ் குழுவினரை மடக்கி, பணயக் கைதிகளை மீட்க முயன்றது வியன்னா பொலிஸ். இரு தரப்புக்கும் துப்பாக்கிச்சமர் நடந்து, இரு தரப்பிலும் சேதங்கள்! பணய நாடகம் தொடர்கிறது.

மனித வெடிகுண்டு

வியன்னாவில் ஒபேக் தலைமைச் செயலகத்திற்கு தூதரக அந்தஸ்த்து வழங்கப்பட்டிருந்தது.

ஒபேக் தலைமைச் செயலகத்தின் செயலாளர் நாயகம் கிரிஸில்டா கேரி ஒரு பெண். படிப்பு வாசனை முகத்தில் தெரிந்தது. இத்தனை உயர்ந்த பதவிக்கு வரமுடிந்த இரகசியம் கண்களில் தெரிந்த ஆளுமையில், தீர்க்கமான பார்வையில் ஒளிந்திருந்தது. நடுத்தர வயதில் இருந்தாள். சுறுசுறுப்பு இளமையாக காட்டியது. நீண்டநாசி, அளவான உதடுகள். அளவான... என்று தொடர்ந்து வர்ணிக்கலாம். ஆனால் அவகாசம் போதாது.

கார்லோஸ் அவளை அழைத்தான். கண்களால் அளவெடுத்தான். அவள் ஒப்புக்காக புன்-சிரித்தாள்.

தலை செய்து அதற்கு பதிலாக ஒரு வோக்கி டோக்கி பெற்றுக் கொண்டான்.

ஒஸ்ரியா அரசு லிபியா தூதரைத் தேடியது. அவர் செக்கஸ்லோவாக்கியா சென்றிருந்தார். உடனே தொடர்பு கொள்ள இயலவில்லை.

ஈராக் உதவித் தூதர் ரியாட் அல் அஸாவி ஒஸ்ரியா அதிபரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

# முதல் கட்ட வெற்றி

"ஒரு பேப்பர், ஒரு பேனா எடுத்துக் கொள்ளுங்கள்" எடுத்துக்கொண்டாள்.

"நான் சொல்வதை ஒரு வார்த்தை தவறாமல் குறித்துக்கொள்ள வேண்டும்" தயாரானாள்.

"பரவாயில்லை அழகாகத்தான் இருக்கிறீர்கள். இதனைக் குறிப்பிடத் தேவையில்லை." என்று சிரித்துவிட்டு, ஆங்கிலத்தில் சொல்ல ஆரம்பித்தான்.

"ஒபேக் மாநாட்டு பிரதிநிதிகள் எம்மிடம் பணயக்கைதிகளாக இருப்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஏன் வைத்திருக்கிறோம்? எங்கள் நோக்கம் என்பது நாங்கள் சொல்லாமல் தெரியப்போவதில்லை.

நீங்கள் செய்யவேண்டியது என்னவென்று சிறு பட்டியல் தருகிறேன். ஏவுகணை வேகத்தில் செய்து முடித்தால் 70 மனித உயிர்கள் சிறு கீறல்கூட இல்லாமல் தப்பிக்கொள்வார்கள்.

நம்மோடு விளையாடிப்பார்க்க ஆசை ஏற்பட்டால்.. ஏற்பட்டால், மன்னித்துக் கொள்ளுங்கள், பணயக்கைதிகளை மிக நிச்சயமாக கொன்றுவிடுவோம்.

ஆகவே, நீங்கள் செய்ய வேண்டியது, எமது அறிக்கை கிடைத்த இரு மணி நேரத்தின் பின்னர் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு தடவை உங்கள் வானொலி, தொலைக் காட்சிகளில் ஒலி, ஒளிபரப்பவேண்டும்.

நாளை காலை 7 மணிக்கு நிலையத்துக்கு நல்ல வசதியுள்ள பெரிய பஸ் ஒன்றை இங்கே அனுப்ப வேண்டும்.

நாம் பணயக்கைதிகளோடு விமான நிலையம் செல்லுவோம். அங்கு டி.சி.9 ரக விமானம் ஒன்று நிறைவான எரிபொருளுடனும், மூன்று விமானிகளுடனும் தயாராக நிற்கவேண்டும்.

இவ்வளவுதான் நீங்கள் செய்ய வேண்டியது. வேகம் முக்கியம். தாமதம் வெறுப்பூட்டும்.

**அராபியப் புரட்சியின் ஒரங்கம்.**
**வியன்னா – 21/12/1975**

இவ்வளவுதானா என்பதுபோல பார்த்தாள் செயலாளர் நாயகம். "அவ்வளவு தான். உடனே அனுப்புங்கள்!"

--●●--

ஒஸ்ரியா அரசுக்கு தனது நாட்டு தலைநகரில் நடக்கும் பணய நாடகம் பெரிய நெருக்கடியாக இருந்தது.

கார்லோஸின் கடிதம் கிடைத்ததும் ஒஸ்ரியா அதிபர் கிரெய்ஸ்கி தனது பாதுகாப்பு உயரதிகாரிகளைக் கூட்டி வைத்துக் கொண்டு, நெற்றி நரம்புகள் துடிக்க ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார்.

முட்டைவடிவ மேசையின் முன்பாக இருந்தவர்கள் முகங்களில் நூறுசதவீத டென்ஷன் இருந்தது. இரத்த அழுத்தம் கூடியிருந்தது.

"முற்றுகையிட விசேஷ அதிரடிப் படையை தயாராக்க வேண்டியதுதான்" என்றார் இராணுவ அதிகாரி.

அவசரமாகக் குறுக்கிட்டார் வியன்னா நகர பொலிஸ் உயரதிகாரி லீபார்ட்: "நோ. நோ. எதிரி எதற்கும் துணிந்தவன். புத்திசாலி. கார்லோஸ்" என்றார். என்றபோது கார்லோஸ் என்ற பெயரை சற்று அழுத்தமாகவே உச்சரித்தார்.

"கார்லோஸ்.. அவனா வந்திருக்கிறான்? அவன் எப்படி நாட்டுக்குள் நுழைந்தான்?" என்றார் இராணுவ அதிகாரி.

"அது இப்போது முக்கியமில்லை. அவனை எப்படி சமாளிக்கப்போகிறோம். யோசியுங்கள்," என்றார் அதிபர் சற்றுச் சூடாக.

●●

"சரியாக 6.20க்கு கார்லோஸின் அறிக்கை ஒஸ்ரியா வானொலியிலும் தொலைக்காட்சியிலும் ஒலி, ஒளிபரப்பானது.

ஒபேக் செயலக தொலைக்காட்சியில் தனது அறிக்கை ஒளிபரப்பாவதை, உதட்டில் தொங்கிய புன்னகையோடு கவனித்துக் கொண்டிருந்த கார்லோஸ், அடுத்து மிகத் தந்திரமான சில காரியங்களை மேற்கொண்டான்.

பணய நாடகத்தில் ஈராக் மீது சந்தேகம் வராதிருக்க, லிபியாவின் பெயரை இழுத்து விட்டான்.

"ஒஸ்ரியா அரசு என்னோடு பேச்சு நடத்த வேண்டுமானால், லிபியாத் தூதர் அல்-கடாம்ஸி மத்தியஸ்தராக இருக்க வேண்டும்" என்று நிபந்தனை போட்டான்.

செயலக ஊழியர் ஒருவரை விடு



"நீங்கள் ஏன் முன்வந்தீர்கள்? சந்தேகம் வராதா?" என்றான் கார்லோஸ்.

"வருகிறதோ இல்லையோ, ஒஸ்ரியா அரசு உஷாராவதற்கு இடையில் உங்களை இங்கிருந்து வெளியேற்ற வேண்டும். இல்லாவிட்டால் திட்டம் முழுவதும் பாழகிவிடும்." என்றார் தூதர்.


அடுத்துவந்த மணித்தியாலங்களில் காரியங்கள் துரிதமாக நடந்தன.

வியன்னா விமான நிலையத்தில் டி.சி.9 விமானம் தயாராக நிறுத்தப்பட்டது.

ஒபேக் செயலகம் முன்பாக பெரிய உடம்போடு பஸ் ஒன்று வந்து நின்றது.

●●

ஒஸ்ரியா அதிபர் முன்பாக வெளிநாட்டு



கார்லோசின் தோற்றங்களில் ஒன்று

"எமது அமைச்சருக்கு என்ன நடக்குமோ என்று எனது நாடு எரியும் எண்ணெய்க் குதமாகிக் கொண்டிருக்கிறது அதிபர் அவர்களே!"

"புரிகிறது.... உங்கள் உணர்வு புரிகிறது. நாங்களும் தூங்காமல் இருந்து நகம் கடித்து துப்பிக்கொண்டு லிபியா தூதரை தேடிக் கொண்டு.. ஒ.. நமது நாட்டிலா இப்படி நடக்க வேண்டும்? லிபியா தூதரை மத்தியஸ்தராகக் கேட்கிறார்கள். அவர் நாட்டில் இல்லை. நேரம் நழுவிக் கொண்டிருக்கிறது."

"அப்படியா கேட்கிறார்கள்...? அதிபர் அவர்களே! உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நான் மத்தியஸ்தம் செய்யத் தயார். அவர்கள் உடன்படுவார்களா?"

கார்லோஸுக்கு வோக்கிடோக்கியில் தகவல் சொல்லப்பட்டது. வேண்டுமென்றே தாமதித்து, யோசித்து, மனதுக்குள் சிரித்துக் கொண்டு, 'பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டவருகிறதா' ஈராக் என்று நினைத்துக் கொண்டு, "சரி, சம்மதம். அவர் நேர்மையாக நடந்து கொள்ளவேண்டும். தவறினால் ஈராக் அமைச்சர் என் கையால் செத்துப் போவார்" என்றான் கார்லோஸ்.

"தூதர் வருகிறார்" என்று வோக்கி டோக்கியில் சொன்னார்கள்.

"வரட்டும். தனியாக வரவேண்டும்." என்றான் கார்லோஸ்.

"கார்லோஸின் கோரிக்கைகளை உடனே நிறைவேற்றுங்கள். என்ன கேட்கிறான், பணமா? கொடுக்கலாம். விமானமா? கொடுங்கள்! எமது பிரதிநிதிகள் திரும்பக் கிடைத்தால் போதும்." எண்ணெய்வள நாடுகள் ஒஸ்ரியா அரசுக்கு திட்டவட்டமாக அறிவித்துவிட்டன.

கார்லோஸை தனியாக வந்து சந்தித்த ஈராக் தூதர் அந்தத் தகவலை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

தூதர்கள் சற்று பதட்டத்தோடு அமர்ந்திருந்தனர்.

வியன்னாவில் இருந்து புறப்படும் விமானம் தரையிறங்க எந்த நாடு சம்மதிக்கப் போகிறது என்பதுதான் பிரச்சனை.

முதலில் மறுத்தது ஈராக். தொடர்ந்து ஏனைய நாடுகளும் கைவிரித்துவிட்டன.

இறுதியில் அல்ஜீரியா முன்வந்தது. கார்லோஸ் லிபியா செல்ல வேண்டும் என்று பொய்யாக அடம்பிடித்தான்.

லிபிய அதிபர் கடாபி சீறியதால், ஒஸ்ரியா அரசு கார்லோஸுக்கு நிலைமையை விளக்கியது.

●●

காலை 7 மணி. பணயக்கைதிகள் அனைவரும் கார்லோஸ் முன்பாக நிறுத்தப்பட்டனர்.

ஒரு நொடியில் உலகப் பொருளாதாரத்தையே தலைகீழாக மாற்றக் கூடிய பிரதிநிதிகள் தன் முன்னால் எத்தனை பவ்வியமாக நின்று கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்தான் கார்லோஸ்.

செயலக ஊழியர்கள் உட்பட 35 பேரையும், செயலக நூல் நிலையத்தில் போய் இருக்குமாறு சொன்னான். அவர்கள் திகிலோடு பார்த்தார்கள்.

"பயப்படவேண்டாம்! உங்கள் உயிரை எடுக்கப் போவதில்லை, பொலிசார் வந்து உங்களை பொறுப்பெடுப்பார்கள். அதுவரை வெளியே வரக்கூடாது."

11 எண்ணெய் வள நாடுகளது அமைச்சர்கள் உட்பட 35 பேரை மட்டும் பஸ்ஸில் ஏறச் சொன்னான்.

பஸ் புறப்பட்டது. கார்லோஸ் குழுவினர் பஸ்ஸில் இருந்தபடி, தாம் பின் தொடரப் படுகிறோமோ என்று நோட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

விமான நிலையத்தில் பஸ்ஸிலிருந்து குதித்த கார்லோஸ் குழுவினர் துப்பாக்கிகளோடு அரணாக நின்று கொண்டிருக்க, 35 பேரும் விமானத்தில் ஏறிக் கொள்ள; கார்லோஸும், அவன் குழுவினரும் இறுதியாக உள்ளே ஏறிக் கொண்டார்கள்.

கார்லோஸ் விமானியின் அருகில் போய் அமர்ந்துகொண்டு, "புறப்படலாம்"

நேரம்-9.14.காலை. விமானம் ஓடுபாதையில் முத்தமிட்டு தவழ்ந்து, மெல்ல மெல்ல உயர்ந்து, தரையை நழுவவிட்டு வான் பரப்பை வசப்படுத்திக் கொண்டது.

கார்லோஸ் திரும்பி சவுதி அமைச்சர் யமானி யையும், ஈரான் அமைச்சரையும் பார்த்த பார்வையில் இருந்த அர்த்தம் அப்போது யாருக்கும் புரியவில்லை.

"ஒபேக் ஒப்பரேசனின் முதல் கட்டம் வெற்றி. இரண்டாம் கட்ட வெற்றிதான் எனக்கு முக்கியம்" என்றார் ஈராக்கில் தனது அலுவலகத்தில் இருந்த சதாம் உசேன்.

**(அபாயமான இரண்டாம் கட்டம் அடுத்தவாரம்)**



**பணயக் கைதிகள் பஸ்ஸில் பயணம்.**
**பின் விமானத்தில் ஏற்றப்படுகின்றனர்.**

# சத்தமில்லாமல் 37 கொலைகள்

வயது 45. செய்த கொலை-37.

அவனது பெயர் மோகப் ஷாக். பிரேசில் நாட்டைச் சேர்ந்தவன்.

பதின்மூன்று வயதுச் சிறுமி முதல் முப்பது வயது பெண்வரை முப்பத்தியேழு பேரை கொடூரமாக வெட்டி பல துண்டுகளாக்கி விட்டான்.

முப்பத்தியேழு கொலைவரை பொலிசாரின் பார்வை அவன்மீது படவேயில்லை என்பதுதான் ஆச்சரியம்.

முப்பத்தியெட்டாவது கொலை முயற்சியின் போதுதான் பொலிசாரிடம் வசமாக மாட்டிக்கொண்டான்.


நாலு தட்டு தட்டியதில் கடந்தகால கொலை வரலாற்றை ஒப்புவித்தான். வழக்கு நீதிமன்றத்திற்கு போனது. தூக்குத்தண்டனை நிச்சயம் என்று நம்பப்பட்டது.

ஆனால் நிதிபதிக்கு ஒரு யோசனை வந்தது. இத்தனை வெறித்தனத்திற்கு காரணம் என்னவென்று மூளை மருத்துவர்களை ஆராயச் சொல்லிவிட்டார்.

மருத்துவர்கள் அவனது மூளையை ஸ்கேன் செய்து பார்த்ததில் மூளையிலுள்ள நரம்புகளில் வெறி, ஆத்திரம், பழிவாங்கும் உணர்ச்சிகள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

அதன்பின்னர் அமெரிக்க மூளை மருத்துவநிபுணர்கள் மூலம் அவனது மூளை நரம்புகளை பலமிழக்கச் செய்யும் சிகிச்சை செய்யப்பட்டது.

வெறியுணர்ச்சி குறைந்துவிட்டதால் ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார் நீதிபதி. சிறையில் பரமசாதுவாக இருக்கிறான் 'மோகப் ஷாக்'. மருத்துவ உலகம் எந்தளவுக்கு முன்னேறிவிட்டது பாருங்கள்.



மூளையில் செய்யப்பட்ட சிகிச்சைக்குப் பின்பு.

# ஹலோ டாக்டர்



**"வணக்கம் டாக்டர்! உண்ட களை தொண்டருக்கும் உண்டு என்பார்கள். நீங்கள் தூங்கவில்லையா டாக்டர்."**

"இப்போதுதான் மதிய உணவு மெல்லப் பிடித்தேன். உண்டவுடன் தூங்குவது உடல் நலத்துக்கு ஏற்றதல்ல. இப்பழக்கம் உடையவர்களுக்கு உடல் பருக்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன."

**"அது ஏன் டாக்டர்?"**

"தூங்கும்போது மிகக் குறைந்த அளவு சக்திதான் செலவாகும். இதனால் உணவுச் சத்துக்கள் யாவும் தோலடிக் கொழுப்புத் திசுவிலும், தசைத் திசுக்களிலும் சேமித்து வைக்கப்படுகின்றன. அதனால் உடல் பெருத்துவிடும்."

**"சூரியக் குளியல் உடல் நலத்துக்கு உகந்ததுதானே டாக்டர்? இல்லாவிட்டால் வெள்ளைக்காரர்கள் நம் நாட்டு கடற்கரைகளில் வந்து மிகக் குறைந்த ஆடைகளோடு சூரியனை தேடுவார்களா?"**

"அதையும் கவனிப்பீரோ நீர்? சூரிய

## இரண்டு கைவைத்தியம்

ஒளியில் உள்ள புறக்கதிர் வீச்சில் விட்டமின் டி நமக்குக் கிடைக்கிறது. அதனால் நாள் தோறும் சிலமணிநேரம் சூரிய ஒளி படுமாறு நிற்பது நல்லதே. அதற்காக கடும் வெய்யிலில் நிற்கக் கூடாது."

**"டாக்டர், கடுமையான இருமலுக்கு ஒரு கைவைத்தியம் சொல்லுங்கள் பார்க்கலாம்?"**

அடிமடியிலேயே கைவைக்கிறீர்கள். என்றாலும் சொல்கிறேன். எள், இஞ்சி, வெல்லம் ஆகியவை கைவசம் இருந்தால் போதும். ஒவ்வொன்றிலும் 25 கிராம் எடுத்துக்கொண்டு அவற்றை சேர்த்து வைத்து அரைத்து ஒரு, எலும்மிச்சம் பழம் அளவுக்கு உருட்டி இரண்டு மூன்று வேளை சாப்பிட்டுப் பாருங்கள். இருமல் குணமாகிவிடும்."

**"டாக்டர், நீங்கள் ஒரு பொதுநலவாதி! இன்னொரு கைவைத்தியம் சொல்லுங்களேன்?"**

"தோல் நீக்கிய வெள்ளைப் பூண்டுகள் பத்து எடுத்து நசுக்கி, ஒரு தக்காளிப் பழத்துடன் சிறிது உப்பு சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். இந்த சூப்பை இரவு படுப்பதற்கு முன் அருந்தினால் காலையில் வயிற்றில் உள்ள கீரை பூச்சிகள் செத்து வெளியேறிவிடும்."

**"நன்றி டாக்டர்"**

# குறட்டையோ குறட்டை

தூங்கப் போகிறேன் என்று சிலர் சொல்லத்தான் செய்வார்கள். மறு நிமிடம் குறட்டைச்சத்தம் கர்..புர்..புர்..ரென சங்கீத ராகத்தில் (?!) ஒலிக்கத் தொடங்கிவிடும்.

குறட்டையாளர்களுக்கு ஒரு சந்தோசமான சமாச்சாரம். குறட்டை விடுபவர்கள் தொடர்பாக ஒரு கணிப்பு நடந்ததாம்.



4 பே[illegible] என்ற வீதத்தில் குறட்டையாளர்களின் எண்ணிக்கை இருப்பதாக அந்தக் கருத்துக் கணிப்பு அடித்துச் சொல்கிறது.

இன்னொரு ஆராய்ச்சி என்ன சொல்கிறது தெரியுமா? ஆண்கள் விடும் குறட்டையானது கர்ண கொடூரமாக-புலி உறுமுவது போல இருக்குமாம். பெண்கள் விடும் குறட்டையானது அவர்களைப் போலவே மென்மையாக இருக்குமாம்.

இங்கிலாந்தில் வாழ்ந்த ஒருவர் விட்ட குறட்டையைப் பற்றி பிரபலமாகப் பேசப்படுகிறது. மோட்டார்சைக்கிளை ஸ்டார்ட் செய்து ரெய்ஸ் செய்தால் எப்படியிருக்குமோ அப்படியே இருந்ததாம். இப்படியெல்லாம் குறட்டை விட்டால் மனுஷன் எப்படித் தூங்க முடியும்?

இதனால்தான் ரயில் பயணங்களில் குறட்டைவிடும் ஆசாமிகளைக் கண்டு பலரும் அலறி அடித்துக் கொண்டு ஓடுகின்றனர்.

இனி எதிர்காலத்தில் இத்தகைய அவல நிலை இருக்காது. அதற்கு தீர்வு காணும் வகையில் அமெரிக்காவில் குறட்டைக்கு லேசர் சிகிச்சை முறை வந்துவிட்டது.

இந்த சிகிச்சையின்போது நாக்கின் உட்பகுதியில் சில மாற்றங்களை ஏற்படுத்துவார்கள். இதனால் குறட்டை ஒலி நின்றுவிடும்.

இந்த சிகிச்சை முறைக்கு அமெரிக்காவில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. சிகிச்சை பெறுபவர்களில் 85 வீதமானோர் குறட்டையின்றி நிம்மதியாக இருக்கிறார்களாம்.

இந்த லேசர் சிகிச்சை மிக எளிதானதாம். பல் வலிக்கு சிகிச்சை பெறுவது போல சிகிச்சை பெற்று விட்டு 'வீடு திரும்பிவிடலாம்.

# அட.... அப்படியா

கண்ணீர் புகைக் குண்டுகளைப் போல தும்மல் குண்டுகளை தென் ஆபிரிக்கப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். கூட்டங்களை கலைக்க அந்தக் குண்டுகளைப் பயன்படுத்துகிறார்கள். குண்டுகள் வெடித்ததும் புகை கிளம்பும். புகையில் ஒருவித நெடி இருக்கும். புகைபட்டதும் எல்லோரும் 'ஆச், ஆச்' என்று தும்முவார்கள். கோஷம் போட நேரமிருக்காது.

● இந்தியாவில் டில்லியில் உள்ள குப்தா என்பவர் பழைய ரூபாய் நோட்டுக்களை சலவை செய்ய ஒரு கடை ஆரம்பித்தார். அமோக வரவேற்பு. இப்போது 36 கிளைகள் திறந்துவிட்டார். கிழிந்த நோட்டுக்களை பக்குவமாக ஒட்டியும் கொடுக்கிறார்கள். இங்கும் யாராவது முயலலாமே!

“தக்கன பிழைக்கும் தகாதன அழியும்” என்பது சாள்ஸ்டாவின் சொன்ன பரிணாம வளர்ச்சித் தத்துவம். ஜெர்மனில் ஹிட்லரின் ஆட்சியில் ஆரியர் தவிர ஏனைய இனங்களுக்கு அத்தத்துவம் பயன்படுத் தப்பட்டது. ஹிட்லர் கொன்று குவித்தது யூத மக்களை மட்டுமல்ல.

ஆடியும், பாடியும் பிழைப்பு நடத்திக் கொண்டு நாடோடிகளாகத் திரிந்த ஜிப்ஸி இன மக்களும் ஹிட்லரின் படைகளிடம் இருந்து தப்ப வில்லை.

புகைப்படத்தில் பாருங்கள் எவ்வளவு குதூகலமாக போஸ் கொடுக் கிறார்கள். அத்தனை பேரும் ஜிப்ஸிகள். ஒரு பாடல் குழுவைச் சேர்ந்த வர்கள். 1939 இல் இவர்கள் அத்தனைபேரும் ஹிட்லரின் படையால் கைது செய்யப்பட்டனர்.

ஆண்களின் உறுப்புக்கள் சிதைக்கப்பட்டன. (குடும்பப் பெருக்கத்தில் ஈடுபடக்கூடாது என்ற எச்சரிக்கை) பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுத் தப்பட்டனர். இறுதியில் ஒரு அறைக்குள் போட்டு நச்சுவாயுவைச் செலுத்தி கொன்றுவிட்டார்கள். பயன் படுத்திவிட்டு அழித்துவிடும் வக்கிரம்!

புகைப்படத்திலிருக்கும் ஒரு பெண்ணைத் தவிர அனைவரும் நச்சுப் புகைக்கு பலியானார்கள். அவளை மட்டும் வேறு ஒரு முகாமுக்கு கொண்டு சென்று வைத்திருந்தார்கள். ஹிட்லர்


அன்னா - படத்தில் வட்டமிடப்பட்ட சிறுமியாக.



# சாவின் விளிம்பிலிருந்து மீண்ட பெண்

தோல்வியைத் தழுவியபோது அவள் சாவின் விளிம்பிலிருந்து அதிஷ்ட வசமாகத் தப்பிக் கொண்டாள். அவளது பெயர் அன்னா மரியா.

தற்போது அன்னாமரியாவுக்கு 70 வயது. இப்போதும் அவரால் பறிபோன உறவுகளை மறக்க முடியவில்லை.

மொத்தமாக 25 ஆயிரம் ஜிப்சிகள் ஜெர்மனியில் மட்டும் கொல்லப்பட்டார்கள்.

## ரொம்பச் சிறுசு

உலகில் இன்றைய திகதிவரை மிகச் சிறிய சைக்கிள் இதுதான். 14 அங்குல நீளம் மட்டுமே உள்ள இந்தச் சைக்கிளுக்கு உரிமையாளர்கள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜக்ஸ் தம்பதியினர். கின்னஸ் புத்தகத்தில் சைக்கிளோடு இடம்பிடித்துவிட்ட பூரிப்பு முகத்தில் தெரிகிறதல்லவா!



# நான்கு முதல்வர்கள்

இது ஒரு அபூர்வமான புகைப்படம். நான்கு பேருமே முதல்வர்கள். கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஜெயலலிதா. சரிதான் மூன்றுபேர்தானே என்கிறீர்களா? சிவாஜி மட்டும் என்னவாம், நடிப்புலக முதல்வர் தானே! எம்.ஜி.ஆர், ஜெயலலிதா நடிக்க, கலைஞர் கருணாநிதி தயாரித்த ‘எங்கள் தங்கம்’ படத்தின் நூறாவது நாள் விழாவில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. மிக்க இளமையாக ஜெயலலிதா! இப்படியான புகைப்படங்கள் கிடைப்பது அரிதிலும் அரிது தானே!






# கேட்டார்கள்-கிடைத்தது ஒருவித்தியாசமான திரட்டல்

யுத்தம் என்றால் மக்களிடம் திரட்டலும் இருக்கும். நம்நாட்டில் கூட அரசு பாதுகாப்பு நிதி திரட்டுகிறது. புலிகளும் திரட்டுகிறார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது பிரிட்டனில் என்ன சேகரித்தார்கள் தெரியுமா? “வீட்டில் பாவித்துவிட்டு வீசிய அலுமினிய பாத்திரங்கள் மற்றும் தகரப் பொருட்கள் இருந்தால் தாருங்கள். பெரிய உதவியாக இருக்கும்” என்று கேட்டார்கள்.

பெண்கள் முண்டியடித்துக் கொண்டு வந்து தமது வீட்டில் கிடந்த நல்ல பாத்திரங்களைக் கூட அள்ளிக்கொடுத்தார்களாம். படத்தில் உள்ள வண்டியில்தான் வீதி வீதியாகப் போய் பிரிட்டிஷ் அரசு அலுமினியப் பாத்திரங்களை சேகரித்தது.

சரி; அலுமினியப் பாத்திரங்கள் ஏன் என்று தெரியுமா? ஆயுதங்களும், தோட்டாக்களும், குண்டுகளும் தயாரிக்கத் தான்!





# மரத்தின் மேல் ஒரு வியப்பு

தமிழ் நாட்டைச் சேர்ந்த அய்யப்பனுக்கு 23 வயது. யாரும் இதுவரை செய்யாத சாதனை ஒன்றைப் படைத்திருக்கிறார் அய்யப்பன்.


42 அடி உயரமுள்ள தென்னை மரத்தில் 4 நிமிடம் 58 நொடிகளில் தலைகீழாக ஏறிச் சாதனை படைத்துள்ளார்.

ஆயிரக்கிணக்கான மக்கள் முன்பாக இந்தச் சாதனையை செய்து காட்டினார் அய்யப்பன்.

அடுத்ததாக தலைகீழாக கையும், முதுகும் கொண்டு (பின்புறமாக) பனைமரத்தில் ஏறுவதுதான் தனது இலட்சியம் என்கிறார்.

தென்னையில் தலைகீழாக ஏற மூன்றுமாதம் கடுமையாகப் பயிற்சி செய்தாராம் அய்யப்பன்.

கராட்டி மற்றும் யோகாசனப் பயிற்சியிலும் அய்யப்பனுக்கு நல்ல தேர்ச்சி இருக்கிறது. படத்தில் அய்யப்பனுடன் அவரது பயிற்சியாளர் கெ.நடராஜன்.



ஜெயராம்-சுகன்யா படம்- பரிவட்டம்

## காதோடு சொல்லுகிறேன்

தமிழில் இருந்து ஹிந்திக்குப் போன 'தேவி'யின் ... நடிகையும் நடிக்கவந்தார். வெள்ளைக்கு எதிரான அம்... நடித்தார். பின்னர் தமிழில் 'நோ சான்ஸ்', தெலுங்... போனார். அங்கு மார்க்கெட்டைப் பிடித்தாரோ இல்லை... ஹீரோவின் மனதில் இடம் பிடித்துவிட்டாராம். அக்கா... பிடிக்காவிட்டாலும் தங்கை திருமணத்திற்கும் ஓ.கே. சொல்லி... பாவம், பதினாறு வயது நாயகி 'தேவி' மனம் நொந்து ...

இளம் நாயகன், அவரது பெயர் குமார் என்று முடி... படங்களில் நடிக்கும் நடிகைகள் மீது 'ஆசை'யோடு நட்பாக்கி... ஏற்கெனவே 'கவா' நடிகையோடு கிசு கிசு வந்தது ... நிலவைக் குறிக்கும் பெயர் உள்ள படத்தில் தன்னோடு நடி... நடிகையோடு பிசினாகிவிட்டாராம்.

சான்ஸ் இல்லாமல் தவித்தபோது 'சுகன்' நடிகைக்கு ... கொடுத்தார் கண்ணாடி போட்ட இயக்குநரும், நடிகருமா... 'சுகன்' நடிகை அதன்பின்னர் பல படங்கள் கிடைத்... முதலில் ஒப்புக் கொண்ட படத்தில் நடிக்க உரிய நே... வில்லையாம். நடிகைகளே இப்படித்தான் என்று ஞானம் ... பேசுகிறார் பாக்யராஜ். ஞானப்பழமும் கொடுத்துவிட்டார் ந...

முகப்பில் இந்த
சரத்குமார் (மகாபிரபு)

## ரகுமான் இசையில் ஜேசுதாஸ்

ஏ.ஆர்.ரகுமான் இசையில் ஜேசுதாஸ், ஜானகி இருவரும் பாடவேயில்லையே என்று கவலைப்பட்ட...களுக்கு ஒரு நல்ல தகவல். ஜேசுதாஸ் இந்தியன் படத்தில் பாடியிருக்கிறார். ஜானகி 'ரங்கீலா' தமிழில் பாடுகிற... ஏ.ஆர்.ரகுமானைப்பற்றிய தலைப்பட்ட ஒரு செய்தி மனைவியோடு வெளியில் செல்லவே நேரம் கிடைப்பதில்லை...

"உங்களுக்கு எல்லா சந்தோஷங்களும் கிடைத்து விடுவதில்லை" என்கிறார் ரகுமான். சாதனைக்காக இழப்புகளை சந்திக்க வேண்டும்தான்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா ஏ.ஆர்.ரகுமானின் பரம ரசிகை. ரகுமானுக்கும் அவரைப்பிடிக்குமாம். ஆனால் அரசியல் ரசிகர் அல்லவாம். ரகுமான் சாமர்த்தியசாலி!

## வசூலை அள்ளித் தா

'உள்ளத்தை அள்ளித்தா' படம் வெளியாகிவிட்டது. கார்த்திக்கைவிட ரம்பாதான் முன்னே தெரிகிறார். நன்றே தெரிகிறார். அமர்க்களமான கவர்ச்சி. அட்டகாசமான நெருக்கம். வசூலை அள்ளித்தா என்று இயக்குநர் சுந்தர் ரம்பாவை மிக நன்றாக உபயோகித்துள்ளார் காதல் காட்சிகளில்.

படம் ஓடினாலும், ஓடாவிட்டாலும் ரம்பாவின் மார்க்கெட் தமிழில் சூடுபிடிக்கப்போவது உள்ளங்கை நெல்லிக்கனி.

## ஆவேசத்தில் சத்யராஜ்

தூரியன் தொலைக்காட்சியில் கடந்தவாரம் ஒளிபரப்பான படம் 'முறை மாப்பிள்ளை' தமிழ்நாட்டில் வசூலுக்குப் பாதகமில்லாமல் ஓடுகிறது. கதாநாயகன் அருண்குமார் விஜயகுமாரின் மகன். ஆவேசப்படும் போது அசல் அந்தக்கால சத்யராஜ் போல இருக்கிறார். அழும்போது அப்பா விஜயகுமாரை உரித்துவைக்கிறார். நன்றாக சண்டைபோடுகிறார். நல்ல உடம்பு. சிறந்த எதிர்காலம் இருக்கிறது. 'பிரியம்' படம் அடுத்து வரப்போகிறது. அதுவும் ஓடினால் கிடுகிடுவென்று வளர்ந்து மார்க்கெட்டைப் பிடித்துவிடுவார்.

உங்களை மாதிரியே ஒரு ஹீரோ வந்துவிட்டார் என்று சத்யராஜிடம் சொன்னார்களாம்.

அதற்கு சத்யராஜ் என்ன சொன்னார் தெரியுமோ? "அந்தக் காலத்தில் விஜயகுமார் நடித்த 'பொண்ணுக்கு தங்க மனசு' படம் பார்த்துவிட்டு நண்பர்கள் சொன்னார்கள், 'நீ விஜயகுமார் மாதிரியே இருக்கிறாய்' என்று. அதனால்தான் எனக்கு நடிக்கும் ஆசையே வந்தது. இப்போது பெரிய ஹீரோவா இருக்கிறேன். அது மாதிரி அருண்குமார் என்னை மாதிரியே இருப்பதாகச் சொல்கிறீர்கள். அவரும் வளர்ந்து பெரிய ஹீரோவாகட்டும்" என்றாராம். வெள்ளை மனசு.

## பம்பாய் அழகிகள்

நெப்போலியனுக்கு 'ராஜாளி' படத்தில் வித்தியாசமான தோற்றம் கொடுத்திருக்கிறார்கள். பம்பாய் அழகி அனுராதா ஜோடியாக நடிக்கிறார். என் என்றால் என்னெண்ணவோ கவர்ச்சிக் காட்சிகளில் இயக்குநருக்கு ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார். ஆர்.கே. செல்வமணிதான் தயாரிப்பாளர். ஆனால் படத்தில் ரோஜா கிடையாது. மற்றொரு நாயகன் ராம்கி. அவருக்கு ஜோடி நீனா. அவரும் பம்பாய் அழகிதான். வில்லன் மன்சூரலிகான். பம்பாய் அழகிகள் போதாது என்று, சில்க் சுமிதா, விசித்ரா, டிஸ்கோ சாந்தி, அனுஷா என்று ஒரு கவர்ச்சி நடிகைகளின் பட்டாளமே படத்தில் நடிக்கிறது. ஆதலினால் சகலமானவர்களும் அறியவேண்டியது யாதெனில் கதையைவிட சதையை நம்பி 'ராஜாளி' தயாராகிறது. இயக்கம்: வேலு பிரபாகர்.


நெப்போலியன்-அனுராதா படம்- ராஜாளி

## ரஜினி - துரோணர், சரத் – ஏகலைவன்

ரஜினி அரசியலுக்கு வருவாரா மாட்டாரா என்ற புதிருக்கு விடைகிடைக்க முன்னர் அரசியல் அரங்கில் புகுந்து விளையாடத் தொடங்கிவிட்டார் சரத்குமார்.

ரஜினிதான் என் தலைவன் என்று சட்டையைத் திறந்து நெஞ்சைக் காட்டுகிறார். ரஜினி இதயத்தில் இருக்கிறாராம். துரோணரை குருவாக நினைத்து ஏகலைவன் வில்வித்தை பயின்றது தெரியுமல்லவா. அதுமாதிரி ரஜினியை குருவாக நினைத்துக்கொண்டு ஜெயலலிதாவை நோக்கி சொல் அம்பு தொடுத்து அரசியல் வித்தையில் தேறிவருகிறார் சரத்குமார்.

ரஜினியை சந்தித்தும் சரத்குமார் பேசியிருக்கிறார். ரஜினியின் மனதைப் புரிந்து கொண்டுதான் காங்கிரசுக்கு சார்பாக சரத்குமார் பேசிவருகிறார் என்கிறார்கள்.

ரஜினியும் சரத்குமாரும் கூட்டாக தேர்தல் பிரசாரத்தில் இறங்கினால் வெற்றி அருகில்தான் என்று நினைக்கிறது காங்கிரஸ் கட்சி.

ரஜினியும் பழம்பெரும் அரசியல் தலைவர்களைவிட ஊழல் கறைபடியாத புதியவர்களை தன்னோடு இருப்பதையே விரும்புகிறார். சரத்குமாருக்கு அந்தத் தகுதி இருக்கிறது.

ரஜினி-சரத் இணைந்து புதிய கட்சி ஆரம்பித்தால் மேலும் சில நடிகர்கள் அதில் சேரத்தயார் என்று பச்சைக் கொடி காட்டிவிட்டார்கள்.

சரத் புகுந்துவிட்டார்.

ரஜினி... புரியாத புதிர்.

## பரம்பரையின் அறுவடை

தைப்பொங்கல் படங்களில் 'பரம்பரை' ஹிட்டாகியிருக்கிறது. நாட்டாமை பட இயக்குநர் கே. எஸ். ரவிக்குமாருக்கு மற்றொரு முத்திரைப்படம். இடையிலே 'முத்து' அவர் இயக்கத்தில் வந்து சூப்பர் ஹிட்டாக ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் அதில் முழுக்க, முழுக்க ரஜினி முத்திரை.

பரம்பரையில் பிரபுவிடம் சிவாஜியின் பாதிப்பு தெரிகிறது. அந்த வில்லனிடம் அப்பட்டமாக சத்யராஜ் ஒளிந்திருக்கிறார். வசன உச்சரிப்பில் சத்யராஜை நூறு விதம் காப்பியடிக்க முயன்றுள்ளார். 70 விதம் வெற்றி. வில்லனாக அறிமுகமாகியிருப்பவர் நடன இயக்குநர் தருண்லால். ரோஜாவுக்கும் மார்க்கெட்டைத் தக்கவைக்க உதவியுள்ளது. இதுவரை வசூல் திருப்தி. பிரபுவுக்கும் மகிழ்ச்சி.

## அவரும் காத்திருக்கிறார்

ரஜினிக்காக தயாரிப்பாளர்கள் பட்டாளம் கால் வலிக்கக் காத்துக்கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. இன்னொருவரும் காத்திருக்கிறார். அவர்தான் இசையமைப்பாளர் தேவா. ரெடியாக இருங்கள் தேவா என்றாராம் ரஜினி. பலரகமான மெட்டுக்களோடு அழைப்புக்காகக் காத்திருக்கிறார்.

தேவா பற்றி மற்றொரு செய்தி. ஏ.ஆர்.ரகுமான், எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா என்று மூவரில் ஒருவரது பாணியில் இசை தேவை என்று இயக்குநர்கள் கேட்டால் கோபப்படவே மாட்டார். பக்குவமாகப் போட்டுக்கொடுத்துவிடுவார்.

## கிண்டல் காதல்

ஞானப்பழம், பரிவட்டம் இரண்டிலும்தான் மனைவியாக நம்பிக்கொண்டிருக்கிறார் சுகன்யா. அப்படியானால் இந்தியன்? என்று கேட்பீர்கள். அதில் வயதான வேஷம் தானே. பரிவட்டம் படத்தில் ஜெயராமை மடக்க சுகன்யா ஏவிவிடும் காதல் அஸ்திரம் கிண்டல். அவரது கிண்டலில் மயங்கிய ஜெயராம் படு சீரியஸாக காதலிக்கத் தொடங்கிவிடுகிறாராம். (படத்தில் மட்டும்தான்)


கார்த்திக்-ரம்பா படம்- உள்ளத்தை அள்ளித்தா

## 21ம் நூற்றாண்டில் காதல்

குட்டி அரவிந்தசாமி என்றழைக்கப்படும் அஜித்குமார் புதிதாக நடிக்கும் படம் 'வெண்ணிலா'. அஜித்குமாருக்கு ஜோடி ரேஷ்மா.

21ம் நூற்றாண்டில் கல்லூரி மாணவர்களுக்கிடையே காதல் எப்படியிருக்கும் என்பதை சொல்லப்போகிறார்கள்.

ரேஷ்மாவுக்கு உதட்டோடு உதடு பதித்து முத்தம் கொடுக்கிறார் அஜித். 'குடும்ப புனலுக்கு' பின்னர் வந்த துணைகள். ரேஷ்மா கிழக்கு முகம் படத்தில் கார்த்திக் ஜோடியாக நடித்தவர். இப்போது அஜித்குமாரிடம் உதட்டில் வாங்கியிருக்கிறார். அனேகமிடம் தொடர்ந்து முத்தம்.

## சிவாஜிக்கே கட்?

ஒரு காட்சியில் சிவாஜி உணர்ச்சிகரமாக தனது பாணியில் ... திருத்திவிட்டார். அத்தோடு விட்டாரா? "வெட்டாதீங்க... சொல்..." என்றாராம். படப்பிடிப்புக் குழுவினரே அப்செட்டாகிவிட்டார்கள்... ராம் சிவாஜி. இனி படம் வளராது. எடுத்த காட்சிகளை தூக்கிப் ...

## ...மணிநேரத்திற்கு 2 இலட்சம்

கவுண்டமணி-செந்தில் இருவரும் தமது ...ம்பளத்தை எட்டாத உயரத்திற்கு கொண்டு போய் ...விட்டார்கள். கவுண்டமணி 8 மணிநேரம் நடிக்க ...கட்டும் ஊதியம் இரண்டு இலட்சம். செந்திலுக்கு ...ரு லட்சம். (8 மணிநேரத்திற்கு) அதனால் சார்லி ...போன்றவர்களை தேடி தயாரிப்பாளர்கள் செல்கிறார்கள்.

## ...போட்டியில் நால்வர்

இந்த ஆண்டு நான்கு இளம் கதாநாயகர்கள் ...த்தியில் பலத்த போட்டி நிலவப்போகிறது. ...ரசாந்த், அஜித்குமார், விஜய், அருண்குமார் ...கிய நால்வரும் களத்தில் குதித்திருக்கிறார்கள். ...ந்தக் குதிரை முன்னே ஓடப்போகிறது என்பது ... வசூல் நிலவரப்படிதான் முடிவு செய்யப்படும்.

## அதே படம்

சத்யராஜ் நடித்து வெற்றி பெற்ற படம் 'வால்டர் ...வற்றி வேல்'. அதனை தெலுங்கில் 'எஸ்.பி.பரசுராம்' ...ன்ற பெயரில் தயாரித்தார்கள். சிரஞ்சீவியும், ...ஸ்ரீதேவியும் நடித்தார்கள். இப்போது அதனை ...மிழில் மொழிமாற்றுகிறார்கள். 'பரசுராம்' என்ற ...பெயரில் வரப்போகிறது.



நாசர்-ஊர்வசி படம்: அருவா வேலு



## வித்தியாசமான பூவரசன்

கார்த்திக்கின் மனேஜர் தயாரிக்கும் படம் பூவரசன். இயக்கம், கோகுல கிருஷ்ணா. பூவரசன் படம் வித்தியாசமான படமாக இருக்கும் என்று அடித்துச் சொல்கிறார் கார்த்திக். இந்த வருடத்தில் எப்படியாவது ஒருபடம் இயக்கியே தீருவது என்ற முடிவில் இருக்கிறார் கார்த்திக். கடந்த வருடம் பல படங்கள் காலைவாரிவிட்ட போதும், 'தொட்டாச் சிணுங்கி' படத்தில் தனது நடிப்பு பாராட்டப்பட்டதால் கார்த்திக்குக்கு பரம சந்தோசம்.

## மம்முட்டிக்கு 4 படம்

கடந்தவருடம் மம்முட்டி தமிழில் நடித்த மக்களாட்சி நன்றாக ஓடியது. அதனையடுத்து தமிழில் நான்கு படங்களில் நடிக்கிறார் மம்முட்டி. 14 கோடி செலவில் உருவாகும் இந்திய மதிப்பு) 'அம்பேத்கார்' படத்தில் மம்முட்டிக்கு அம்பேத்கார் வேடம்.

சாதி ஒடுக்குக்குமுறைக்கு எதிராக போராடிய அரசியல் தலைவர் அம்பேத்கார்.

ஆர்.கே.செல்வமணி இயக்கும் 'படையாட்சி' படத்தில் மம்முட்டிக்கு பொலிஸ் அதிகாரி வேஷம். மக்களாட்சிபோல அரசியல் நெடி வீசும் படம்.

இவை தவிர 'புதையல்', 'மாஸ்டர்' ஆகிய படங்களிலும் நடித்துக் கொண்டிருக்கிறார்.

## இளையராஜா 23

கடந்த ஆண்டில் இசையமைப்பில் இளையராஜாவுக்கும், ரகுமானுக்கும் தான் போட்டி.. முத்து, பம்பாய், இந்திரா என்று மூன்று படங்களுக்கு இசையமைத்தார் ரகுமான். இளையராஜா இசையமைத்தது 23 படங்கள். ஆனால் 1994 இலும், 1995 இலும் அதிக படங்களுக்கு இசையமைத்தவர் யார் தெரியுமா? தேவா! 95இல் தேவா இசையமைத்த படங்கள் 25.

## ரேவதி பட்டினி

பாலு மகேந்திரா இந்தியில் 'மீண்டும் கோகிலா' படத்தை தயாரித்துக் கொண்டிருக்கிறார். அதில் வேலைக்காரப் பெண்ணாக நடிக்கிறார் ரேவதி. அந்தப் பாத்திரத்துக்கு ஏற்ப தனது உடலை மெலியப்பண்ணியிருக்கிறார் ரேவதி. பட்டினி கிடந்து பசியால் மெலிந்து உடலை ஒடுக்கினாராம். சரிதான், ஆனால், அளவுக்கதிகமாகவே மெலிந்துவிட்டதுதான் ஒரு மாதிரியாக இருக்கிறது.

* செல்வா இயக்கும் 'புதையல்' படத்தில் அரவிந்தசாமிக்கு ஜோடியாக நடிப்பவர் இந்தி நடிகை ஷாக்ஷி. இவர் இருவருடங்களுக்கு முன் கைவிடப்பட்ட 'இனியெல்லாம் சுகமே' படத்தில் விக்கிரமன் இயக்கத்தில் கார்த்திக்கிற்கு ஜோடியாக படத்தில் நடிக்க இருந்தவர்.

*தமிழில் புதிய படங்கள் எதிலும் நடிக்காத செண்பகம், தற்போது மலையாளத்தில் 'அம்முவோட அங்கலமார்கள்','கல்தூரவ் ஹைதர் அலி' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

*'பொன்னுமணி' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகிய செளந்தர்யா பொன்னுமணிக்குப் பின் 'முத்துக்காளை','டியர் சன் மருது' ஆகிய படங்களில் நடித்தார். இப்போது இவர் 'சேனாதிபதி', 'புலி பொறந்த மண்ணு' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

*தமிழில் ஒரே நேரத்தில் இருபதுக்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்து வரும் தேவா, மலையாளம் மற்றும் சில தெலுங்குப் படங்களுக்கும் இசையமைக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

*விஜய் நடிக்கும் 'பூவே உனக்காக' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக அஞ்சு அரவிந்த் என்ற மலையாள நடிகை நடிக்கிறார். இதில் இன்னொரு கதாநாயகியாக நடிப்பது சங்கீதா என்பது தெரிந்ததே.

*நவநாகரிகப் பெண்ணாகப் பல படங்களில் நடித்துள்ள நக்மா முதன் முறையாக பிரபுவுக்கு ஜோடியாக நடிக்கும் 'பெரியதம்பி' படத்தில் கிராமத்துப் பெண் வேடமேற்று நடித்து வருகிறார்.

*'மக்களாட்சி' வெற்றிப் படத்தை அடுத்து இரண்டு புதிய படங்களை இயக்கத் திட்டமிட்டுள்ளார் ஆர்.கே.செல்வமணி. இவர் தற்போது நெப்போலியன்- ராம்கி நடிக்கும் 'ராஜாளி' படத்தைத் தயாரித்து வருகிறார்.

*'இதுதாண்டா பொலிஸ்' புகழ் கோடி ராமகிருஷ்ணா இயக்கத்தில் ரோஜா நடிக்கும் 'லத்திசார்ஜ்' என்ற தெலுங்குப் படத்தில் ஜெயராம் நடிப்பதாக அறிவித்தார்கள். தற்போது ஜெயராம் இப்படத்தில் நடிக்கவில்லை.

*'ஆசை' நாயகன் அஜித்குமார் நடிக்கும் புதிய படமொன்றை பஞ்சு அருணாசலம் தயாரிக்கவுள்ளார். 'ஆசை' படத்திற்குப் பின் வசந்த் இயக்கும் இப்படத்திற்கு தேவா இசை.

*ராம்கி-ஊர்வசி-குஷ்பு நடிக்கும் 'இரட்டை ரோஜா' தெலுங்கில் தயாராகி வெற்றி பெற்ற 'சுபலக்னம்' என்ற படத்தின் தமிழ்ப்பதிப்பு ஆகும்.



## கலர் கனவு

நாட்டியப் பேரொளி பத்மினியின் மருமகன்தான் வினீத். 'ஆவாரம்பூ', 'புதிய முகம்', 'ஜாதிமல்லி', 'ஜென்டில்மேன்' போன்ற படங்களில் கடுமையாக உழைத்தும் படவாய்ப்புக்கள் அதிகமில்லை. இப்போது 'காதல்தேசம்' படத்தில் பம்பாய் நடிகை தபுவுடன் ஜோடி சேர்ந்திருக்கிறார். பிரமாண்டமான செலவில், பிரமாண்டமான எதிர்பார்ப்போடு தயாராகும் படம் என்பதால் வினீத் நம்பிக்கையோடு இருக்கிறார். அசத்தலான ஹீரோவாக வலம் வரப்போவது போல கலர் கலராகக் கனவு காண்கிறார்.

'சிறைச்சாலை' படத்திலும் வினீத் நடித்திருக்கிறார்.

## 80 இலட்சம்

முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென் 'ரட்சகன்' படத்தில் நடிப்பது பழைய செய்திதான். ஆனால், ரட்சகனில் நடிக்க சுஷ்மிதா வாங்கியுள்ள சம்பளம் எவ்வளவு தெரியுமா? இந்திய மதிப்பில் 80 இலட்சம். ஹீரோ நாகார்ஜுனும் 80 இலட்சம் வாங்கியுள்ளார். இவ்வளவு தொகையை நாகார்ஜுன் சம்பளமாக வாங்குவது இதுதான் முதல்தடவை.

## அந்த மூன்று பேர்

'அருவா வேலு' திரைக்கு வந்துவிட்டது. நாசரும், ஊர்வசியும் நடிப்பில் போட்டி போட்டு முத்திரை பதித்திருக்கிறார்கள்.

கடந்த வருடத்தைப் போல இந்த வருடமும் தனது நடிப்புக்கு தீனி தேடும் படங்களை மட்டுமே தெரிவு செய்து நடிப்பாராம் ஊர்வசி.

பெண் ரசிகைகள் மத்தியில் நிலையான இடத்தை தக்கவைத்துள்ள நடிகைகளில் முன்னணியில் இருப்பது மூன்றுபேர்: ரேவதி, ஊர்வசி, ராதிகா.

## கலக்கல்

பாரதிராஜாவின் 'அந்திமந்தாரை' படத்தில் அடங்காப்பிடாரி மனைவியாக நடிக்கிறார் சங்கவி. பாரதிராஜா நெகிழ்ந்து போய் பாராட்டினாராம். "படத்தில் நீ ஒரு கலக்குக் கலக்கிவிட்டாய்" என்று சொன்னாராம். காண்பவர்களிடம் சொல்லிப் பூரித்துப் போகிறார் சங்கவி. வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டமா?

## ஹொலிவூட்டில்

மணிரத்னத்தின் அஞ்சலி படத்தில் ஒளிப்பதிவாளராக பணிபுரிந்தவர் மது அம்பட். அவர் தற்போது இரண்டு ஹொலிவூட் படங்களுக்கு ஒளிப்பதிவாளராகியுள்ளார். ஹொலிவூட்டுக்குச் சென்ற முதல் இந்திய ஒளிப்பதிவாளரே இவர்தான்.

## ...ன் வாரிசு

...திரசேகரின் மகன் விஜய் ...வம் வருகிறார். அடுத்து ... மகன் மனோஜ் கதா...கிறார்.

...மனோஜ் எங்கிருந்தார் ...த்திடம் உதவி இயக்குநராக ...த்தான் மகனுக்கு நாட்டம் ...ட்டது. அதனால் தனது ... மகனை நாயகனாக்கப் ...து தற்போது குட்டியுள்ள ... கைது செய்', காதல்

## இயக்கம் - அம்மா!

முன்னாள் கவர்ச்சி நடிகை ஜோதிலட்சுமியை ஞாபகம் இருக்கிறதா? 'முத்து' படத்தில் ஆச்சியாக வந்து ஆடிவிட்டுப் போயிருக்கிறாரே அவர்தான். அவரது மகள் ஜோதி மீனா தாயின் இடத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறார்.

"நடனம் ஆடும்போது எப்படியெல்லாம் மூவ்மெண்ட்ஸ் கொடுத்தா கவர்ச்சியா இருக்கும் என்று அம்மாதான் சொல்லித்தாறாங்க." என்கிறார் ஜோதி மீனா.

...மோகன்லால் இணைந்து நடித்த 'சொர்ண சாமரம்' இடையில் ... காரணம் ஒன்றிருக்கிறது. வெளியே வராமல் இருந்து...து.

...ருந்தாராம். இயக்குநர் 'கட்' சொல்லி படப்பிடிப்பை ...க வேண்டாம். நான் சொல்வது போல் நடியுங்கள்" ...வை ஒன்றை வீசிவிட்டு புறப்பட்டுப் போய்விட்டா...ன. மோகன்லாலும் 'குட்பை' சொல்லிவிட்டார்.

# அறுபதுவரை இளமை

## சுறு சுறுப்பு—சுக மிதப்பு

இளமை நிரந்தரமானது இல்லை தான். அதற்காக இருக்கிற அழகைப் பராமரிக்காமல் விட்டு விடக்கூடாது. கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொண்டால் முப்பது வயதிலேயே நாற்பது போல் தோன்றுவதைத் தடுக்கலாம்.



**தோல் பராமரிப்பு:**

தோல்களில் உள்ள செல்கள் அழிவதும், உருவாவதுமாக இந்தச் செயல் தொடர்ந்து நம் உடலில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தோலைச் சரியான முறையில் பராமரிப்பது எப்படி? வயது வாரியாக சில உத்திகளைப் பார்ப்போம்.

**இருபது முதல் முப்பது வரை:**

தோலைப் பற்றிய அக்கறை இருபது வயதிலேயே வந்து விட்டால் நல்லது. தினமும் ஒரு முறையாவது நீராடுங்கள். அதிகம் குளிர்ந்த தண்ணீர், மிகச் சூடான வெந்நீர் இரண்டையும் தவிர்ப்பது நல்லது. சுத்தம் தான் முதல் அழகு. உங்களுடைய தோலின் தன்மைக்கு ஏற்ற சோப்புக்களையே பயன்படுத்துங்கள். நமக்கே நமது தோலின் தன்மை வறட்சியானதா, எண்ணெய்ப் பசையுள்ளதா என்பது புரிந்து விடும். சரிவரத் தீர்மானிக்க முடியா விட்டால் மருத்துவர்களிடம் கேட்கலாம். எப்போதும் அதிக வாசனையுள்ள சோப்புக்களைத் தவிர்க்கப் பாருங்கள்.

எண்ணெய்ப் பிசுக்குள்ள முகம் பருக்களை வரவழைத்துவிடும். இதைப் போக்கிக் கொள்ள மருத்தவர்களின் ஆலோசனையோடு தகுந்த மருந்துகளை உபயோகப் படுத்துங்கள். வைத்தியரைக் கேட்காமல் கடைகளில் விற்கும் கிரீம்களையோ, அன்டிபையோட்டிக் மாத்திரைகளையோ பாவிப்பது மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தலாம்.

உங்களால் தோலைப்பராமரிக்க முயற்சி எடுக்க முடியாவிட்டால் குறைந்த பட்சம் அதைக் கெடுக்காமல் இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

**முப்பது முதல் நாற்பது வரை:**

முப்பதுகளில் தோல் வறட்சி மட்டுமே நீங்கள் கவலைப்பட வேண்டிய விஷயமாக இராது. கண்களின் கீழே விழ ஆரம்பிக்கும் கரு வளையங்கள் தான் இந்த வயதுகளின் பெரிய பிரச்சனை. ஏனெனில் முகத்தில் இந்தப் பகுதி மிகமிருதுவானது. இதைத் தவிர்க்க மருத்துவர்களால் சிபார்சு செய்யப்படும், 'ஐ' கிறீம், 'ஜெல்' போன்ற வற்றை உபயோகப்படுத்தலாம்.

அதிக நேரம் கண் விழிப்பதும், தேவையற்ற கவலைகளால் குமைவதும் கூட கண்களின் கீழ் கருவளையங்கள் விழக்காரணம். இவற்றையும் தவிர்க்கப் பாருங்கள்.

**நாற்பதிலிருந்து அறுபது வரை:**

இந்த வயதில் 'டோனிங் லோஷன்ஸ்' பயன்படுத்துவதை நிறுத்தி விடுவது நல்லது. அதற்குப் பதிலாக முகத்தில் அடிக்கடி குளிர்ந்த நீரைத் தெளித்துக் கொள்ளலாம். 'உடம்பை இழைக்கப் பண்ணுகிறேன்; என்று ஒரேயடியாக உணவைக் குறைத்து விடக்கூடாது. அதுவே சுருக்கம் விழுவதை துரிதப்படுத்திவிடும். விட்டமின் 'ஏ' இருக்கும் உணவுப் பொருட்களை அவ்வப்போது சேர்த்துக் கொள்ளுங்கள்.

**தலைமுடி**

தோலுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெறுவது தலைமுடி, உங்கள் ஆரோக்கியத்தைக் காட்டும் கண்ணாடியென தலைமுடியைச் சொல்லலாம்.

**இருபதிலிருந்து முப்பது வரை:**

தலைமுடியைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். தேவையானபோது ஷம்பு அல்லது சீயாக்காய் உபயோகப்படுத்திக் கூந்தலை அழுக்கில்லாமல் வைத்துக் கொள்ளுங்கள். பிசுக்குள்ள தலை என்றால் 'கண்டிஷனர்' உபயோகப்படுத்தலாம். ஆறு வாரங்களுக்கு ஒருமுறை பிளவுபட்ட நுனிகளைக் கத்தரித்து அகற்றி விடவேண்டும். அடிக்கடி 'ஹேயார் ட்ரையர்' உபயோகப்படுத்தி அந்தச் சூட்டில் முடியலங்காரம் செய்து கொள்வது கூடாது. இப்படிச் செய்வது நிரந்தரப் பாதிப்பைத் தலைமுடிக்கு ஏற்படுத்திவிடும்.

**முப்பதிலிருந்து நாற்பது வரை:**

இந்த வயதில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நரைமுடி கிளம்பக்கூடும். கருவேப்பிலை போன்ற சில மூலிகைப் பொருள்களுக்கு நரையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உண்டு. உடலில் அதிகம் சேரும் பித்தமும், நரைக்கு ஒரு காரணம். திறமையுள்ள சித்த வைத்தியர்களால் இயற்கையோடு இயைந்த வழியில் நரையைக் குணப்படுத்தும் வழிமுறைகளைத் தெரிவிக்க முடியும். எதற்கும் குறைபாடு என்னவென்பதைப் பரிசோதித்து அறிந்து பின்னர் அதற்கேற்ற வழிமுறைகளைக் கையாள்வது நன்மை பயக்கும்.

**நாற்பதிலிருந்து அறுபது வரை:**

இனிமேல் நரைக்குக் கவசம் போடுவதோ, உதிரத் தொடங்கும் முடிகளைக் காப்பாற்றுவதோ கொஞ்சம் கடினம். தலைமுடிக்கு 'டை' பூசுபவர்கள் 'டை'யைப் பரிசீலித்து விட்டுப் பிறகு போட்டுக் கொள்ள வேண்டும். முழுகிய பின்னர் நன்றாகக் காற்றாடவிட்டு, தளர்வாகப் பின்னிக் கொள்வது முடி குறைவைச் சமாளிக்க உதவும்.

எப்படியானாலும் ஆகிற வயது ஆகத்தான் போகிறது. இருந்தாலும் ஓரளவு இளமைத் தோற்றத்தைத் தக்க வைத்துக் கொள்ள முக்கிய அம்சங்களான தோல் பராமரிப்பும், தலைமுடி பராமரிப்பும் இங்கே விளக்கப்பட்டது. வயதைக் குறைப்பதில் நகங்கள் உட்பட பல விஷயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை என்றாலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை முக்கியமானவை.

இவை தவிர சில ஆசனங்கள் முதுமையை எதிர்த்துப் போராடும் ஆற்றல் உள்ளவை. ஆனால் இத்தகைய ஆசனங்களைத் தகுந்த ஆசான் மூலமாகக் கற்றுக் கொண்டு பயிற்சி செய்வதே நல்லது. இல்லையென்றால் எங்காவது ஏடாகூடமாகச் சுளுக்கிக் கொள்வது நிச்சயம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

# ஆண்களில் பல ரகம்

கண்ணே, மணியே, உயிரின் உயிரே என்றெல்லாம் காதலிக்கும்போது பேசும் ஆண்கள், திருமணத்தின் பின்னர் எப்படி நடந்து கொள்கிறார்கள்.

இதைப்பற்றி சமீபத்தில் ஒரு ஆராய்ச்சியே நடந்திருக்கிறது.

ஆராய்ச்சியின் முடிவில் ஆண்களை மூன்று பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள்.



முதலாவது பிரிவு ஆண்கள் இருக்கிறார்களே அவர்கள் பரம சாதுக்கள். மனைவியைக் காதலிப்பவர்கள். மோகம் முப்பது நாள் ஆசை அறுபதுநாள் என்று சொன்னால் அடிக்க வருவார்கள். வாழ்க்கை முழுக்க காதலித்துக்கொண்டே இருப்பார்கள் மனைவியை!

இரண்டாவது பிரிவு ஆண்கள் இருக்கிறார்களே அவர்கள் கொஞ்சம் சபலம், கொஞ்சம் உறுதி கலந்த படைப்புக்கள். அழகான பெண்களைக் கண்டால் மனதுக்குள் கண்ணடிப்பார்கள். கை நீட்டமாட்டார்கள். மனைவியோடு அன்பாக இருப்பார்கள்.

மூன்றாவது ரகத்தினர்தான் கடைந்தெடுத்த சபலிஸ்டுக்கள். தேவைப்படும்போதெல்லாம் டீ குடிப்பது மாதிரி அவர்களுக்கு செக்ஸ் வேண்டும். பெண் யாராகவும் இருக்கலாம். மனைவியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. 'அந்த சமயத்தில்'கூட தமது துணையின் சந்தோசத்தை பற்றி கவலைப்படவே மாட்டார்கள். தமது சந்தோசத்தில் மட்டுமே குறியாக செயற்படுவார்கள். மனைவி என்பவள் படுக்கையறையில் ஒரு இயந்திரம் என்று மட்டுமே கருதுவார்கள்.


இந்த மூன்று பிரிவினரில் யாருடைய தொகை அதிகம் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அதுதான் அதிர்ச்சியான விஷயம். மூன்றாவது ரகத்தினரே சற்று அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்களாம்.

இது அமெரிக்காவில் செய்யப்பட்ட ஆராய்ச்சி என்பதால் நம் நாட்டு ஆண்கள் உறுமத் தேவையில்லை.

நீங்கள் எந்த ரகம் என்று உங்களுக்கே தெரியுமல்லவா.

## வீட்டுக் குறிப்புகள்



நைலோன் துணிகளை வெட்டும் போது, நைலோன் துணிகளோ, நைலோன் சம்பந்தப்பட்ட பொருட்களோ ஒரே சீராக வெட்டமுடியாது. இதோ சுலபமான வழி:- நைலோன் துணிகளை வெட்டும்போது, கத்தரிக்கோலை சிறிது வெப்பப்படுத்திய பிறகு அத் துணிகளை வெட்டினால் நைலோன் பிளவுபடாமல் எளிதாக வெட்டப்படும்.

*****



கீரைகளை வேக வைக்கும் போது தண்ணீரில் கொஞ்சம் உப்பைக் கரைத்து வேகவைத்தால், கீரையின் நிறமும் மாறாமல் அதிக சுவையுடனும் இருக்கும்.

*****



தேய்ந்த சோப்புத் துண்டுகளைத் தூக்கி எறியாமல் அலமாரியில் போட்டு வையுங்கள். பூச்சிகள் அண்டாது.

*****

நீங்கள் எப்படித்தான் சமையல் செய்தாலும் பாகற்காய்க் குழம்பு கசப்பாகவே இருக்கிறதா? இனி கவலையே பட வேண்டாம். குழம்பு வைக்கும் போது அதில் ஒரு கரட்டையும் சேர்த்தால் கசப்பே தெரியாது.





## இந்த வார அதிஷ்டசாலி

வாரம் ஒரு பட்டுச்சேலை போட்டியில் இந்த வார அதிஷ்டசாலி யார் என்று அறிய ஆவலாயிருப்பீர்கள்?

சுகுணா ஜஸ்மன், 19,அல்விஸ் பிளேஸ், கொழும்பு-13.

எல்லோரும் மனதுக்குள் ஒரு தடவை உரத்து கரகோசம் செய்யுங்கள். சரி, அடுத்தவாரம் யார்? உங்களில் ஒருவர்தானே! பொறுமை!

5ம் திகதிக்குப்பின்னர் காலை 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் (ஞாயிறு தவிர) எப்போது வேண்டுமானாலும் முரசு அலுவலகத்தில் வந்து பரிசை பெற்றுச் செல்லலாம்.

முகவரி-இல 5, காவிந்த பிளேஸ், கொழும்பு-6.

தொலைபேசி: 852041

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** A

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 10-02-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## ஸ்போர்ட்ஸ்

# உலகக் கிண்ணப் போட்டிகள் 1975 முதல் 1992 வரை

முதலாவது உலகக் கிண்ணப் போட்டி 1975 இல் நடைபெற்றது.


இறுதிப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியும், அவுஸ்திரேலியாவும் மோதிக் கொண்டன. 17 ஓட்டங்களால் அவுஸ்திரேலியாவைச் சாய்த்தது மேற்கிந்திய அணி.

1979இல் இறுதிப் போட்டி இங்கிலாந்துக்கும், மேற்கிந்திய தீவுக்கும். சூடாக ஆடி 92 ஓட்டங்களால் இங்கிலாந்தை சுருள வைத்தது மேற்கிந்திய அணி.

1983இல் மூன்றாவது போட்டி. இரண்டு முறை உலக சாம்பியனாக கொடி கட்டிப் பறந்த மேற்கிந்திய தீவு அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் பலத்த போட்டி. முடிவு இந்தியாவிடம் உலகக் கிண்ணம். 43 ஓட்டங்களால் இந்தியா வெற்றி அது.

1987 இல் 4 வது போட்டி. இறுதிப் போட்டியில் மோதிய அணிகள் அவுஸ்திரேலியாவும் இங்கிலாந்தும். ஏழே ஏழு ஓட்டங்களால் உலகக் கிண்ணத்தை தனதாக்கியது அவுஸ்திரேலியா.

ஐந்தாவது போட்டி 1992 இல் நடந்தது. 22 ஓட்டங்களால் இங்கிலாந்தை சரித்தது பாகிஸ்தான்.



**இரண்டாவது இடம்**

இதுவரை நடைபெற்ற ஐந்து உலகக் கிண்ணப் போட்டிகளில் இரண்டாவது இடத்தை (ரன்னர் அப்) பெற்ற நாடுகள்:- அவுஸ்திரேலியா ஒரு தடவை- (1975) இங்கிலாந்து அணி மூன்று தடவைகள் இரண்டாம் இடத்தை கைப்பற்றியது. (1979,87,92).

**அரை இறுதி**

இதுவரை நடைபெற்ற ஐந்து உலகக் கிண்ணப் போட்டிகளிலும் அரையிறுதிக்கு அதிக தடவை தெரிவான அணிகள்:-

நியூசிலாந்து மூன்று தடவை. (1975,79,92)
பாகிஸ்தான் மூன்று தடவை. (1979, 83,87)
இங்கிலாந்து இரண்டு தடவை. (1975, 83)
இந்தியா ஒரே ஒரு தடவை. (1987)

**அதிக ஓட்டங்கள்**

5 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் ஒவ்வொரு நாடுகளும் பெற்ற அதிக கூடிய ஓட்டங்கள் வருமாறு:-

அவுஸ்திரேலியா: 328/5 (60 ஓவர்ஸ்) எதிர்; இலங்கை. (1975)
இங்கிலாந்து; 334/4 (60 ஓவர்ஸ்) எதிர்; இந்தியா. (1975)
இந்தியா: 289/6 (50 ஓவர்ஸ்) எதிர்; அவுஸ்திரேலியா. (1987)
பாகிஸ்தான்: 338/5 (60 ஓவர்ஸ்) எதிர்; இலங்கை. (1983)
நியூசிலாந்து: 309/5 (60 ஓவர்ஸ்) எதிர்; கிழக்கு ஆபிரிக்கா. (1975)
இலங்கை: 313/7 (49.2 ஓவர்ஸ்) எதிர்; ஸிம்பாப்பே. (1992)
மேற்கிந்திய தீவுகள்: 360/4 (50) எதிர்; இலங்கை (1983)
ஸிம்பாப்பே: 312/4 (50) எதிர்; இலங்கை. (1992)
தென்னாபிரிக்கா: 236/4 (50) எதிர்; இங்கிலாந்து. (1992)

**குறைந்த ஓட்டங்கள்**

இலங்கை: 86. (37.2) எதிர்; மேற்கிந்தியதீவுகள் (1975)
இங்கிலாந்து; 93 (36.2) எதிர்; அவுஸ்திரேலியா.
அவுஸ்திரேலியா: 129 (38.2) எதிர்; இந்தியா. (1983)
இந்தியா: 123/8 (60 ஓவர்ஸ்) எதிர்; இங்கிலாந்து. (1975)
நியூசிலாந்து: 158 (52.2) எதிர்; மேற்கிந்திய தீவுகள். (1975)
பாகிஸ்தான்: 151 (.56) எதிர்; இங்கிலாந்து. (1979)
மேற்கிந்திய தீவுகள் 140 (52) எதிர்; இந்தியா. (1983)
ஸிம்பாப்பே: 135 (44.2) எதிர் இந்தியா. (1987)
தென்னாபிரிக்கா: 171/1 (46.5) எதிர்; அவுஸ்திரேலியா. (1992)

**தனி ஓட்டங்கள்**

மேற்கிந்திய தீவுகள்: விவியன் ரிச்சாட்ஸ் 181. எதிர்; இலங்கை (1987)
இந்தியா: கபில்தேவ் 175 (ஆட்டமிழக்காமல்) எதிர்; ஸிம்பாப்பே. (1983)
நியூசிலாந்து: கிளன் ரேனர் 171 எதிர்; கிழக்கு ஆபிரிக்கா. (1975)
இங்கிலாந்து: டி.எல்.அமிஸ் 137. எதிர்; இந்தியா. (1975)
ஸிம்பாப்பே: டேவிட் கொட்டன் 141. எதிர்; நியூசிலாந்து. (1987)
அவுஸ்திரேலியா: ஜெப் மாஷ் 126. எதிர்; நியூசிலாந்து. (1987)
ரமீஸ் ராஜா 119. (ஆட்டமிழக்கவில்லை) எதிர்; நியூசிலாந்து. (1992)
தென்னாபிரிக்கா: பீற்றர் கேஸ்ரன். 90. எதிர்; நியூசிலாந்து. (1992)
இலங்கை: ரொஷான் மஹாநாம. 89. எதிர்; பாகிஸ்தான். (1987)

(எம். ஆர். நிலைதாஸ்-இராகலை)


தினமுரசு— அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 24

# தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அறிவிக்கும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

## யுத்தகாலக் காதல்

யுத்தம் நடக்கிறது
போய் ஒளிந்துகொள்....
கொட்டும் முழக்கம்போல்
வெடிஓசை ஒலிக்கிறது
பங்கருக்குள் ஒளிந்துகொள்...!

* * *

இன்றுதான்
உன் இருபத்தோராவது பிறந்த தினம்!
நான் அருகிலிருந்து
ஆசீர்வதிக்க முடியாவிட்டாலும்
"ஷெல்களாலும்".....
"பீரங்கிகளாலும்"...
ராணுவ முனைப்புடன்
வெடியோசை தீர்க்கப்பட்டு
அமர்க்களமாய் நடக்கிறது....
போய் ஒளிந்துகொள்...!

* * *

கிண்ணங்களில்
பானம் பருகவேண்டிய
உன் பிறந்த தினத்தில்
கஞ்சியாவது கிடைப்பதையிட்டு
சந்தோசப்பட்டுக்கொள்...!

* * *

உன்னை
பல்லக்கில் ஏற்றி
பவனி வர முடியவில்லை;
யுத்தம் நடக்கிறது
போய் ஒளிந்துகொள்.....!

* * *

மாரிகாலத்து வெள்ளமும்
யுத்த காலத்து
பசி பட்டனியும்
உன் மீதுள்ள காதலை
காயப்படுத்துவதாக இல்லை!

* * *

இராணுவப் பீரங்கிகளை விடவும்
போராளிகளின் சயனைட்டை
விடவும்
நமது காதல்
பலம் வாய்ந்தது.

* * *

நாளைவரை
நமது உயிர்
நிலைத்திருக்குமாயின்
ஒரு காதல் செடியை
இந்த மயானத்தில்
நட்டு வைப்போம்...
யுத்தம் நடக்கிறது
போய் ஒளிந்துகொள்!

சம்மாந்துறை, ஏயெம்மே நிஸாம்.

## காதல் வாழ வேண்டும்

இனிமேலும் எனக்கு பொறுமை இல்லை,
இழந்து விட்ட இதயத்தில் வலிமை இல்லை,
தனிமையில் இருப்பதில் சுகமும் இல்லை,
தவறென்ன நான் செய்தேன் புரியவில்லை,
எனக்கென்று நிலையான உறவும் இல்லை.
எப்போதும் இதனை எண்ணி கவலை இல்லை!
***
முகம் காட்டி எனைவாட்டி மறைவதென்ன?
முழுமதியே எனைவிட்டு போனதென்ன?
காட்டாற்று வெள்ளம் நெஞ்சில் பாய்வதென்ன?
கண்ணிரண்டில் நீ இன்றி உறக்கமென்ன?
பின்னோக்கி என்கால்கள் நடப்பதென்ன?
பித்தனாக்கி எனைவிட்டு பிரிந்ததென்ன?
***
விளையாட்டாய் என்னில் ஏன் கோபம் கொண்டாய்?
வீடுவரை வந்தப்பின் ஏன் விலகிச் சென்றாய்?
சிரித்து வந்த உறவை ஏன் விட்டுச்சென்றாய்?
சிந்தனையை கலைத்து விட்டு மறைந்து சென்றாய்!
கனவில் வந்து என்னை நீ கட்டிக் கொண்டாய்!
கலைந்தபின்னர் என்னை விட்டு விலகிச் சென்றாய்!
***
நிலையாக உன் உள்ளம் திறக்க வேண்டும்!
நித்திலத்தில் நாம் இணைந்து வாழ வேண்டும்!
இதயத்தில் உன் அன்பு நிலைக்க வேண்டும்!
இறப்பிலும் நாம் ஒன்றாய் இணைய வேண்டும்!
மறைந்த பின்னும் நம் புகழ் ஓங்க வேண்டும்!
மண்ணில் என்றும் நம்காதல் வாழ வேண்டும்!

ஹப்புத்தளையூர் மனோ கோபாலன்,


## சிகப்பாய் வேண்டும்...

நிழலுக்கு
நிறமாக
கறுப்பு வேண்டும்...!
அனல் கக்கும்
வெயிலுக்கு
நிழல்தான்
வேண்டும்.....!
***
குயிலினில்
கருங்குயில்
குரலுக்கே
மவுசு உண்டாம்!
இனிமையாய்
கூவுவதற்கு
குயில்தான்
வேண்டும்.....!
***
காக்கையிலும்
கருங்காக்கை
இனந்தான் அதிகம்!
ஒற்றுமைக்கு
உதாரணமாய்
காக்கை
வேண்டும்.....!
***
மழை தர
மேகங்கள்
சூழ வேண்டும்...!
பயன் பெற
மேகங்கள்
கறுப்பாய்
வேண்டும்.....!
***
வாழ்க்கைக்கு
துணை வர
ஒருத்தி வேண்டும்.....!
அவள் மட்டும்
கறுப்பில்லாது
சிகப்பாய்
வேண்டும்....!

என்.சஹா-ஓட்டமாவடி

## அந்த நாள் ஞாபகம்

எம்.ஜி.ஆர் முதல் முதலில் தேர்தலுக்கு நின்றபோது ஒரு மூதாட்டி அவரிடம் கூறினாராம்- "என்னைப் பெத்த ராசா, நீ மந்திரியாக வருவதில் எனக்கு ரொம்ப சந்தோசம். ஆனால் நீ ரொம்ப ஜாக்ரதையாக இருக்கணும். இந்த நம்பியாரை மட்டும் கிட்ட நெருங்க விடாதே!'



## மொழிப் பிரச்சனை

இது இரண்டாம் உலக யுத்தகால கட்டத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம். ஹிட்லருக்கு தோல்வியைக் கொடுத்துவிட்டு சோவியத் படை ஜெர்மனுக்குள் புகுந்தது. போலின் நகர் வீழ்ந்தது. நகரக் காவல் பணியில் ஈடுபட்ட சோவியத் வீரர்களுக்கு ஜெர்மன் மொழி மருந்துக்கும் தெரியாது.

தடை அரண் வழியாக ஒரு ஜெர்மன் பெண் தனது சைக்கிளில் வந்தாள். இராணுவவீரர் கைகாட்டி நிறுத்தினார். இறங்கினாள். "ஏறிப்போகாதே. உருட்டிக் கொண்டு போ" என்றார் இராணுவவீரர். அவளுக்கு புரியவில்லை. தலையை ஆட்டிவிட்டு, மறுபடியும் சைக்கிளில் ஏறப் போனாள். இராணுவ வீரருக்கு வந்ததே கோபம். குறுக்கே விழுந்து தடுக்க, அவள் ஜெர்மன் மொழியில் ஏதோ சொல்ல, இவர் ரஷ்ய மொழியில் ஏதோ கத்தி சைக்கிளை இழுக்க... ஒரே இழுபறி. சுவாரசியமான அக் காட்சியை ஒரு புகை படப் பிடிப்பாளர் 'கிளிக்' கியதால் நம் பார்வைக் குரியதாக கிடைத்திருக்கிறது.

மேற் கண்ட சம்பவம் அங்கு மட்டும் தானா என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது.



## தேன் கிண்ணம்

### மரக்கமுடியுமா?

தாகமாய்
வந்தபோது
பாலைவனத்தில்
சேர்த்தாய்!
•
பசியாக
வந்தபோது
வெறும்
பானையைக்
காட்டினாய்!
•
நிழல்
கேட்டபோது
நெருப்பிடம்
அழைத்துப்
போனாய்!
•
உறங்க
இடம்
கேட்டபோது
முள்
படுக்கையை
விரித்துப்
போட்டாய்!
•
வாழ்க்கை
கேட்டபோது
பட்ட மரத்தைக்
காட்டினாய்!
•
ஆறுதல்
கேட்டபோது
தூக்கமாத்திரை
கொடுத்தாய்!
•
இப்போ...,
மரணித்துக்
கொண்டிருக்கும்
போது
ஒன்று
கேட்கிறேன்;
என்
கழுத்தில்
சுருக்கிட்டு
சுவாசத்தை
உடனே நிறுத்திவிடு!
•

செல்வி. சுப்ரமணியம் வாணீஸ்வரி- அப்பர் கலஹா.

### றமழானுக்கு ஓர் அஞ்சல்

ஓ: றமழானே!
எங்கள்
தேசத்தை
சோகத்திற்குள்
புதைத்துவிட்டு
தொலைந்துபோன
சமரசத்தை
நீ வரும்போது
உன்னுடன் கூடவே
கூட்டிக்கொண்டு வா!
***
யுத்தப்புயலில் சிக்குண்டு
சிலந்தி வலைபோல்
சிதைந்து போன மனிதம்
மீண்டும்
புனிதம் பெறவேண்டும்;
தயவு செய்து
சமரசத்தையும்
உன் கூடவே
கூட்டிக் கொண்டு வா!
***
"லைலதுல்கதிர்" இரவில்
லயித்துப்போய்,
இறைவனை நோக்கி
இருகரம் ஏந்தி
எங்கள்
கண்ணீர்த்துளிகளைக்
காணிக்கையாக்கி,
அதற்காய் நாங்கள்
காத்துக்கிடப்போம்..!
சற்று
சமரசத்தையும்
உன் கூடவே
கூட்டிக் கொண்டு வா!
***
எங்கள்
வயிற்று வங்கிகளை
இறுக்க மூடிவிட்டு
ஒவ்வொருவரும்
உன்னில்
உண்ணாவிரதமிருப்போம்...!
தயவு செய்து
சமரசத்தையும்
உன்னுடன் கூடவே
கூட்டிக் கொண்டு வா!
***
அது முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல;
மூவின மக்களுக்குமே
நீ கொடுக்கும்
மகத்தான பரிசு!
***
அதனால்
எங்கள்
தேசத்தை
சோகத்திற்குள்
புதைத்து விட்டு
தொலைந்துபோன
சமரசத்தை
எப்படியேனும்
மறந்துவிடாமல்
உன்னுடன் கூடவே
கூட்டிவந்துவிடு!

காவத்தமுனை-ஹாறூன்.

### நிஜமல்ல

ஒன்றை மறக்க
இன்னொன்றை
நினைக்க வேண்டுமாம்-...!
அவளை மறப்பதற்காக
அவன்
மதுவை நினைத்தான்!
அவளை
முற்றாக மறந்த அன்று
மதுமட்டும் இருந்தது;
அவனில்லை!!

அ.டக்ளஸ் ஜெயசேகரன், வவுனியா.

## பழ மொழியும்! புது மொழியும்!

**சமாதானம்!**
கண்கெட்டபின்
செய்யப்போகும்
சூரிய நமஸ்காரம்.

**இனவாதம்**
பதவிக் கிணறுவெட்ட
கிளம்பிய பூதம்.

**யுத்தம்!**
சுதந்திர முதுகைச்சொறிய
கையிலெடுத்த நெருப்புக்
கொள்ளி.

**பேச்சுவார்த்தை!**
இந்த
வெண்ணையிருக்க
சமாதான நெய்தேடி
அலைகின்றார்களே...?.

**விசாரணை!**
வேலியே பயிரை
மேய
கொடுக்கப்பட்ட
புதிய விளக்கம்.

**சுற்றி வளைப்பு!**
மூட்டைப் பூச்சிகளை அழிக்க
அவ்வப்போது
கொழுத்தப்படும் வீடுகள்.

**மோதல் தவிர்ப்பு!**
பிடிக்கப் போனது
பிள்ளையார்தான்....!
பட்டதோ குரங்குமூஞ்சி.

**அரசு!**
அழுதழுதும்
தீர்வுக் குழந்தையை
அவளே பெறவேண்டும்.

கவியூரன், அக்ரைப்பற்று.

## காதலி

உன்
முறுக்கு
இமைகளால்
குத்தாதே?
▫▫
உன்
ஒய்யார
கன்னத்தால்
தீண்டாதே?
▫▫

உன்
விழிகளில்
நான்!
உறங்கிக்கிடப்பவன்
▫▫
பனித்துளிகளை
நாடும்...
புல்வெளிபோல்
உன்னை
நேசிப்பவன்

உன்
நிழல்
வந்துபோகும்
திசையை நோக்கி
காத்து நிற்கிறேன்.
உன்
நினைவு
வரலாம்!
உன்- காற்று
தந்தியடிக்கலாம்!

வி.சுதாகர்-அக்கரைப்பற்று-8.

### ஆயுள் ரேகை!

கையைப் பார்தத காதலி
ஆயுள் ரேகை
பலமாக
இருக்கிறதென்றாள்.
அதனால்தானோ என்னமோ
மூன்றாவது குண்டு
துளைக்கும் வரை
என் உடலில்
உயிர் இருந்தது.

எம்.சுரேஷ்.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 04.02.96 முதல் 10.02.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு-பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்-புதிய முயற்சி, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிடவாழ்க்கை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| வெள்ளி தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- பயனற்ற செயல், பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக்கஷ்டம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், இனசன பகை. | காலை 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனக்கிலேசம். | பகல் 12 மணி |
| வியாழன்-வெளியிடப் பயணம், அந்தியர் உதவி. | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| சனி- வீண் அலைச்சல், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- புதிய நட்பு, எதிர்பாரா உதவி. | காலை 6 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தொழில் கேடு. | காலை 7 மணி |
| சனி- செலவு மிகுதி, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் பிரச்சனை, பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 6 மணி |
| சனி- புதிய முயற்சி, பணவரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனக் கலக்கம், இனசன நன்மை | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| வியாழன்-பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- அந்நியர் நட்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | -சூரியன், செவ்வாய். |
| கும்பம் | -சனி, வெள்ளி. |
| மீனம் | -கேது. |
| கன்னி | -இராகு. |
| தனு | -புதன், வியாழன். |

★ சந்திரன்-கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| வியாழன்- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழிலில் பிரச்சினை, மனப் பயம். | காலை 6 மணி |
| சனி- அந்நியர் நட்பு, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- இனசன நன்மை, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன் - பிரயாண மிகுதி, எதிர்பாரா செலவு. | காலை 7 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மனக் கிலேசம், அந்நியர் நட்பு. | மு.ப. 9 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், மனப் பயம் | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, இனசன நன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்தியர் உதவி. | மு.ப. 9 மணி |
| புதன்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்-பொருள் நட்டம், மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | பகல் 2 மணி |
| சனி- வீண் முயற்சி, பொருள் விரயம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்-தொழில் சிறப்பு, இனசன நன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி-அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், பொருள் வரவு. | காலை 6 மணி |
| திங்கள்- மனக் கலக்கம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| புதன்- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| வெள்ளி- வீண் விரயம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- இனசன நன்மை, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மனக் கிலேசம். | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பொருள் விரயம், மனக் கலக்கம் | காலை 7 மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- மனக் குறை நீங்கும், இனசன நன்மை. | காலை 6 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| சனி- மனக் கலக்கம், அந்நியர் பகை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7





## சின்ன அணிற் பிள்ளை

கொய்யா மரம் மீதிலே
குண்டு பழம் தின்னவே,
ஒய்யாரமாய் அமர்ந்தது
ஓடி வந்த அணிற்பிள்ளை!

மேலும் கீழும் பாய்ந்து அணிலும்
மெல்ல பழம் பறித்தது;
கீழே விழுந்து விடாமல்
கௌவிப் பிடித்துக் கொறித்தது!

முதுகில் மூன்று கோடுகள்
முதுகின் அழகைக் கூட்டின;
மெதுமையான வாலும் தான்
குஞ்சமாகத் தெரிந்தது!

சின்ன அணிற்பிள்ளையின்
சிறிய வயிறும் நிறைந்தது;
எண்ணம் போல மீண்டுமே
ஏறி மரத்தில் பாய்ந்தது!

-பசறையூர் மல்லிகா பத்மநாதன்

சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடீ!-கிளியே!
செம்மை மறந்தாரடீ!

-சுப்பிரமணிய பாரதியார்.

**பாப்பா முரசு சிறுகதை**

# ஏமாந்த புலி



ஒரு காட்டில் ஒரு ஆண் நரியும், பெண் நரியும் கணவன், மனைவியாக வாழந்துவந்தன. அந்த நரிகளுக்கு ஐந்து குட்டிகள். அவை ஒரு வளையில் வசித்து வந்தன.

ஒரு நாள் ஆண் நரியும், பெண் நரியும் இரை தேடுவதற்காக வளையை விட்டு வெளியே வந்தன. வெளியில் வந்து காட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது ஒரு புலி அவைகளைப் பார்த்து விட்டது. அவைகளைச் சாப்பிடுவதற்காக புலி பாய்ந்து வந்தது.

"நாம் புலிக்கு உணவாகி விட்டால் நம் பிள்ளைகளை யார் காப்பாற்றுவது? எனவே புலியிடமிருந்து எப்படியாவது தப்பிக்க வேண்டும்" என்று சொன்னது ஆண் நரி.

பெண் நரியும் அதற்குச் சம்மதித்தது. புலி அவைகளுக்குக் கிட்ட வந்ததும் ஆண் நரி, "உங்களைத் தேடித்தான் நாங்கள் இருவரும் காடுமுழுவதும் தேடி அலைந்து கொண்டிருக்கிறோம். நீங்களே எதிரில் வந்து விட்டீர்கள்!" என்றது.

"அப்படியா? ஏன் என்னைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டது புலி.

"புலியாரே! நீங்கள் மகாபுத்திசாலி. எங்கள் இருவருக்கும் ஒரு தகராறு. அதை நீங்கள் தான் தீர்த்து வைக்க வேண்டும்!" என்றது பெண் நரி.

பெண் நரி ஏதோ ஒரு திட்டத்துடன் தான் பேசுகிறது என்பதைப் புரிந்து கொண்ட ஆண் நரி,

"ஆமாம் நீங்கள் தான் தீர்த்து வைக்க வேண்டும்", என்றது.

தன்னை நரிகள் மகா புத்திசாலி என்று சொன்னது புலியை மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளச் செய்தது.

"சொல்லுங்கள் உங்கள் தகராறை," என்று சொன்னது புலி.

பெண் நரி ஆண் நரியை ஒரு முறை பார்த்து விட்டு,

"புலியாரே! எங்களுக்கு ஐந்து நரிக் குட்டிகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் கொழு, கொழு வென்று அழகாக இருக்கும். எங்கள் இருவருக்கும் கருத்து வேற்றுமைகள் அதிகமாகி விட்டன. இனி சேர்ந்து வாழ முடியாது. அதனால் பிரிந்து செல்வதென்று தீர்மானித்து விட்டோம். குழந்தைகளை என்ன செய்வது என்பதுதான் பிரச்சனை" என்று கூறியது.

"அதில் என்ன பிரச்சனை?" என்று கேட்டது புலி.

"எங்களுக்கு மொத்தம் ஐந்து குட்டிகள். நான் மூன்று குட்டிகளை எடுத்துக் கொள்கிறேன். நீங்கள் இரண்டு குட்டிகளை எடுத்துக் கொள்ளுங்கள் என்றால் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்கிறார் இவர். குழந்தைகளைப் பெற்றவள் நான். எனவே எனக்குத்தான் அதிக உரிமை உண்டு." என்றது பெண் நரி.

அதற்கு ஆண் நரியோ, "நான் தான் குடும்பத்தலைவன். எனக்குத்தான் அதிக உரிமை உண்டு," என்றது ஆண் நரி.

"இது தான் எங்களுக்குள் ஏற்பட்ட தகராறு. இதற்கு நீங்கள் தான் நியாயம் வழங்க வேண்டும்." என்றது பெண் நரி.

புலி எப்படி நியாயம் வழங்கலாம் என்று யோசிப்பது போல் கண்களை மூடிக் கொண்டது. அதன் மனதில்,

'இந்த இரண்டு நரிகளும் கொழு, கொழு வென்று இருக்கின்றன. இவற்றைப் போல் ஐந்து குட்டிகளும் கொழுத்து இருக்கும். நான் இவற்றை விட்டு விடக் கூடாது.' என்று எண்ணியப்படி அவைகளிடம்,

"நான் உங்கள் குட்டிகளை முதலில் பார்க்க வேண்டும். பிறகே என் தீர்ப்பை கூறமுடியும்!" என்றது புலி.

நரிகளுக்கு புலியின் திட்டம் விளங்கியது. பெண் நரியைப் பார்த்து ஆண் நரி,

"நான் அப்போதே சொன்னேன் அல்லவா புலி மகாபுத்திசாலி என்று? இவர்தான் நமக்கு நல்ல தீர்ப்பு சொல்லுவார்", என்று சொல்லிவிட்டு, "புலியாரே, வாருங்கள் எங்கள் குட்டிகளைக் காட்டுகிறோம்" என்று புலியை வளைக்குக் கிட்டக் கூட்டி வந்தன.

தான் சொல்லியதை நரிகள் நம்பி விட்டதாக எண்ணி மனதிற்குள் சிரித்தது புலி.

பெண் நரி, ஆண் நரியுடம்,

"நீங்கள் வளைக்குள் சென்று நம் குட்டிகளை வெளியே அழைத்து வாருங்கள்," என்றது. "சரி" என்று சொல்லிவிட்டு தன் உடலைக் குறுக்கிக் கொண்டு வளைக்குள் சென்று விட்டது ஆண் நரி.

உள்ளே சென்ற ஆண் நரி, குட்டிகளைக் கத்தச் சொன்னது. தானும் கத்தியது. அவைகளின் சத்தம் வெளியே கேட்டது.

"என்ன சத்தம்?" என்று புலி கேட்டது.

"என் கணவர் சொல்வதை குட்டிகள் கேட்காது. அதுதான் கத்துகின்றன. என் பேச்சைத்தான் அவை கேட்கும். நான் போய் அழைத்து வருகிறேன். பாருங்கள்," என்று வளைக்குள் 'விருட்' டென்று பாய்ந்து சென்று விட்டது.

சின்ன வளைக்குள் தன் பெருத்த உடம்போடு செல்ல முடியாத புலி, நரிகள் திரும்பி வரும் என வெகு நேரம் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் சென்றது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.02.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 127
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 125

பரிசுக்குரியவர்:
எம்.எம். நிலூஜான்
களு/ஜீலான் மு.ம.கல்லூரி ஹேனமுல்லை, பாணந்துறை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| முனீரா இஸ்மாயில்<br>புஹாரி வித்தியாலயம், முள்ளிப்பொத்தானை. | ஜெ.இம்தியாஸ்<br>டீ.சி.வீதி, கிண்ணியா-04. |
| செல்வி. ஷோபா<br>இல.88, நாகொல்ல வீதி, மாத்தளை. | திருச்செல்வம் சபேஷன்<br>மெதடிஸ் 'த மத்திய கல்லூரி மட்டு நகர். |
| ஏ.ரோஸ் மேரி ரம்யா<br>நல்வினைபாற்றிய மகளீர் பாடசாலை, நுவரெலியா. | பி.எம்.றியாசி<br>உடுகொட முஸ்லிம் வித்தியாலயம், றுக்கஹவில. |
| செல்வி. ஜியோலின் ஜோன்சன்<br>கிளரன்டன் எஸ்டேட், நானுஓயா. | ச.புவனேஸ்வரி<br>நல்லிளை பாற்றியர் கன்னியர் பாடசாலை, நுவரெலியா. |
| ரா. முகுந்தன்<br>இல.12, முத்துவெல்ல மாவத்த மட்டக்குளி, கொழும்பு. 15. | செல்வி.சாஹிதா தாஹீர்<br>மாறை/அறபா தேசிய பாடசாலை வெலிகம. |

## ஐ.நா. தகவல்கள்





1980ல் அம்மை நோயை உலகெங்கும் ஒழிக்க வேண்டி உலக சுகாதார நிறுவனம் ஒரு இயக்கத்தைத் தொடங்கி பெரிய வெற்றியடைந்தது.

அகதிகள் நிவாரணத்திற்கு சிறந்த பணியாற்றியதற்காக ஐ.நா. அகதிகள் நிவாரண கமிஷனருக்கு (UNHCA) 1981 நோபல் பரிசு கொடுக்கப்பட்டது.

1982ல் போக்லண்ட் போர் துவக்கம். பாதுகாப்பு கவுன்சில் இங்கிலாந்தின் பக்கம் சாய்ந்தது.

அறிவியல்

## குளிர் காலத்தில் களைப்பு வருவது ஏன்?

களைப்பு என்பது உடல் உறுப்புகளில் சிறப்பாகத் தசை, நரம்பு ஆகியவற்றில் ஏற்படும் சோர்வு ஆகும். நாம் உண்ணும் உணவில் உள்ள காபோஹைட்ரேட்டும், கொழுப்பும் சமிபாடு அடைந்து இரத்தத்தில் கலக்கின்றன. சுவாசிக்கும்போது இரத்தத்திற்கு வந்து சேரும் ஒட்சிசன் சமிபாடடைந்த பொருட்களை எரிக்கின்றது. இதனால் வெப்பமும் சக்தியும் உண்டாகின்றன. அத்துடன் உணவில் உள்ள கார்பன், ஒட்சிசனுடன் சேர்ந்து காபனீரொட்சைட் என்ற வாயு உண்டாகிறது. சுவாசத்தின் போது இவ்வாயு வெளியாகிறது.



நாம் உண்ணும் உணவில் உள்ள புரதம் நாள்தோறும் புதிய செல்களைத் தோற்றுவித்து உடலை வளர்ப்பதற்கும், சிதைகின்ற செல்களுக்குப் பதிலாகப் புதிய செல்கள் தோற்றுவிக்கவும் உதவுகிறது. சிதை மாற்றம் பெற்ற செல் பகுதிகள் வியர்வை மூலமாகவும், சிறுநீர் மூலமாகவும் வெளியேற்றப்படுகின்றன.

இவ்வாறான ஆக்கச் சிதைமாற்ற வேலைகள் அனைத்தும் சாதாரண காலத்தில் நடைபெறுவதை விடக் கோடைகாலத்தில் மிகத்துரிதமாக நடைபெறுகின்றன. அதனால் வெளியேற்றப்பட வேண்டிய கழிவுப் பொருள்கள் அனைத்தும் உடனுக்குடன் வெளியேற்றப்படாமல் ஒரு பகுதி உடலில் தங்கி விடுகிறது. இதனால் இரத்தத்தின் தூய்மை கெடுகிறது. மூளை சுறுசுறுப்பாக வேலை செய்வதற்கும் தசைகள் இயங்குவதற்கும் உதவுவது தூய்மையான இரத்தமே ஆகும். இரத்தம் கோடை காலத்தில் தூய்மை குறைந்து விடுவதால் மூளையும் தசைகளும் சுறுசுறுப்பாக இயங்க முடியாமல் சோர்ந்து விடுகின்றன.

குளிர் காலத்தில் கழிவுப்பொருள்கள் உடனுக்குடன் வெளியேற்றப்படுவதால் இரத்தத்தின் தூய்மை கெடுவதில்லை. அதனால் எவ்வளவு வேலை செய்தாலும் களைப்பே தோன்றுவதில்லை. பெரும்பாலானோர் கோடை காலத்தில் குளிர்ப்பிரதேசங்களுக்குச் சென்று தங்குவது இந்தக் காரணத்தால் தான்.

## வாரம் ஒரு நாடு

### லெபனான்

**தலைநகர்**- பெய்ரூட்
**பரப்பு**- 10,400 சதுர கிலோ மீட்டர்
**மக்கள் தொகை**- 290,00,000
**மொழி**- அரபி, ஃபிரெஞ்சு, ஆங்கிலம்
**எழுத்தறிவு**- 75%
**சமயம்**- இஸ்லாம், கிறிஸ்தவம்
**நாணயம்**-- பவுண்ட்
**தனிநபர் வருமானம்**- 1000 டொலர்

**வரலாறு:**

1920-21 வரை ஃபிரான்சின் ஆதிக்கத்திற் குட்பட்டிருந்தது. அதிகாரங்கள் பல சமயத்தவர்க்கும் பிரித்தளிக்கப்பட வேண்டும் என்பது சட்டம். 1958 முதல் உள் நாட்டுக் கலவரம். பாலஸ்தீன அகதிகள் லெபனானுக்குள் வந்து குவிந்தமை, மிக நீண்ட கலவரத்திற்குக் காரணமாயிற்று. அகதிகள், அவர்களின் பாதுகாவலர்கள் மற்றும் மரோனைட் கிறிஸ்தவர்கள் இவர்களுக்கிடையே சண்டையும், குழப்பமும் சகஜமானது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். சிறிஸ்தவர் அணிக்கு இஸ்ரேல் உதவி புரிகிறது. பிற அணிகளுக்கு அரபு நாடுகளின் உதவி. இதில் குறிப்பாக சிரியா. 1990 அக்டோபரில் ஜெனரல் மைக்கல் அஹோணியின் தலைமையிலான கிறிஸ்தவப் படையை, அதிபர் எல்யாசுக்குத் துணை புரியும் சிரியாவின் கலகக்காரர்கள் துரத்தியடித்தனர்.

**பொருளாதாரம்:**

அடிப்படையில் இது விவசாய நாடு. ஒலிவ் எண்ணெய், தானியங்கள், பழவகைகள் உற்பத்தியாகின்றன. முக்கிய தொழில்கள்- எண்ணெய் வடித்தெடுத்தல், உணவைப் பதப்படுத்துதல், சிமெந்து தயாரித்தல். சுற்றுலாத்துறை முக்கிய வருமான மூலமாகும்.



## பிக்மிக்கள்

**★பிக்மிக்கள் என்றால் யார்?**

குள்ளமாக உள்ள ஒரு பழங்குடியினர். இந்த இனத்தில் யாருமே நான்கு அடி உயரத்திற்கு மேல் வளர மாட்டார்கள்.

**★இவர்கள் எங்கே உள்ளனர்?**

ஆபிரிக்கா, ஆசியாக் கண்டங்களில் உள்ள ஒரு சில பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். ஆபிரிக்கா பிக்மிக்களுக்கு 'நிக்டியோல்ஸ்' எனப் பெயர். ஆபிரிக்காவின் அடர்காடுகளில் வசிக்கின்றனர். இவர்கள் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர் உள்ளனர்.

ஆசிய பிக்மிக்கள் 'நிக்டிடோஸ்' என அழைக்கப்படுகின்றனர்.

இவர்கள் அந்தமான் தீவுகளிலும், மலேசியா, சுமாத்ரா, பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் சிறு கும்பலாக வசிக்கின்றனர்.

**★இவர்களது தொழில் என்ன?**

வேட்டையாடுதல், பழங்கள், கிழங்குகள், தேன் சேகரித்தல். விஷ அம்புகள், வேல்கள் ஆகியவை இவர்களது ஆயுதங்கள்.

**★ நீக்ரோக்கள் என்ற கறுப்பர் இனமக்களும் இவர்களைச் சேர்ந்தவர்கள் தானா?**




இல்லை. பிக்மிக்களை தனி இனமாக மரபு இயல் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

**★ இவர்கள் ஏன் குள்ளமாக உள்ளனர்?**

பரம்பரையாக இவர்கள் உடலில் உயரமாக வளர்வதற்குரிய இரசாயனம் சுரக்காததுதான் காரணம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# விலை 21 உயர்ந்த குற்றம்

## பட்டுக்கோட்டை பிரபாகர்



பிராட்வேயில் இருந்து வலதுபக்கம் கட் செய்து, கொலம்பஸ் அவென்யுவில் நுழைந்து, வெஸ்ட் 70வது தெருவில் ரெஜினா பாரை வேகம் குறைத்து நெருங்கி நிறுத்தினான் பப்பு.

பரத், சுசி, நியூட்டன் மூவரும் இறங்க... சாலையின் சைட்வாக்கில் இவர்களுக்காக காத்திருந்த கென்னடி கையசைத்தார்.

"விலாசம் மாறி வந்து விட்டவன் போல நான் போய் கதவைத் தட்டிப் பேசினேன். பார்த்தேன். தனிவீடு. வீட்டில் ஆனியைத் தவிர வேறு யாருமில்லை. இப்போது நாம் என்ன செய்யப் போகிறோம்?"

சாலையோரத்தில் நின்ற சாலையில் மூன்று நிமிடங்கள் விவாதித்து ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். அதன்படி பரத், சுசி, பப்பு மூவரும் முதலில் செல்ல முடிவாகி... வீட்டிற்கு இருபதடி தூரத்தில் நின்று கென்னடி அடையாளம் காட்ட...

மூவர் மட்டும் அணுகினார்கள். முதலில் சிறிய கேட் இருந்தது. அதைத் திறந்து நடைபாதையில் நடந்து முக்கிய வாசல் வந்தார்கள். லேடீஸ் பைக் ஒன்று சாய்வாக நின்று கொண்டிருக்க சுசி அழைப்பு மணி ஒலிக்கச் செய்தாள்.

பீப் ஹோலுக்கு நேராக பப்பு நின்றான்.

கதவு திறக்கப்பட்டது. ஆனி நைட்டியில் இருந்தாள். நைட்டி மெல்லிஸாக ஒரமெல்லாம் புஸு புஸுவென்று லேஸ் வைத்திருக்க... பிரௌன் கலரில் கோடு கோடாய் போட்டிருந்த பிரா, அதே துணியில் பாண்டீஸ் என்பதெல்லாம் வினாடியில் உணர முடிய...

"மிஸ் ஆனி?" என்றான் பரத்.

"நான்தான்" என்றாள் சற்றே தயக்கமாக.

"நாங்கள் இந்தியாவில் இருந்து வந்திருக்கிறோம். உள்ளே போய்ப் பேசலாமா? ஒரு முக்கியமான தகவல் பேச வேண்டும்."

ஆனி அவர்களை உள்ளே அனுமதித்தாள்.

நால்வரும் அமர்ந்ததும் மறுபடி அழைப்பு மணி ஒலித்தது. நியூட்டனும், கென்னடியும் உள்ளே பிரவேசித்தார்கள். கென்னடி முதல் காரியமாகக் கதவைச் சாத்தி, பூட்டி சாவியை எடுத்துப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டதும்... ஆனி வெகுண்டாள்.

"நீங்கள் எல்லாம் யார், என்ன வேண்டும் உங்களுக்கு?"

"ஒரே ஒரு பதில்" என்றான் பரத்.

"என்ன?"

"நீயும், பார்க்கர் ஸ்மித்தும் சாமர்த்தியமாக சென்னையில் இருந்து கடத்தி வந்த சரவணகுமார் இப்போது எங்கே இருக்கிறான்? இதான் கேள்வி. கமான், பதில் ப்ளீஸ்..."

"சரவண குமாரா? யாரது? எனக்கு எதுவும் தெரியாது."

"ஒரு ஆண் பெண்ணை அடிப்பது எங்களுக்கு இழிவான செயல். அதனால், சுசி... ரொம்ப நாளா கை துறுதுறுன்னு இருக்குன்னியே... போ. ஆசை தீர விளையாடு" என்றான் பரத்.

சுசிலா ஆனியை அணுகி, "தீக்குச்சி மாதிரி இருக்கே. ரெண்டு வெட்டுக்குத் தாங்குவியா நீ? அடி வாங்கிட்டுத்தான் சொல்வியா?"

"வாட்?"

"தமிழில் நீ திட்டப்படுகிறாய்... அவ்வளவுதான். வேறொன்றுமில்லை. சுசி, டைத்தை வேஸ்ட் பண்ணாதே..."

சுசிலா பொளேர் என்று புறங்கையால் அவள் கன்னத்தில் அறைய... ஆனி தடுமாறி நாற்காலியைப் பிடித்துக் கொண்டாள். சுசிலா கொத்தாக அவளின் தலை முடியைப் பிடித்து வெடுக்கென்று இழுக்க... "ஆ! நோ!" என்று சத்தமாக அலறினாள்.

"சுசி, விடு அவளை" என்ற பரத் தன் ரிவால்வரை எடுத்து நேராக அவள் நெஞ்சுக்குள் குறி பார்த்தான்.

"ஐந்து எண்ணுவேன். அதற்குள் சொல்லவில்லை என்றால் சத்தியமாகச் சுடுவேன். ஒன்று... இரண்டு... மூன்று... நான்கு..."

"சொல்கிறேன். சொல்கிறேன். சரவணகுமார் தற்சமயம் பார்க்கரின் கார் டிரைவர் வெஸ்லியின் பொறுப்பில் இருக்கிறான்."

"அது நாங்களும் யூகித்து விட்டோம். வெஸ்லி எங்கு இருக்கிறான்?"

"அது... வந்து... எனக்குத் தெரியாது."

மறுபடி ஐந்துவரை எண்ணட்டுமா? ஒன்று... இரண்டு..."

ஆனி தவித்தாள். வியர்த்தாள்.

"மூன்று... நான்கு... சொல்லி விடட்டுமா? ஐ...ந்..."

'டுசுக்!' என்று ஒரு சத்தம்!

அதைத் தொடர்ந்து, "ஓ" என்று பெரிய அலறலோடு குப்புற விழுந்த ஆனியின் முதுகிலிருந்து குபுக், குபுக் என்ற கொப்புளித்துப் புறப்பட்டது ரத்தம்!

"அந்த யன்னல் வழியா யாரோ சுட்டுட்டு ஓடறாங்க. பிடிங்க" என்று கத்தினான் பரத்.

நியூட்டனும், கென்னடியும் வெளியே ஓட...

சுசிலா கிச்சன் சென்று தண்ணீர் எடுத்துவர... பப்பு அலமாரிகளில் முதலுதவிப் பெட்டியைத் தேடினான். ஆனி தன் கடைசி நிமிடங்களில் துடித்துக் கொண்டிருந்தாள்.

பரத் மடங்கி அமர்ந்து ஆனியின் முகத்தில் படிந்த மரண வேதனையைப் பரிதாபமாகப் பார்த்தான். "பப்பு, கால் தி போலீஸ்."

"போன் இல்லை இங்கே. பக்கத்திலே எங்கயாச்சும் இருந்தா போய் தகவல் சொல்லிட்டு வர்றேன்."

ஆனி கடைசி முயற்சியாக விழிகளைத் திறந்து, தன்னைச் சுற்றிப் பரவியிருந்த ரத்தத்தை தொட்டு அவசரமாக பரத்தின் பேண்டில் '1.10.87' என்று ரத்தத் தீற்றலாக எழுதிவிட்டு, கடைசி கடைசியாக உடம்பு முழுக்க ஒரு வெட்டு வெட்டிக் கொள்ள... விழிகள் நிலைத்த பார்வை பார்க்க... இறந்து போனாள்.

* *

பார்க்கர் ஸ்மித் தன் சக்தி அனைத்தையும் பிரயோகித்து ஓடினார். தூரத்தில் தன்னைத் தொடரும் ஷு ஒலிகளை வைத்து தூரத்தை அனுமானித்துக் கொண்டார். அத்தனை பரபரப்பிலும் ஆனியிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

'ஆனி, என்னை மன்னித்து விடு'. உன்னை எச்சரிக்கத்தான் வந்தேன். நீ தப்ப முடியாத வகையில் சிக்கியிருப்பதை அறிய.. எனக்கு எதுவும் புரியவில்லை. அத்தனை பாடுபட்டுக் கொண்டு வந்த அந்தப் பையனை இழக்கவோ, என் நோக்கமும், திட்டமும் சிதைந்து போகவோ எனக்குச் சம்மதமில்லை.

'எனவே, எனக்கு வேறு வழியில்லை. என் நோக்கம் நிறைவேறுதல் தான் எனக்கு முக்கியம். தோல்வியை என்னால் சகித்துக் கொள்ளவே முடியாது. ப்ளீஸ், என்னை உன் ஆத்மா மன்னிக்கட்டும்.'

தன்னைத் தொடரும் காலடிகளின் ஓசை அதிகரிப்பதை அவரால் உணர முடிந்தது. அந்த அனாதையான சிறிய சாலையில் தன் காரை நிறுத்தியுள்ள முக்கிய சாலை நோக்கி ஓடிக் கொண்டிருந்த பார்க்கர் ஸ்மித்திற்குக் களைப்பு மேலிட்டது.

பின்னால் துரத்தி வருபவர்களிடம் மாட்டிக் கொண்டால், அதை விடக் கேவலம் எதுவும் இல்லை. தன் ஓட்டத்தில் மேலும் வேகம் கூட்டினார் பார்க்கர் ஸ்மித்.

ஆனாலும் துரத்தும் மனிதர்களுக்கும், தனக்கும் உள்ள தூரம் குறைந்து வருவதை நன்றாக உணர முடிந்தது. ஓடும் வரை ஓடலாம். ஒரு கட்டத்தில் நின்று, அவர்கள் சமீபித்ததும் இரண்டு பேரையும் துப்பாக்கியால்....

யோசனையுடன் ஓடிக்கொண்டிருந்த பார்க்கர் ஸ்மித்தை உரசினாற் போல வந்து நின்றது அந்தக் கார்.

"ஹலோ மிஸ்டர் பார்க்கர்? என்ன ஆயிற்று? ஏதாவது அவசரமா? வண்டியில் ஏறுங்கள், கமான்" என்றான் ஜான்சன். ஜோ அண்ட் ஜோ ஊழியன்.

யோசிக்கக் கூட நேரமில்லாமல் அவசரமாக முன்பக்கம் ஏறிக் கொண்டார் பார்க்கர் ஸ்மித், "நல்ல நேரத்தில் வந்தீர்கள். சீக்கிரம். வேகமாகச் செல்லுங்கள்" என்றார்.

ஜான்சன் படு வேகத்தில் காரைக் கிளப்பிக் கொண்டு சென்று மறைய...

பின்னால் ஓடி வந்த கென்னடியும், நியூட்டனும் திகைத்துப் போய் நின்றார்கள். கென்னடி அவசரமாகக் காரின் எண்ணைக் குறித்துக் கொண்டார்.


"வாருங்கள் நியூட்டன், அங்கே என்ன ஆயிற்று என்று பார்க்கலாம். இனி அவனைத் துரத்த முடியாது. நம் கார்கள் தொலை தூரத்தில் இருக்கின்றன."

இருவரும் மூச்சிரைக்கத் திரும்பி நடந்தார்கள்.

முக்கிய சாலைக்கு வந்ததும், "நான் இங்கேயே இறங்கிக் கொள்கிறேன் மிஸ்டர் ஜான்சன், என் காரை இங்கே நிறுத்தியிருக்கிறேன்" என்றார் பார்க்கர் ஸ்மித்.

"அதனால் என்ன?" என்று ஜான்சன்

> "....உயிரை மட்டும் வைத்துக் கொண்டு உங்களை ஜூஸாய்ப் பிழிய முடியும். ஒரு உடலில் என்ன என்ன வகையான வலிகளை உண்டுபண்ண முடியுமோ அவ்வளவையும் ஏற்படுத்த முடியும்.
>
> ஐந்து நிமிடம் நேரம் தருகிறேன்.
>
> -ப்ரூடி ஜேம்ஸ்-



காரை நிறுத்தாமல் தொடர்ந்து ஓட்டினான்.

"ஜான்சன்! என்ன இது விளையாட்டு? காரை நிறுத்துங்கள்."

"இருங்கள் மிஸ்டர் பார்க்கர். பதட்டப் படாதீர்கள். உங்கள் பின் மண்டையைத் தொட்டுக் கொண்டிருக்கும் பிஸ்டலின் முனையை உணர முடிகிறதா தோழரே? ஜான்சன், காரின் லைட்டைப் போடப்பா."

காருக்குள் வெளிச்சமயமாக...ப்ரூடி ஜேம்ஸ் பின் இருக்கையில் அமர்ந்த இருந்தார். பிஸ்டலின் முனையை பார்க்கரின் பின்னந்தலையில் வைத்திருந்தார். லேசாகச் சிரித்தார்.

"ஜான்சன், பார்க்கர் வைத்திருக்கும் துப்பாக்கியைப் பெற்றுக்கொள். கொடுங்கள் நண்பரே... பேசலாம்."

பார்க்கர் கோட் பாக்கெட்டில் இருந்து எடுத்துக் கொடுத்து விட்டு, "மிஸ்டர் ப்ரூடி, நீங்கள் நடந்து கொள்ளும் விதம் முறையானதல்ல!" என்றார்.

"இது யார், யாருக்குச் சொல்ல வேண்டிய வார்த்தை?"

"எதற்காக என்னைக் கொண்டு செல்கிறீர்கள்?"

"தெரியாது? உங்களிடமிருந்து எவ்வளவு பதில்கள் தேவைப்படுகின்றன! முதலாவதாக மிஸ் ஆனியை எதற்காகக் கொன்றீர்கள் மிஸ்டர் பார்க்கர்?"

"அது... அது... என் சொந்த விஷயம்."

"சரி, சரவணகுமார் எங்கே?"

"அது தான் வெஸ்லி துரோகம் செய்து விட்டானே எனக்கு..."

"துரோகம் செய்தது வெஸ்லியா, நீங்களா? உங்கள் மனைவியைக் கட்டிப் போட்டு விட்டுக் கடத்தியதாகக் கண்ணெதிரில் எவ்வளவு அருமையான நாடகம் காட்டினீர்கள்? உங்களை, உங்கள் மனைவியை என்று ரகசியமாக நாங்கள் கண்காணித்ததில் ஒரே ஒரு தகவல் தவிர மற்றதெல்லாம் தெரிந்து கொண்டாயிற்று. அந்த ஒரு தகவல்.. வெஸ்லி இப்போது எங்கே இருக்கிறான்? கமான் சொல்லுங்கள்."

கார் சீரான வேகத்தில் ஓடிக் கொண்டிருக்... பார்க்கர் ஸ்மித் அதிர்ச்சியில் இருந்தார். தன் எல்லாத் திட்டங்களும் தரை மட்டமாக நொறுங்கிக் கொண்டிருப்பதை உணர... வலித்தது.

"மற்றொரு முறை கேட்க வேண்டுமா? எங்கே வெஸ்லி?"

"எனக்குத் தெரியாது."

"எங்கள் நிறுவனத்தில் ஒரு விசாரணை அறை வைத்திருக்கிறோம். அங்கே என்ன என்ன வகையான இயந்திரங்கள் வைத்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். உயிரை மட்டும் வைத்துக் கொண்டு உங்களை ஜூஸாய்ப் பிழிய முடியும். ஒரு உடலில் என்ன என்ன வகையான வலிகளை உண்டு பண்ண முடியுமோ அவ்வளவையும் ஏற்படுத்த முடியும். தாங்கள் ஒரு ஜென்டில் மேன். தங்களுக்கு அந்த மாதிரி வழிகள் எல்லாம் தேவைப்படாது என்று நினைக்கிறேன். ஐந்து நிமிடம் நேரம் தருகிறேன். அதற்குள் சொல்லுங்கள்"

கார் ஓடிக் கொண்டிருக்க...

என்ன செய்யலாம் என்று யோசித்தார் பார்க்கர் ஸ்மித்.

*(அடுத்தவாரம் முடிக்கலாம்)*


## தீக்... தீக்... தீக்

## ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒரு திருப்பம்



யார் கொலையாளி?
இறுதிவரை சஸ்பென்ஸ்

## புதிய மர்மத் தொடர்
## -ஆரம்பம்-

முரசு 141 முதல்

மரணித்துவிட்ட மர்மக்கதை மன்னன்
ராஜேந்திரகுமார் எழுதியது

வீறு - வீறு - சுறு - சுறு நாவல்


# பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ்.சிவசுதன்.
வயது: 16
முகவரி: 237 ஏ, லோவர் வீதி, பதுளை.
பொழுது போக்கு: புத்தகம் படித்தல்.



பெயர்: அஹமட் பிக்ரி.
வயது: 21
முகவரி: 20, அல் அக்ஸாபுர, வெலிகிட்டிய றோட், திக்குவல்ல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம், கிரிக்கெட்.



பெயர்: தவ்ஸீர் கான்.
வயது: 24
முகவரி: P.O.Box-1180. Block C-5, YANBO ROAD, AL MADINA, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: க.பி. சசிகுமார்
வயது: 18
முகவரி: டன்சினன் மேல்பிரிவு, பூண்டுலோயா.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.



பெயர்: கே. இராசகுலேந்திரன்.
வயது: 30
முகவரி: P.O.BOX-16389. DOHA, QATAR.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எஸ். சல்மா.
வயது: 22
முகவரி: P.O.BOX -67148, BAYAN NO-43762, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். மன்சூர்.
வயது: 29
முகவரி: P.O.BOX- 384, DHAHRAN AIRPORT-31932, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: ஏ.நஸ்புள்ளா.
வயது: 18
முகவரி: ஜாவா வீதி, பெரிய கிண்ணியா.
பொழுது போக்கு: வானொலி கேட்டல்.

பெயர்: வி. பூபாலதேவன்.
வயது: 19
முகவரி: உடபங்குவ, அமுன வத்தை, லுணுகல.
பொழுது போக்கு: கதைப்புத்தகம், கிரிக்கெட்.

பெயர்: பி.சங்கீத்
வயது: 17
முகவரி: 170/13, அல்விஸ் டவுன், ஹெந்தளை, வத்தளை.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: ஆர். மனோராஜ்.
வயது: 24
முகவரி: SCHULWEG-5. 8962 BERGDIETIKON, SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, சினிமா.

பெயர்: ஏ.பாஸிட்.
வயது: 16
முகவரி: புழுதி வயல், பாலாவி, புத்தளம்.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

# தாய்

## 62 மக்சீம் கார்க்கி

இந்தச் சமயத்தில் நிகலாய் வெஸோஷிகோவே அறைக்குள் வந்து விட்டான். உள்ளே வந்ததும் அவன் கதவைத் தாளிட்டான்; தன் தொப்பியை எடுத்துவிட்டு, தலையைத் தடவிக் கொடுத்தான்; லேசாகச் சிரித்துக் கொண்டே நின்றான். இகோர் முழங்கைகளை ஊன்றி எழுந்து கொண்டு, தலையை அசைத்தவாறு சொன்னான்:

"வருக, வருக...."

நிகலாய் பல்லைக் காட்டிப் புன்னகை புரிந்தவாறே தாயிடம் நெருங்கி அவள் கையைப் பற்றினான்.

"நான் மட்டும் உன்னைச் சந்தித்திரா விட்டால், மீண்டும் சிறைக்கே திரும்பி போயிருப்பேன். எனக்கு நகரில் யாரையுமே தெரியாது. தொழிலாளர் குடியிருப்புக்குத் திரும்பிப் போயிருந்தாலோ ஒரே நிமிஷத்தில் அவர்கள் என்னைப் பிடித்திருப்பார்கள். ஏனடா முட்டாள்தனமாய் சிறையிலிருந்து தப்பியோடி வந்தோம் என்று நினைத்துக் கொண்டு அங்குமிங்கும் சுற்றித் திரிந்தேன். திடீரென்று நீலவ்னா தெரு வழியாக ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். உடனே அவளுக்குப் பின்னாலேயே நானும் ஓடி வந்தேன்."

"சரி. நீ எப்படி வெளியே வந்தாய்?" என்று கேட்டாள் தாய்.

அவன் அந்தச் சோபாவின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு தோளைக் குலுக்கிக் கொண்டு பேசத் தொடங்கினான்:

"சந்தர்ப்ப விசேஷம்தான்! கிரிமினல் கைதிகள், சிறையதிகாரியைப் பிடித்து உதைத்துக் கொண்டிருந்தார்கள்; அப்போது நான் காற்று வாங்கியவாறு வெளியே உலாவிக் கொண்டிருந்தேன். அந்தச் சிறையதிகாரி ஒரு தடவை எதையோ திருடினான் என்பதற்காக, அவனுக்கு போலீஸ் படையிலிருந்து கல்தா கொடுத்தார்கள். இப்போதோ இந்தப் பயல் ஒவ்வொருத்தனையும் நோட்டம் பார்த்துத் திரிவதும், உளவு சொல்வதுமாகவே இருந்தான்; இவனால் யாருக்குமே நிம்மதி கிடையாது. எனவேதான் அவர்கள் அவனைப் பிடித்து மொத்தினார்கள். ஒரே குழப்பமாக இருக்கவே, சிறையதிகாரிகள் விசில்களை ஊதிக்கொண்டு நாலா பக்கங்களிலிருந்தும் ஓடி வந்தார்கள். நான் சிறைக்கதவுகள் திறந்து கிடப்பதைப் பார்த்தேன்; அதற்கு அப்பாலுள்ள மைதானச் சவுக்கத்தையும் ஊரையும் பார்த்தேன்; மெதுவாக, கனவில் நடப்பது மாதிரி நடந்து வெளியே வந்தேன்; தெருவுக்குள் பாதிதூரத்துக்கு மேல் வந்த பிறகு தான் எனக்கே நினைவு தெளிந்தது. உடனே யோசித்தேன்: எங்கே போவது? திரும்பிப் பார்த்தேன். அதற்குள் சிறைக் கதவுகள் மூடிவிட்டதைக் கண்டேன்......"

"ஹும்!" என்றான் இகோர். "ஏன் ஐயா! நீங்கள் பேசாமல் திரும்பிப் போய் கதவைத் தட்டி, அவர்களைக் கூப்பிட்டு: 'ஐயா, என்னை மன்னியுங்கள், கனவான்களே! நான் ஏதோ சிறு பிழை செய்து விட்டேன். பொறுத்தருளுங்கள்' என்று சொல்லி பழையபடியும் உள்ளே போயிருக்கலாமே."

"ஆமாம்" என்று கூறிச் சிரித்தான் நிகலாய். "அது முட்டாள்தனம். யாரிடமும் எதுவும் சொல்லாமல் நான் இப்படி ஓடி வந்து விட்டதானது, என்னுடைய தோழர்களுக்கு சரியென்று பட்டிராது. சரி, அப்படியே போய்க் கொண்டிருந்தேன். எதிரே ஒரு சவ ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. ஒரு குழந்தையைப் புதைப்பதற்காகப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களோடு நானும் சேர்ந்து, சவப்பெட்டிக்குப் பக்கமாகச் சென்று என் தலையைத் தொங்க விட்டவாறு, யாரையுமே நிமிர்ந்து பார்க்காமல் நடந்து வந்தேன். இடுகாட்டில் நான் கொஞ்ச நேரம் உட்கார்ந்து காற்று வாங்கினேன். அப்புறம் திடீரென்று எனக்கு ஒரு யோசனை வந்தது...."



**மீண்டும் தெருவுக்கு வந்தேன். மனமே கசந்துபோய், எரிச்சலோடு நடந்து வந்தேன். போலீசார் ஒவ்வொருவரையும் கூர்ந்து, கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்.... 'சரிதான், நான் சிறிது நேரத்தில் எவனாவது ஒரு நீதிபதி முன்னால்தான் இழுத்துச் செல்லப்படுவேன்.' என்று நினைத்தேன்.**

"ஒரே ஒரு யோசனைதானே?" என்று கேட்டு விட்டு, பெருமூச்செறிந்தான் இகோர். "உன் தலையில் பல யோசனைகளுக் குத்தான் இடமிருக்காதே என்று நினைத் தேன்."

வெஸோவ்ஷிகோவ் வாய் நிறைந்து சிரித்தான்; தலையை அசைத்துக் கொண்டு பேசினான்:

"ஓ! என் மூளை முன்னை மாதிரி காலியாய் இல்லை! என்ன இகோர் இவானவிச்! உனக்கு இன்னும் சீக்குக் குணமாக வில்லையா?"

"ஒவ்வொருவரும் தம்மால் முடிந்ததைச் செய்கிறார்கள்" என்று ஈரமாய் இருமியவாறு பதிலளித்தான் இகோர். "சரி உன் கதையை ஆரம்பி."

"அப்புறம் நான் இங்கே இருக்கிற பொதுஜனப் பொருட்காட்சி சாலைக்குள்ளே நுழைந்தேன். உள்ளே சென்று அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தவாறே யோசித்தேன்: இனிமேல் எங்கே போவது? என்மீது எனக்குக் கோபம் கூட வந்தது. அத்துடன் பசி வேறே! மீண்டும் தெருவுக்கு வந்தேன். மனமே கசந்துபோய், எரிச்சலோடு நடந்து வந்தேன். போலீசார் ஒவ்வொருவரையும் கூர்ந்து, கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். 'சரிதான், என்னை மாதிரி மண்ணுப் பிறவியாக இருந்தால், நான் சிறிது நேரத்தில் எவனாவது ஒரு நீதிபதி முன்னால்தான் இழுத்துச் செல்லப்படுவேன்.' என்று நினைத்தேன். இந்தச் சமயத்தில் திடீரென்று என்னை நோக்கி நீலவ்னா ஓடி வருவது தெரிந்தது. நான் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றேன்; பிறகு அவளைப் பின் தொடர்ந்தேன். இவ்வளவு தான் விஷயம்."

"நான் உன்னைப் பார்க்கவில்லையே!" என்று குற்றம் செய்து விட்டவள் மாதிரிக் கூறினாள் தாய். அவள் நிகலாயைக் கூர்ந்து பார்த்தாள்; அவன் முன்னைவிட மெலிந்து போய் இருப்பதாக அவளுக்குப் பட்டது.

"அங்குள்ள தோழர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்" என்று தலையைச் சொறிந்து கொண்டே சொன்னான் நிகலாய்.

"சரி. சிறை அதிகாரிகளைப் பற்றி உனக்குக் கவலை இல்லையா? அவர்கள் மீது உனக்கு அனுதாபம் கிடையாதா? அவர்களும் தான் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்" என்றான் இகோர். அவன் வாயைத் திறந்து உதடுகளை அசைத்தான். காற்றையே கடித்துச் சுவைத்துத் தின்பது மாதிரி இருந்தது அவனது வாயசைப்பு. "சரி. வேடிக்கைப் பேச்செல்லாம் இருக்கட்டும். முதலில் உன்னை எங்காவது ஒளித்து வைக்க வேண்டுமே. அது ரொம்ப நல்ல காரியம்தான்; ஆனால் லேசில் நடக்கிற காரியமா? நான் மட்டும் எழுந்து நடக்க முடிந்தால்" அவன் பெருமூச்சு விட்டவாறே தன் கைகளை மார்பின் மீது வைத்து, நெஞ்சைத் தடவிக் கொடுத்துக் கொண்டான்.

"நீ ரொம்பச் சீக்காயிருக்கிறாய், இகோர் இவானவிச்!" என்று தலையைத் தாழ்த்திக் கொண்டே கூறினான் நிகலாய். தாய் பெருமூச்சு விட்டாள். அந்த அடைசலான சிறு அறையை கவலையோடு பார்த்தாள்.

"அது என் சொந்த விஷயம்" என்றான் இகோர். "அம்மா, நீங்கள் அவனிடம் பாவெலைப் பற்றிக் கேளுங்கள். சும்மா இன்னும் பாசாங்கு செய்து கொண்டிராதீர்கள்."

நிகலாய் பல்லைக் காட்டிச் சிரித்தான். "பாவெல் நன்றாகத்தான் இருக்கிறான். சௌக்கியமாயிருக்கிறான். அவன்தான் எங்களுக்குத் தலைவன் மாதிரி இருக்கிறான்; அதிகாரிகளோடு பேசுகிறான்; பொதுவாக, அவன் தான் உத்தரவு போடுகிறான். எல்லோரும் அவனைமிகவும் மதிக்கிறார்கள்."

நிகலாய் வெஸோவ்ஷிகோவ் சொல்வதைக் கேட்டவாறே தலையை அசைத்துக் கொண்டாள் தாய். நீலம் பாரித்து உப்பியிருந்த இகோரின் முகத்தையும் கடைக்கண்ணால் பார்த்தாள். அந்த முகமே அசைவற்று, உணர்ச்சியற்றுத், தட்டையாயிருப்பது போலத் தோன்றியது அவளுக்கு; அவனது கண்கள் மட்டும்தான் உணர்ச்சியோடும் உவகையோடும் ஒளிவீசிக் கொண்டிருந்தன.

"ஏதாவது தின்னக் கொடுங்களேன்- எனக்கு இருக்கிற அகோரப் பசியை உங்களால் கற்பனை கூடப் பண்ண முடியாது" என்று திடீரெனச் சொன்னான் நிகலாய்.

"அம்மா, அதோ அரங்கிலே கொஞ்சம் ரொட்டி இருக்கிறது." என்றான் இகோர். "அப்புறம் வெளியே ஹாலுக்குப் போய், இடது புறம் இருக்கும் இரண்டாவது கதவைத் தட்டுங்கள். ஒரு பெண் வந்து திறப்பாள். அவளை இங்கே வரச் சொல்லுங்கள். வரும் போது தின்பதற்கு என்னென்ன இருக்கிறதோ அதையெல்லாம் கொண்டு வரச் சொல்லுங்கள்."

"எல்லாவற்றையும் ஏன் கொண்டுவரச் சொல்கிறாய்?" என்று கேட்டான் நிகலாய்.

"நீ ஒன்றும் கவலைப் படாதே. அப்படி ஒன்றும் அதிகமிராது."

தாய் வெளியே சென்றாள். கதவைத் தட்டினாள். பதிலில்லை. அந்த அமைதியில் அவள் இகோரைப் பற்றி நினைத்தாள்:

"அவன் செத்துக் கொண்டுதான் இருக்கிறான்....."

"யாரங்கே?" என்று அறைக்குள்ளிருந்து யாரோ கேட்டார்கள்.

"இகோர் இவானவிச்சிடமிருந்து வந்திருக்கிறேன்" என்று அமைதியாகப் பதில் சொன்னாள் தாய். "அவன் உங்களை அவனது அறைக்கு வரச் சொன்னான்."

"இதோ வருகிறேன்" என்று கதவையே திறக்காமல் உள்ளிருந்தவாறே பதில் சொன்னாள் அந்தப் பெண். தாய் ஒரு கணம் நின்றாள். பிறகு மீண்டும் கதவைத் தட்டினாள்; உடனே கதவு திறக்கப்பட்டது. ஒரு நெட்டையான மூக்குக்கண்ணாடியணிந்த ஸ்திரீ ஹாலுக்குள் வந்தாள். தனது உடுப்பிலுள்ள மடிப்புக்களை விரித்துத் தடவிட்டு விட்டு, வெடுக்கென்று தாயைப் பார்த்துக் கேட்டாள் அவள்:

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"இகோர் இவானவிச் என்னை அனுப்பினான்."

"சரி. புறப்படுங்கள், உங்களை நான் பார்த்திருக்கிறேனே" என்று அமைதியாகக் கூறினாள் அவள்; "சௌக்கியமா? இங்கே ஒரே இருட்டாயிருக்கிறது."

தாய் அவளைப் பார்த்தாள்; இதற்கு முன் அவளைச் சில தடவை நிகலாய் இவானவிச்சின் வீட்டில் பார்த்திருப்பதாக அவளுக்கு ஞாபகம் வந்தது.

"இவர்கள் எல்லாம் நம்மைச் சேர்ந்தவர்கள்!" என்று நினைத்துக் கொண்டாள்.

அந்தப் பெண் பெலகேயாவைத் தனக்கு முன்னால் போகச் சொன்னாள்.

"அவனுக்கு ரொம்ப மோசமாக இருக்கிறதா?" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம். அவன் படுத்திருக்கிறான்; அவன் தின்பதற்கு ஏதாவது கொண்டு வரச் சொன்னான்."

"அது ஒன்றும் அவசியமில்லை."

அவர்கள் இகோரின் அறைக்குள் நுழைந்ததுமே அவனது கரகரத்த சுவாசம் அவர்கள் காதில் விழுந்தது:

"நான் என் மூதாதையர்களிடம் போய்ச் சேரப்போகிறேன், தோழா!... லுத்மீலா வசீலியெவ்னா, இந்த ஆசாமி கொஞ்சங்கூட மரியாதையில்லாமல், அதிகாரிகளிடம் உத்தரவு வாங்காமல், சிறையிலிருந்து வெளியே வந்து விட்டான். முதலில் அவனுக்கு ஏதாவது தின்னக் கொடுங்கள். அப்புறம் இவனை எங்காவது கொண்டுபோய் மறைத்து வைக்க வேண்டும்."

அந்தப் பெண் அவன் கூறியதை ஆமோதித்துத் தலையை அசைத்தாள்; நோயாளியைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே சொன்னாள்:

"இவர்கள் வந்தவுடனேயே எனக்குச் சொல்லியனுப்பியிருக்க வேண்டும், இகோர். அது சரி. நீங்கள் இரண்டு பொழுது மருந்தைக் கூடச் சாப்பிடாமல் விட்டிருக்கிறீர்களா? வெட்கமாயில்லை? தோழரே, என் கூட வாருங்கள். இகோரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதற்குச் சீக்கிரமே ஆட்கள் வந்து விடுவார்கள்."

"அப்படியென்றாள், நீங்கள் என்னை ஆஸ்பத்திரியில் கொண்டு போடுவது என்றே தீர்மானித்து விட்டீர்களா?"

"ஆமாம். நான் அங்கு வந்து உங்களுக்குத் துணையிருப்பேன்."

"அங்கே கூடவா? அட கடவுளே!"

"உஷ் போதும் அசட்டுத்தனம்."

அவள் பேசிக் கொண்டே இகோரின் மார்பின் மீது கிடந்த போர்வையை இழுத்துச் சரி பண்ணினாள்; நிகலாயைக் கூர்ந்து கவனித்தாள்; மருந்து பாட்டில்களைத் தூக்கிப் பார்த்து எவ்வளவு மருந்து மிஞ்சியிருக்கிறது என்பதைப் பார்த்தாள். நிதானமான அடக்கமான குரலில் பேசினாள். லாவகமாக நளினத்தோடு நடமாடினாள். அவளது முகம் வெளுத்திருந்தது. புருவங்கள் மூக்குக்கு மேலே கூடியிருந்தன. தாய்க்கு அவளது முகம் பிடிக்கவே இல்லை. அந்த முகத்தில் அகந்தை தொனிப்பதாக அவளுக்குத் தோன்றியது. அந்தப் பெண்ணின் கண்களில் களிப்போ பிரகாசமோ இல்லை. மேலும் அவள் அதிகார தோரணையிலேயே பேசினாள்.

"சரி. நாங்கள் இப்போதைக்கு உங்களை விட்டுச் செல்கிறோம்" என்று தொடங்கினாள் அவள். "ஆனால் நான் சீக்கிரமே திரும்பி வந்து விடுவேன். இகோருக்கு இந்த மருந்தில் ஒரு கரண்டிகொடுங்கள். அவனைப் பேச விடாதீர்கள்"

நிகலாயைக் கூட்டிக் கொண்டு அவள் வெளியே சென்றாள்.

"அதிசயிக்கத்தக்க பெண் அவள்!" என்று பெருமூச்சுடன் சொன்னான் இகோர். "அதிசாமர்த்தியமான பெண்! அம்மா, நான் உங்களையும் அவளோடு சேர்த்துவிட வேண்டும். அவள் அடிக்கடி களைத்துச் சோர்ந்து விடுகிறாள்."

"பேசாதே. இந்த மருந்தைச் சாப்பிடு" என்று மிருதுவாகச் சொன்னாள் தாய்.

அவன் மருந்தைச் சாப்பிட்டு விட்டு, ஒரு கண்ணை மூடிக் கொண்டான்.

"எப்படியும் நான் சாகத்தான் போகிறேன். வாயை மூடிப் பேசாதிருந்தாலும் சாகத்தான் போகிறேன்." என்றான் அவன்.

அவன் தன் அடுத்த கண்ணால் தாயைப் பார்த்தான். அவனது உதடுகள் மட்டும் லேசாகப் பிரிந்து புன்னகை புரிந்தன. தாய் அவனது தலைப் பக்கமாக குனிந்து பார்த்தாள். திடீரென்று நெஞ்சில் பாய்ந்த அனுதாப வேதனையில் அவளது கண்களில் கண்ணீர் துளிர்த்து விட்டது.

"எல்லாம் சரிதான்?- இது இயற்கைதானே! வாழ்வதிலுள்ள இன்பத்தோடு சாவதின் அவசியமும் சேர்ந்து தானே வருகிறது!" என்றான் அவன்.

தாய் அவனது நெற்றியின் மீது கை வைத்துப் பார்த்து விட்டு மெதுவாகச் சொன்னாள்:

"உன்னால் கொஞ்ச நேரம் கூடச் சும்மா இருக்க முடியாதா?"

அவன் தன் கண்களை மூடி, தனது நெஞ்சுக்குள் கரகரக்கும் சுவாசத்தைக் கேட்பது போல இருந்தான். பிறகு உறுதியோடு பேசத் தோடங்கினான்:

"சும்மா இருப்பதில் அர்த்தமே இல்லை. அம்மா, அதனால் எனக்கு என்ன லாபம்? என்னவோ இன்னும் கொஞ்ச விநாடிகால வாதனை. அப்புறம் உங்களைப் போன்ற அற்புதமான பெண்மணியோடு சிலவார்த்தைகள் பேசும் ஆனந்தம் கூட எனக்கு அற்றுப் போய் விடும். அடுத்த உலகத்திலுள்ளவர்கள், இந்த உலகத்தில் உள்ளவர்களை போல் அவ்வளவு நல்லவர்களாயிருக்க முடியாது. அது மட்டும் நிச்சயம்."

(தொடர்ந்து வரும்)

# டா... டா.. டாக்டர்

-மெண்டல் மனோகரன்-



**"டாக்டர்.... வணக்கம்!"**

"வணக்கம்- உட்காருங்கள்."

**"நான் உங்களிடம் வைத்தியம் செய்வதற்காக வந்திருக்கிறேன்."**

"நல்லது; உங்கள் உடம்புக்கு என்ன?"

**"ஒன்றுமில்லை."**

"ஹஹ்ஹா!"

**"என்ன டாக்டர் சிரிக்கிறீர்கள்?"**

"இந்த ஆஸ்பத்திரியில் வேடிக்கை என்னவென்றால், நோயாளிகள் யாருக்கும் ஒரு வியாதியுமில்லை... ஆனால் துரதிஷ்டவசமாக கூட்டி வருபவர்கள்தான் அதை ஒப்புக் கொள்வதில்லை."

**"கரெக்ட்! எனக்குக்கூட பாருங்கள்.... ஒன்றுமில்லை. ஆனால் எவன் ஒப்புக் கொள்கிறான்? எல்லோரும் பைத்தியம் என்கிறார்கள்."**

"சேச்சே"

**"நீங்கள் கெட்டிக்காரர், ஆனால் பாருங்கள், இன்றைக்கு இருக்கும் சமூகச் சூழலில் ஒருவன் சுவாதீனமாக இருக்க முடியும் என்று நீங்கள் நினைப்பது ஆச்சரியமாக இருக்கும். அதே சமயத்தில்....! இப்படி தலையைச் சொறியாதீர்கள் டாக்டர். எனக்கு கோபம் வரும்... உம்.. ம்ஹீம்! இப்படி சட்டென்று நிறுத்தாதீர்கள்! அப்போதும் எனக்கு கோபம் வரும்.. ஹஹ்ஹிஹி! ஹோஹ் ஹோஹ் ஹோ? என்ன அப்படி பார்க்கிறீர்கள்...? என்னைப் பார்த்தால் பைத்தியம் போல் தோன்றுகிறதா?"**

"சே..ச்..சே."

**"எல்லோரும் அப்படித்தான் சொல்கிறார்கள், ஆனால் என்னை ஏனோ டாக்டரிடம் கொண்டுவந்து விடுகிறார்கள். இது ஏன்? தெரிந்து கொள்வதற்காகத்தான் மனநோய் மருத்துவரையே பார்த்து கேட்டுவிடலாம் என்று வந்தேன்! கோபிநாத் என்று வெளியே போர்டு போட்டிருக்கிறதே.... அவர் யார்?"**

"இங்கே சீஃப் டாக்டர்"

**"அவர் சீப்பு டாக்டர் என்றால்.. நீங்கள் சோப்பு டாக்டரா? இல்லை.. கண்ணாடி... பவுடர் டாக்டரா? ஹஹ்ஹா.. ஹிஹ்ஹிஹி... ஹோஹ் ஹோஹ்! என்ன டாக்டர்.. என்னைப் பார்த்தால்...?"**

"கேட்கவே வேண்டாம்! உங்களைப் பார்த்தால் பைத்தியம் போலத் தோன்றவேயில்லை.. சேச்சே!"

**"உண்மைதான் டாக்டர். ஆனால் சில சமயம் தோன்றுகின்ற கவலைகள்தான் என்னை திகைக்கச் செய்து ஆத்திரமடையச் செய்து விடுகின்றன."**

"உதாரணமாக..?"

**"விளையாட்டு வீரர்கள் ஒரு 'கால் பந்தை' வைத்து விளையாடுமளவுக்கு நாட்டில் நிதிநிலை வறண்டு விட்டதே! ஒரு முழுப்பந்தை வாங்க முடியக்கூடிய சுபீட்ச காலம் எப்போது வருமோ என்று கவலைப் படுவேன். விடை தெரியாததில் ஆத்திரம் அதிகமாகும். ரோட்டில் போகிறவர்கள் சட்டையைக் கிழிப்பேன். கல்லைத் தூக்கி எறிவேன். இதெல்லாம் தப்பா டாக்டர்?"**

"யார் சொன்னது..? தேசத் தொண்டு."

**"அப்படியானால் சரி! ஹாஹ்ஹஹா... ஹீஹ்ஹிஹி.. ஹோஹ் ஹோஹ்..."**

"யெஸ்.. யெஸ்.. உங்களைப் பார்த்தால் பைத்தியம் போல் தோன்றவேயில்லை?"

**"நான் அதற்கு சிரிக்கவில்லை டாக்டர். நான் செய்வது தேசத்தொண்டு என்று புரியாமல், இந்த பைத்தியக்கார ஜனங்கள் பின்னங்கால் பிடரியில் முட்ட பயந்து பயந்து ஓடின ஓட்டம் இருக்கிறது பாருங்கள்.."**

"ஹஹ்ஹா... ஹிஹி... ஹோஹ் ஹோஹ் ஹோ"

**"டாக்டர் என்னை கேலி செய்கிறீர்கள் என்று நினைக்கிறேன்."**

"அடடா தவறாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள் என்று நினைக்கிறேன். நான் உங்கள் நண்பன்."

**"இல்லை.. பொய் சொல்கிறீர்கள். அந்த அறையில் ஒரு பைத்தியத்தை கட்டிப் போட்டிருக்கிறீர்கள். என்னையும் அப்படித் தானே கட்டிப் போடுவீர்கள்?"**

"மோசமான கற்பனை. அவன் பைத்தியம். விடுவித்தால் நம் ரெண்டு பேரையும் ரொம்பவும் கஷ்டப்படுத்துவான்... உள்ளேயே இருக்கட்டும்."

**"பார்த்தால் பைத்தியம் போலத் தெரியவில்லையே. படித்தவனாட்டம் இருக்கிறானே.. அது சரி அங்கே என்ன சத்தம்? தடதடவென்று யாரோ ஓடி வருவது போல..?"**

"அது ஒன்றுமில்லை."

**"இல்லை. என்னவோ இருக்கிறது. நீங்கள் மறைக்கிறீர்கள். ஆட்களை வர வழைத்து என்னைக் கட்டிப் போடப் போகிறீர்கள் போல தோன்றுகிறது."**

"நல்ல தமாஷ்! அடடா.. இதற்கு போய் அழுவார்களா...?கவலையை விடுங்கள். அவர்களை அனுப்பிவிட்டு வந்துவிடுகிறேன். சரிதானே.!"

(அவர் போன கையோடு சிலர் உள்ளே ஓடி வருகிறார்கள்.)

**"இப்படி திபு திபுவென்று வருகிறீர்கள்? டாக்டர் எங்கே? உங்களை அனுப்பி விடுவதாகச் சொன்னாரே... அடடா.. அந்த அறையை ஏன் திறக்கிறீர்கள்? உள்ளே பைத்தியத்தை அவிழ்த்துவிடாதீர்கள்."**

"உளறாதே! உள்ளே கட்டிப் போடப் பட்டிருப்பதுதான் டாக்டர் கோபிநாத்! சீஃப் டாக்டரை கட்டிப் போட்டுவிட்டு ஒரு பைத்தியம் டாக்டர் வேடத்தில் தப்பித்துவிட்டது... அது இங்கே வந்ததா? பார்த்தாயா?"

**"ஹஹ்ஹா.... ஹிஹ்ஹிஹி... ஹோஹ் ஹோ ஹோஹ் ஹோ."**



வாரமலர் தினமுரசு

பெப்.04–10,1996

# தெளிவு

## அறிவுமதி

—தமிழக எழுத்தாளர்
திரைப்பட வசனகர்த்தா
பாடலாசிரியர்—
உதவி இயக்குநர்—

சிறுகதை



மேற்கின் ரோஜாக் குழப்பம் இன்று இருக்காது நிச்சயமாய். இருள் கொசுவலையாய்...சில்க் துணியாய்...காடாத் துணியாய் அடர்ந்து கொண்டிருந்தது. கரும்பலகையில் சோக்கட்டியின் கிறுக்கல்கள். கடல் நெடுகச் சாம்பல். ஓரத்தில் புரளும்... மல்லிகை வடம். தூரத்துக் கப்பல்களின் மின் பளிச்.

செல்வியின் கொலுசுக் கால்களில் மணல் பிசிறுகள். கைக்குட்டையால் பிரபு தட்டி விட்டான். சட்டெனக் கால்கள் பதுங்கின. முகம் பார்த்தான். கோபக்காடு. மௌனம் திறக்க உளி கிடைக்காத அவஸ்தை அவனுக்கு. நதி கிடைக்காத திணறலில் மழை, அவளுக்குள். உதடுகளில் கண்ணுக்குப் புலப்படாத அதிர்வுகள். உதட்டின் மேல் முடிமிருதுகளில் துளித்துளி ஈரமினுக்கு.

**“என்னோட சந்தேகங்களால உன் சிறகுகளை முறிக்கிற ஆண் இல்லே நான்”**

வழக்கமாய் வாரத்திற்கு ஒரு முறை வந்து அமர்கிற அதே இடம். அலுவலகம் முடிந்து அவன் வந்து அமர்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவளும் வந்து விட்டாள்.

“வா செல்வி. உட்காரு. ஒரு வேடிக்கை தெரியுமா? இங்க நா வந்தப்போ ஒரு பையனும் பொண்ணும் இதே எடத்தில உட்கார்ந்து பேசிட்டிருந்தாங்க. நா ரொம்ப நேரமா நின்னுட்ருந்தேன். இது நானும் என் மனைவியும் காதலிச்ச காலத்திலேருந்து உக்கார்ற இடம். தயவு செஞ்சு எழுந்திருக்கிறீங்களான்னு கேக்க நெனச்சேன். அதுக்குள்ள,அவுங்க பேசறதையே நா உத்துப்பார்த்துட்டு இருக்கிறதா தப்பா புரிஞ்சிக்கிட்டு அவுங்களே எழுந்து போயிட்டாங்க.”

பதில் இல்லை. இறுகிய பாறை. தொடுதல்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏறக்குறைய இரண்டரை மணிநேரம்.

மேகம் பார்த்துப் படுத்துக் கிடந்தவன் எழுந்தான். கைகளில்...பின் முடிகளில் தொட்டுக்கிடந்த மணல் புள்ளிகளைத் துடைத்துக் கொண்டான். தகரக் கிளிசலாய் இடி. ஸ்டீரியோ எஃபெக்டில் அருகில் வந்து தூரம் போனது.

செல்வி! இப்போ பேசுவியா மாட்டியா?

.....

செல்வி

.....

ஏய்

.....

ஏய்

.....

என் செல்லப் பெண்டாட்டி

.....

என்னெ பார்றா

......

பாக்க மாட்டியா

......

ஏய்

......

எங்கண்ணுல்ல

.......

என் செல்லம் இல்ல

.......

பேச மாட்டியா

......

எப்பவும்

......

ம்?

......

......

......

......

அப்படியெனில் நான் புறப்படுகிறேன் திருமதி செல்வி அவர்களே.

.......

நிஜமா

.......

உண்மையா

.......

பிரபு எழுந்து உதறிக் கொள்கிறான். அவளது கை பிடித்து இழுக்கிறான். ம்கூம்.

அப்போ நீ என்னோட வரப்போறதில்லை.

......

அவன் அமர்ந்து அவளது கைப்பையைத் திறந்து... பர்சை எடுத்து.....

அதிலிருந்து சில்லறைகளைக் கூடத் துடைத்துக் கொள்கிறான். எழுந்து நிற்கிறான். அவள் நிமிரவில்லை.

இப்போ உங்கைல ஒத்தப்பைசா கெடையாது.

.....

நா போயிட்டா திருமதி கோபம் நடந்து தான் வரணும்.

.....

ஏறக்குறைய மூன்று கிலோ மீட்டர்.

......

மழை கட்டாயம் வரும்.

......

போகட்டுமா?

........

போவேன்

.......

போறேன்

.......

போயிட்டேன்

போனவன் சுவடுகளைக் காற்று மெழுகியது.

வீட்டிற்குள் நுழைந்து.... சமையல் அறை... குளியல் அறை... சாப்பிடும் மேசை... தாண்டி படுக்கையில் விழுந்தான்.

வாசல் கதவைத் தாழ்ப்பாள் போடவில்லை. வந்தாள், தண்ணீர் குடித்தாள். ஃபேனுக்குக் கீழ் சரிந்தாள். எழுந்தாள், குளித்தாள். படுக்கைக்குள் வந்து முதுகு காட்டி படுத்தாள்.

எழுந்தான். கால்களை மெல்லப் பிடித்து விட்டான். உதறினாள். விடவில்லை.

ரொம்ப தூரம் நடக்க வச்சுட்டேன்ல்ல!

......

மன்னிச்சிடும்மா.

.....

ப்ளீஸ்

....

மறுபடியும் பிடித்து விட்டான்.

கால்களைச் சுருக்கிக் கொண்டாள்.

மறுபடியும் கால்களை இழுத்து சுகம் படர அழுக்கினான். பாதங்களில் முத்தம்.

எழுந்து அமர்ந்தாள். பார்த்தான். பார்த்தாள். நேருக்கு நேராய்.

என்னெ எதுக்கு இப்பிடி சித்ரவத செய்றீங்க?

என்னடா சொல்ற?

புரியலையா?

என்ன புரியல?

மத்தியானம் நான் எங்க ஆபிஸ்ல வொர்க் பண்ற ஒருத்தரோடு ஸ்கூட்டர்ல போனத... உங்க ஆபிஸ் முன்னால நின்னுக்கிட்டிருந்து நீங்க பார்த்தீங்கல்ல?

பார்த்தேன்.

அது யாருன்னு ஏன் நீங்க கேக்கல?

ஏன் கேக்கணும்?

நீங்க எனக்குக் கணவர்?

நீங்க எனக்கு மனைவி

அதனால?

அதனாலத்தான் கேக்கல. உன்னோட வேலை செய்யிற யாருக்காவது குழந்தை பொறந்திருக்கலாம். அதுக்கு உன்னோட உதவி தேவைப்பட்டிருக்கலாம். அதுக்காக அவசரமாய்ப்போக அவருகிட்ட உதவி கேட்டுக்கலாம்.

......

அதையெல்லாம் போயி நான் எதுக்குக் கேக்கணும்?

......

அப்படி கேக்குற ஆம்பளையா இருந்தா எவ்வளவோ கேக்கலாம். பஸ் ஸடாப்புல யாராவது உன்னைப் பார்த்து சிரிச்சானா? டிக்கட் குடுக்கும் போது கண்டக்டர் ஒரு மாதிரி பார்த்தானா? ஃபைல் நீட்டும் போது மேலதிகாரி உன் கையைத் தொட்டானா? எவ்வளவோ கேக்கலாம். அப்பிடியெல்லாம் கேக்க நான் முட்டாள் இல்லே.

.......

நீ என் மனைவி மட்டும் இல்ல. பெண்.

அடுப்பங்கரையத் தாண்டி இப்பத்தான் உலகம் பார்க்க ஆரம்பிச்சிருக்கிற பெண்.

என்னோட சந்தேகங்களால உன் சிறகுகள முறிக்கிற ஆண் இல்லே நான்.

உற்றுப் பார்த்தாள். குடைந்து நுழைந்தாள். படர்ந்தாள். இறுகினாள். குமுறிக் குமுறி அழுதாள்.

ஏய் என்ன இது.. சின்னக் குழந்தை யாட்டமா..ஏய்..

செல்வி

கூந்தலை வருடி மெல்லத் தட்டிக் கொடுத்தான்.

முந்தானையால் முகத்தைத் துடைத்தபடி எழுந்தாள்.

எங்க போற?

டிபன் செய்ய.

எல்லாம் தயாரா இருக்கு. அதுக்காகத்தான் உன்னைக் கொஞ்சம் காத்தாட நடக்க வச்சேன்.

.....

கால் வலிக்குதா?

முகம் மூடிய கைகளைப் பிய்த்தான். தள்ளினான். விழுந்தாள். கால்களைப் பிடித்து விட்டான். மறுக்கவில்லை.

# உறவுகள்

## ரமழான் சிறுகதை

### ஓட்டமாவடி - அறபாத்



அழுதழுது கண்கள் சிவந்து விட்டன. மனசுக்குள் பிராண்டிக் கொண்டிருக்கும் அந்த வேதனைகள், அவளுக்குள் தகித்துக் கொண்டிருந்தன. நேற்றா இன்றா இந்த உறவுக்கு. ஐந்து வருடங்களாய் காய்த்து, பழுத்து, மணம் பரப்பும் அவள் வாழ்வில் இப்படி அழுதது கிடையாது. நெஞ்சு வறண்டது. வேதனை வியாபித்தது. இன்னும் பெருநாளைக்கான ஏற்பாட்டில் ஊரே மூழ்கிக் கிடந்தது.

மாலை மங்கி, இருள் பரவ ஆரம்பித்திருந்தது. நோன்பு திறப்பதற்கான ஆயத்தங்களில் அவளின் தாய் மும்முரமாய் சுழல்வதும் அவளுக்கு உறைத்தது. பக்கத்து வீட்டில் விளையாடப்போன மகள் முகம் அலம்பிக்கொண்டு உள்ளே வந்தாள். அவளைப்பார்க்க, சுமையாவுக்கு குபு குபு வென்று நீர் வழிந்தது. இன்றுடன் ஆயிரம் தரமாவது கேட்டிருப்பாள், ‘வாப்பா எப்பம்மா வரும்?’ ‘வருவாரும்மா’, என்ற பதிலைத்தான் இவளும் சொல்லிக் கொண்டு வருகிறாள்.

அவள் பித்துப் பிடித்தவளாய் வெளித் தூணில் சாய்ந்து கிடந்தாள். தொட்டுவிடும் தூரத்தில் ஜதை ஜதையாய் பறந்து கொண்டிருக்கும் கிளிகள், ஒய்யாரமாய் கதைகள் பேசி ஒன்றின் மேல் ஒன்று உரசி பறந்து சென்றன. வழக்கமாய் அவள் முற்றத்தில் இருக்கும் வெள்ளை கொக்கு மாமரத்தின் உச்சியில் வாடிப் போய் அமர்ந்திருந்தது. வேலியோரத்தில் அணில்கள் இரண்டு துரத்திப் பிடித்து ஓடித்திரிந்தன.

“என்ன புள்ள இது நோன்போட இப்படி சீறிச்சீறி.... அல்லா அவர்ற மனச மாத்தாமலா போவான்? வா நோன்பத்திற” அவளின் தாய் வந்து உசுப்பும் மட்டும் பித்துப் பிடித்தவளாய் கிடந்தவள் தன் நிலை உணர்ந்து வெட்கப்பட்டாள்.

“சுமையா புள்ள.... சுமையா! உண்ட மச்சான் பொடியன் வந்திருக்கு, என்னண்டு கேளு.” நினைவுகள் அறுபட, சிலிர்த்துக் கொண்டாள், அவருக்கு காய்ச்சல் என்று கேள்விப்பட்டதும், அவளின் உணர்வுகளும், உலுக்கி, உருகுவதைப் போல் இருந்தது. “யா அல்லாஹ் என்னபாடு படுவாரோ? சின்ன தலவலி எண்டாலும் துடிச்சுப் போயிடுவாரு, நீதான் றப்பே நோயக் குணமாக்கு. இந்த ரமழான் மாசத்துல கேட்கிறது தூஆவ நீ மறுக்க மாட்டாய் நாயனே! பெருநாளைக்காவது அவரோட சேர்ந்து வாழ நஸீபு செய்.”

வெளியே வந்தாள். அவளது கணவன் சுஹைறுக்கு ஒரேதம்பி, றிம்சாட் அவள் எதிரே நின்றிருந்தான். “வாங்கதம்பி நானாக்கு எப்புடி இருக்கு?”

“கொஞ்சம் சீரியஸ்தான் மதினி. புள்ளய கேட்காரு, யாது வார நேரம் பேபி எங்கன்னு கேட்காரு. உம்மா சொன்னா பேபிய கூட்டிட்டு வரவாம். காலையில ஹொஸ்பிடல் போகணும், நான் போயிட்டுவாரன்.”

“சரி தம்பி நான் வாரன் எண்டு சொல்லுங்க.” சுமையா ஸஹர் செய்து சுபஹ் தொழுது விட்டு, பாயில உட்கார்ந்தபடியே துஆ கேட்டாள். கண்கள் நீரைச் சொரிந்தன. நெஞ்சம் விம்மிப் புடைத்தது.

பேபியுடன் ஆஸ்பத்திரியை அடைந்த போது, சுஹைர் நினைவு திரும்பி இருந்தான். அபாயக் கட்டத்தை தாண்டி இருந்தான்.

சுமையா கணவனைக் கண்டதும் அழுதே விட்டாள். அவனும் கண் கலங்கினான்.

பேபி தந்தையின் ,அருகே நின்றாள். “பேபி கண்ணு பெருநாளைக்கு உடுப்பு எடுத்தாயாடா?”

“இல்ல நீங்க வந்து எடுத்து தாரண்டு உம்மா சொன்னா. டடி டடி... இன்னும் மூனு நாள்தான் இருக்கு, எப்ப உடுப்பு எடுக்கிறது?”

“டாடி நாளைக்கு வூட்டுக்கு வருவேனாம், உனக்கும்....” அவன் முடிப்பதற்கிடையில் அவள் குறுக்கிட்டு, “உம்மாக்கும் உடுப்பை வாங்குறதாம்,” மழலையின் பேச்சில் அவன் நோய் மறந்து சிரித்தான்.

சுமையா தலைமாட்டில் நின்றிருந்தாள். பிரிந்தவர்கள் சேர்ந்திருக்கின்றார்கள். என்ன பேசுவதென்றே புரியவில்லை. சுஹைர் அவளை அருகே அழைத்தான். அவள் கரங்களை இறுகப் பற்றினான். அதில் இருந்த இங்கிதமும், ஆதரவும் அவளுக்குள் சிலிர்ப்பை ஊற வைத்தன. “ஒன்ன ரொம்ப தண்டிச்சிட்டன் இல்லையா? அதால ஆண்டவனே எனக்கு தண்டனை மாதிரி நோய தந்திருக்கான்”. அவள் மௌனமாய் அவனை வெறித்தாள்.

“ஏன் இன்னும் கோபமா?” ‘இல்லை’ என்று தலையாட்டினாள். பெருநாளைக்கு நம்ம வூட்டுக்குத்தான் வருவன், அல்-ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் இறைவனுக்கே) என்றாள். அவன் கரங்களை விடுத்து தலையை கோதி விட்டாள். விரல்களை பிரித்து சொடுக்கி விட்டாள். நெற்றி முழுக்க அழுத்தி விட்டாள். முந்தானை உயர்த்தி வியர்வை முழுக்க ஒற்றி விட்டாள்.

“நேரம் முடிஞ்சி; கிளம்புங்க”- வார்டன் கூறிக் கொண்டே சென்றான். “போய்ட்டு வாரன்,” குனிந்து அவன் நெற்றியில் உதடுகளால் ஒத்தடம் கொடுத்தாள். வெளியே வந்தபோது மனம் ஒரு பூவின் இதழாய் மலர்ந்திருந்தது.

இன்னும் இரண்டு நாளில் அவள் அவன் அணைப்பில் கிடப்பாள். பெருநாள் இனி அவர்களுக்கு திருநாள்தான். வீதிக்கு வந்து ஆட்டோ பிடித்து விலாசம் கூறி உட்கார்ந்தாள். ‘காதல் சிறகை காற்றினில் விரித்து வான வீதியில் பறக்கவா,’ அடிக்கடி முணுமுணுக்கும் பாடல் அவளையறியாமலே உதடுகளில் இறங்கியது ஆட்டோ டிரைவர் திரும்பிப் பார்த்தான். வெட்கத்தில் அவள் முகம் சிவந்திருந்தது.

# சுடுகாட்டு மண்!

ஹப்புத்தளையூர் எ.ப. வெணட்டுமார்



கந்தசாமியால் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியாமலிருந்தது.

இதயத்தில் எங்கோவோர் மூலையில் குத்திப்பெயர்ப்பதைப் போன்ற உணர்வு...! கண்கள் லேசாக கலங்கியிருந்தன. ஆனாலும் அவனால் கதறி அழ முடியாமலிருந்தது.

இத்தனைக்கும் காரணமில்லாமலில்லை. கந்தசாமி இந்த தோட்டத்தில் கூலிவேலை செய்யும் ஒரு தொழிலாளி.

அவனுள் இன்னும் கடந்த காலங்களின் பசுமையான நினைவுகள் இதயமெல்லாம் அப்பியிருந்தது.

அடைமழை கொட்டிக்கொண்டிருக்கும் பொழுதுகளில் கூட சோம்பி முடங்கிக்கிடக்காமல் முண்டாசு கட்டி மருந்தடிக்கவும், புல்லு வெட்டவும், கொழுந்து பறிக்கவும் புறப்பட்டு போய் பழக்கப்பட்டவன்.

அப்படிப்பட்ட அவன் மேல் தோட்டதுரை கூட எப்போதாவது வேலையில் குறை கூறிய தேயில்லை. லயத்தில் எந்த பிரச்சினையாக இருந்தாலும் கந்தசாமி தான் அங்கு நடமாடும் நீதிபதி.

அந்த தோட்டத்தில் அவன் பேச்சிக்கு ஒரு மதிப்பும் சலுகையுமிருந்தது. காரணம் அவனது அயராத கடுமையான உழைப்புதான்.

அடுத்தடுத்து பிறந்த ஆணும், பெண்ணுமாக ஆறு குழந்தைகளுக்கு தந்தையானவன்.

அன்றொரு நாள் காச்சலால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தவனை வேலைக்கு போக விடாது தடுத்தாள் அவன் மனைவி சுந்தரி.

“ம்.. நல்லா இருக்குது சுந்தரி! நீ சொல்லுற கத...! பேசாம கொஞ்சம் மல்லித்தண்ணிய சுடவச்சி குடு. வேலைக்கு போகணும்” என்றதும் மனைவி மௌனமாகிப்போனாள்.

அவன் தன்னுயிரை விட மலையகத்தையும், அங்குள்ள தேயிலைகளையும் மதித்தான்.

ஆனால், அப்படிப்பட்ட அவனுக்கு இன்று நம்ப முடியாத அதிர்ச்சியொன்று.

“கந்தசாமி அண்ணே... உங்க அப்பாவையும், ஆத்தாவையும் பொதச்ச சுடுகாட்டு மண்ணுல.. தேயில கன்னு போட போறாங்களாம்..! இன்னைக்கு நம்ப தோட்ட தொரையும், கம்பனிகாரவங்களும் வந்து பார்த்திட்டு போயிருக்காங்க...! நாளைக்கு பெரட்டுல துப்புறவுபண்ண ஆளு போடுவாங்க போல தெரியிது..!” அடுத்த லயத்து சின்னராசுதான் சொல்லிவிட்டுப் போயிருந்தான்.

அவனால் அதை எப்படி தாங்கிக்கொள்ள முடியும்? தனது பெற்றோரை அவன் உயிரென மதித்தான்.

அதைவிட இறந்துபோன அவர்கள் இந்த தோட்டத்திற்காகவும், தேயிலைக்காகவும் எவ்வளவு பாடுபட்டார்கள் என்பதனையும் அவனறிவான்.

அவர்கள் சிந்திய வியர்வைத் துளிகளை மறப்பானா அல்லது இரத்தத் துளிகளை மறப்பானா?

மறக்கமுடியாது. அவனால் மறக்கவே முடியாது. அவர்கள் உயிரிழந்தது இதே தேயிலைக்காக பாடுபட்டு தான்.

இந்த மண் அவர்களை உரமாக்கிக் கொண்டது. அப்படி உத்தமர்களை புதைத்த இந்த நிலத்தில் தேயிலைச் செடிகள் பயிரிடுவதா?

நினைத்து, அவன் ரொம்பவும் கலங்கிப் போயிருந்தான். “சுந்தரி... ஏம் புள்ள நான் ஒன்னு சொல்லுறேன். என் உயிரே போனாலும் சுடுகாட்டு மண்ணுல தேயில போட விடவேமாட்டேன்!” சொல்லும் போது கூட அவன் குரல்கரகரத்து விழி கசிந்திருந்தது.

ஆனால் காலம் மட்டும் யாருக்காகவும் காத்திராமல் ஓடிக்கொண்டேயிருந்தது.

அதில் யாரிடமும், சுடுகாட்டு மண் விசயத்தில் மட்டும் அவன் பேச்சு எடுபடவேயில்லை.

துரையும், கம்பனிக்காரர்களும் அடித்துச் சொன்னார்கள் “சுடுகாட்டு மண்ணில் தேயிலை பயிரிட்டே தீருவோம்..!” என. முடிவில் தேயிலை பயிரிடவும் பட்டது.

அன்று ஓர் வெள்ளிக்கிழமை. அந்த சுடுகாட்டு மண்ணில் வளர்ந்த தேயிலையில் பெண்கள் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கு ஒரு மூலையில் கந்தசாமி அந்த தேயிலைச் செடிகளை வெறிக்கப் பார்த்தபடி தனிமையில் சிரித்துக் கொண்டிருந்தான்.

“பாவம்டி... கந்தசாமி அண்ணே..! அவுங்க அப்பா, ஆத்தா பொதச்ச சுடுகாட்டு மண்ணுல எப்ப தேயில போட்டாங்களோ அன்னையில இருந்து பைத்தியமா அலையிராரு...!” பெண்கள் பேசிக்கொண்டது அவனுக்கு விளங்கியதோ என்னவோ? மீண்டும் அவன் பலமாக தனிமையில் சிரிக்கத் தொடங்கியிருந்தான்.

# இலக்கிய நயம்

# மூன்றால் முடிந்தது

தருவது - ரசிகன்



கண்ணுக்கெட்டிய தொலைவு வரை பல்லவர் படைகள் பரந்து தெரிந்தன.

ராஜபல்லவனுக்கு தோள்கள் புடைத்தன. நெஞ்சுக்குள் பெருமிதம் கோப்பையில் நிரம்பிய மதுபோலானது.

"படை இங்கே, தடை எங்கே? விடை சொல்ல யார் துணிவர்?! புயல் எழுந்தது போல் இருக்கும், நம் படை எழுந்து பொருதும் போது! கொடும் இடிகேட்டு நாகம் துடித்தது போலிருக்கும் பகைவர் இடுப்பொடிந்து ஓடும் போது!"

ராஜ பல்லவன் உரத்து நகைத்தான். படைமுழுவதும் உத்தரவுக்காக காத்து நின்றது.

"எதிர்ப்பவர் சிரம் அறுங்கள்! வசை சொல்வோர் நாவறுங்கள்! களம்மீது நம்பகைவர் தலைகளை பந்தாடுங்கள்! இரத்தமில்லாமல் வெற்றியில்லை! பிணங்கள் குவியாமல் போருமில்லை! வீரம் விளைகின்ற போர்க்களத்தில், உயிர்கள் உரமாக வில்லையானால் வெற்றிக் கனி பறிக்க முடிவதுண்டோ?"

ஆவேசம் வந்தவனாய் ராஜ பல்லவன் கர்ஜித்தான்.

"தென்திசை நோக்கி புயல் நகரட்டும்! பட்டொளி வீசி நம் கொடி பறக்கட்டும்! வெற்றிச் செய்தியை முரசம் கொட்டட்டும்!"

படை நகர்ந்தது.

ராஜ பல்லவன் ஆலோசனை மண்டபத்தில் தனியாக இருந்தபோது, அமைச்சர் ஆவுடையார் தனது குரலை சரிப்படுத்த செருமிக்கொண்டு, மெல்லிய வார்த்தைகளால் சொன்னார்.

"மன்னா ஒன்று சொன்னால் கோபப்பட மாட்டீர்கள் அல்லவா?"

சிறு குன்றுபோல திடமான தேகத்துடன் இருந்த மன்னன் நிமிர்ந்து பார்த்தான். ஒரு கண்ணில் பழுதிருந்தது. போரில் பட்ட வடு! தெளிவாக இருந்த மறு கண்ணால் 'என்ன' என்றான். பேசும் கண்!

"நாம் வரம்பு தாண்டுகிறோமோ என்று அச்சமாக இருக்கிறது."

"என்ன வரம்பு?" கணீரென்ற குரல்.

"நம்மை எதிர்த்து வெல்லத் தவறினால் தாங்கள் நிலைத்திருக்க முடியாது என்று எதிரி நாடுகள் நினைத்து விட்டால்...."

"விட்டால்?"

"ஒன்று சேர்ந்து விடுவார்கள்!"

ராஜபல்லவன் முறைக்கிறானா சிரிக்கிறானா என்று தெரியவில்லை. இரண்டுக்கும் பொதுவாக ஒரு பார்வை பார்த்துவிட்டு நகைத்தான். சட்டென்று பாதியில் நிறுத்தி;

"சிங்கத்தின் முன்னால் சிறு நரிகள் என்ன செய்ய முடியும்? சூறைக்காற்றில் சிக்கிய சருகுகள் போல சிதறி ஓடும்!"

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு."

"வெட்டியெறிந்தால் போச்சு!"

"அலட்சியம் கூடாது மன்னா!"

"என் இலட்சியத்தின் வெற்றியே எதிரிகளை அலட்சியம் செய்வதில்தானே இருக்கிறது."

"இதுவரை பெற்ற வெற்றிகள் போதாதோ?"

"போதும் என்பவன் பேடி!"

"ஆனாலும் மன்னா...."

"நிறுத்தும்! உமது முடியிலே நரை! அது போடுகிறது உமது வீரத்திற்கு தடை!"

சினந்தான் மன்னன்.

விலகி அகன்றார் அமைச்சர்.

★ ★ ★

சேரர் படை சரணடைந்தது என்று செய்தி வந்தது.

துள்ளினான்- கிண்ணத்திலே மதுவை அள்ளினான்.

வெற்றியைக் கொண்டாட வேண்டாமா? எட்டி நடந்தான், எட்டடி தூரத்தில் பள்ளியறை! கதவில் தோளால் முட்டித் தள்ளினான்.

எதிரே தெரிந்தது மஞ்சம்! மஞ்சத்தில் கிடந்தாள் உடல் வனப்பில் பஞ்சமேயில்லாத பாவை.

மேலாடை நழுவியிருந்தது. அது அவளாகவே செய்து கொண்ட சாகசம்.

இடைக்கு மேலிருந்த தாமரை மொட்டுக்கள் அவன் விழிக்கு விருந்தாகின.

"தங்கத் தாம்பாளத்தில் இரண்டு மாங்கனி! கொவ்வைச் செவ்வாயில் சுரக்கும் தேன் துளி! கொல்லும் விழிகளில் மதன பேரொளி! யாரடி நீ இன்பத் தேன்கனி?"

கட்டிலில் கிடந்தவள் நகைத்தாள். பின்னர் இதழ் அசைத்தாள்.

"எந்த மரத்து மாங்கனி என்றறிந்துதான் மன்னர் சுவைப்பாரோ? எந்த ஊர், என்ன பெயர் என்று தெரிந்த பின்னர்தான் மன்னர் அணைப்பாரோ? காணிக்கையாக வந்த பரிசை கேள்விக் கணைகளால் துளைக்க மன்னர் நினைப்பாரோ?"

அவள் பேசிய விதமும், மன்னர் கவனிக்க வேண்டும் என்பதற்காகவே முழுவதுமில்லாமல் பாதி மட்டுமே அடிக்கடி மேலாடையை சரி செய்து கொண்ட முறையும், உடலை இறுக்கமாய் தழுவியிருந்த மெல்லிய பட்டாடையில் வெளிப்பட்ட அழகுகளும், மேற்கொண்டு சிந்திக்க விடாமல் ராஜபல்லவன் சித்தத்தைக் கட்டிப் போட்டு விட்டன.

மஞ்சத்தில் சென்றமர்ந்தான். பஞ்சு போல இருந்த அவள் பாதங்களை எடுத்து தன் மடியில் வைத்துக் கொண்டான். விரல்களை நீவிவிட்டான்.

"வித்தை உங்கள் விரல்களில் தெரிகிறது. எனினும் வேதனையாகவும் இருக்கிறது." என்றாள். இப்போது மேலாடை முழுவதும் மாயமாகியிருந்தது.

"என்ன வேதனை?"

"பாராளும் மன்னன் ஒரு பாவையின் பாதம் வருடுவதா என்று!"

"மஞ்சத்திற்கு வரும் போது மகுடத்தை கழற்றிவைத்துவிட்டு வருவது அதற்குத்தானே! பேதம் இல்லாத களம் இது ஒன்றுதானே! இங்கே நீ சொல்வதே வேதம்! நீ தருவதே ஞானம்! மஞ்சம் குலுங்கும் ஓசைதானே மன்மத கானம்! நீ என் வானம். நான் உன் மேகம்! மூடிக்கொள்ள வேண்டும் போல வருகிறதடி மோகம்! இதுதானே நான் தேடிய தேகம்!"

அவள் வில்லாக வளைந்தெழுந்து, இதழ் மொட்டால் மன்னன் உதடு தொட்டாள்.

"தேன் சுவையோ? தேவி, உன் தேன் சுளை இதழ் சுவையோ? மான் குலத்தில் உதித்தவளே; என்னை மார்பணைத்துக் கொள்ள வந்தவளே; நீ யாராயிருந்தால் எனக்கென்ன? இன்பத் தேராய் இருந்தால் போதுமடி! இன்ப உலாதான் எனக்கு சொர்க்கமடி!"

மன்னன் தழுவினான். மங்கை மார்புகள் எதிர்த்துப் பணிந்தன.

இடதுகரம் உயர்த்தி மன்னன் முதுகை அழுத்திக்கொண்டாள். வலது கரம் பஞ்சணை விரிப்புக்கள் எதையோ தேடிக்கொண்டிருக்க, இதழ்கள் மன்னனுக்கு புதுப் பொருள் சொல்லிக் கொண்டிருக்க,

வலது கரம் பஞ்சணை விரிப்பில் இருந்து வெளிப்பட்டபோது, உயிர் எடுக்கும் குறும் கத்தி அதிலிருந்தது. அதில் விஷம் பூசப்பட்டிருந்தது;

மன்னன் தன் உதடுகள் செய்த வரத்தை நினைத்து களிப்பில் ஊறிக்கொண்டிருக்க;

நடு முதுகை குறிவைத்து அவள் கத்தியை உயர்த்தி இறக்கியபோது,

ஒரு கரம் அவள்மணிக்கட்டை பிடித்து நிறுத்தியது.

"நினைத்தேன் சரியாகிவிட்டது" என்றார் கரத்திற்கு உரிய அமைச்சர். திகைத்து எழுந்த மன்னன் ஒரு நொடியில் சகலமும் புரிந்து கொண்டான்.

"யாரடி நீ?" என்றான்.

"மகர நாட்டவள்" என்றார் அமைச்சர்.

"என்ன பகை?"

"மகர நாடு நம் கட்டுப்பாட்டில் இருக்கிறது!"

"தெரியும். மேலே சொல்லுங்கள்!"

"கட்டுப்படுத்தக் கருதி வெட்டிப் போடப்பட்ட வீரர்களில் இவள் தந்தையும், சகோதரனும் அடக்கம்!"

"ஓ. பழிவாங்கும் படலமா? என்ன துணிச்சல்?"

"துணிச்சல் அல்ல மன்னா! உமது பலவீனம். காமத்தால் ஏற்பட்ட உமது சிறுமை சித்தத்தை மறைத்துவிட்டது. வீரம் இருந்தும், அளவற்ற சேனையிருந்தும், உமது முடிவு நான் மட்டும் தகவலறிந்து தலையிட்டிருக்காவிட்டால் யாராலும் தடுக்க முடியாமல் போயிருக்கும்."

மன்னன் யோசித்தான்.

"இவளை விடுவிப்பதா? விலங்கிடுவதா நீங்களே சொல்லுங்கள் அமைச்சரே!"

"அதற்கு முன்னர் தாங்கள் மூன்றை விட்டுவிடவேண்டும். தவறினால் தங்கள் முடிவை அந்த மூன்றுமே நிச்சயம் செய்துவிடும்!"

"அது என்ன மூன்று!"

"சினம்-செருக்கு-சிறுமை. முன்னது இரண்டும் வெற்றிப் போதையால் வருவது. மூன்றாவது காமம் போன்ற வெறியால் வருவது! மூன்றும் இல்லாது போனால் உம் புகழ் ஓங்கும்!" மன்னன் அமைச்சரை தழுவிக் கொண்டான்.

**"செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்**
**பெருக்கம் பெருமி நீர்த்து."**

*அதிகாரம்-44. குறள்-431*

## குறுக்கெழுத்துப் போட்டி இல—138

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | |
| 3 | | ■ | 4 | | | |
| | ■ | 5 | ■ | 6 | | ■ |
| ■ | 7 | | | | ■ | 8 |
| ■ | 9 | | ■ | | 10 | |
| 11 | | | | ■ | ■ | |
| | | ■ | 12 | | | |

### இடமிருந்து வலம்

01. போர்முனையில் முக்கியமான பங்கேற்பவர்களில் ஒருவர்.
02. குடும்பத்தலைவியர்க்குத் தலையிடி கொடுப்பதற்கே அவதரித்தவள்.
03. பெரிய விருட்சத்திற்கு இவை அவசியம், அதேபோல் அரசியல் கட்சிகளுக்கும் முக்கியம்.
04. குற்றேவல் புரிவோரையும் இப்படிக் குறிப்பிடுவார்கள்.
07. பக்கத்தில் இருப்பவர்களின் வாயினுள் இது இருக்குமானால் நமது வாயும் குறுகுறுக்கும்.
10. திருமால் குடையாகப் பிடித்தது கோவர்த்தன.....யை.
11. இரவில் உணவு உண்ணமறுக்கும் குழந்தைகளுக்கு இதனைக் காட்டி ஊட்டுவார்கள்.
12. அக்கறையின் மறுசொல்.

### மேலிருந்து கீழ்

01. திரௌபதியை மானபங்கப்படுத்தத் துணிந்த துச்சாதனன் இதனைக் கையில் பிடித்தான்.
02. நோபல் பரிசு வென்ற பேரறிஞர்.
05. சுறுசுறுப்புக்கு இதுவே சிறந்த உதாரணம்.
06. பாம்பை வசீகரிக்கும் சக்தி இதற்குண்டு.
08. வயதில் முதிர்ந்தவர்களுக்கு இளையவர்கள் தரவேண்டியது.
09. தானியமாகவும் கொள்ளலாம்; தடியாகவும் கருதலாம்.
11. வாஞ்சையைக் குறிப்பது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 10.02.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-138
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-136ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பொ | ன் | ■ | 2 உ | ளு | ந் | 3 து |
| ற் | ■ | 4 க | டு | கு | ■ | ம் |
| 5 கி | ரா | ம | ம் | ■ | 6 பொ | பி |
| ழி | ■ | ண் | பு | ■ | றா | ■ |
| ■ | 7 அ | ட | ■ | 8 அ | மை | தி |
| 9 கு | வ | ல | ய | ம் | ■ | ■ |
| ■ | ல் | ம் | ■ | 10 மா | லு | மி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 136இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. ரதி குமரகுருபரன், கொழும்பு-5.
2. எஸ். புவனேஸ்வரன், திருகோணமலை.
3. எம். நயீம், நாவலப்பிட்டி.
4. திருமதி. எஸ். நெய்னா, புத்தளம்.
5. செல்வி. என். புனிதவதி, பண்டாரவளை.
6. பி. செந்தில் குமரன், வவுனியா.
7. என். மௌலானா, மொரட்டுவ.
8. நோனா றிசானா இசார்தீன், ராகம.
9. திருமதி. ஜெ. காயத்திரி, மட்டக்களப்பு.
10. எஸ். தயாபரன், அவிசாவளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

**★உலகக் கோப்பையை பாகிஸ்தான் இம்முறையும் பெற்றுச் செல்லுமா?**

என்.சர்த்தார், புத்தளம்.

*92 இல் ஒரு இம்ரான்கான் இருந்தார். கட்டுப்பாடான அணி; கச்சிதமாக வெற்றியை குறிவைத்து கிண்ணத்தைப் பிடித்தது. இம்முறை சந்தேகம்தான்.*

□□

**★உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகளிலும் மழை பெய்து வேகத்தை தடை செய்யுமா? அல்லது காலநிலையை கவனித்துத்தான் ஏற்பாடு செய்திருக்கிறார்களா?**

வி.ராகவன், பதுளை.

*ராகவன்! உங்களைப் போன்ற இரசிகர்களின் வெறுப்புக்கு தீனி போடாமல் ஒரு விதி செய்து விட்டதாகக் கேள்வி. மழையால் ஆட்டம் தடைப்பட்டால் நிறுத்திவிட்டு மறுநாள் புகுந்து விளையாடுவார்களாம்.*

□□

**★சாள்ஸ்-டயானா தம்பதியினர் இப்போதும் விவாகரத்து செய்ய தயங்குவதன் மர்மம் என்னவோ?**

கே.உதயலட்சுமி, கலஹா.

*இருவருமே லாப நஷ்டக் கணக்குப் பார்த்து முடிக்கவில்லையாம். முடிந்தபின் முறித்துக் கொள்வார்கள்.*

□□

**★எம்.ஜி.ஆர். இப்போதும் உயிரோடிருந்தால்?**

ஆர்.செல்வமதி, கண்டி.

*நஷ்டம் செல்விக்குத்தான்.*

□□

**★ஐந்து தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டுள்ளதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**


பா.பரசுராமன், வத்தளை.

*இதற்கு முன்னரும் இப்படி பல ஒற்றுமை முழக்கங்களை செவி வாங்கியிருக்கிறது. அடடா... என்று வியப்பதற்கிடையில் ஒற்றுமைக் கோட்டை மணல் கோட்டையாக வீழ்ந்து போனது. எனினும் வரவேற்று வைப்போம்!*

□□

**★தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசியல் தீர்வு சட்ட நகலைப் பற்றி கப்சிப்பாக இருக்கிறார்களே! கவனித்தீரா சிந்தியா!**

மா.ஞானசேகரன், மட்டக்களப்பு.



*ஆக்கிக்கொடுத்தவர் அவர்களில் ஒருவர்தானே! ஆக்கியும் கொடுத்துவிட்டு ஆ...ஊ....கூ.... என்றால் அம்மா கோபிப்பாரில்லையோ!*

□□

### பெண்களை வர்ணிக்கலாமா?

**★பெண்களை வர்ணித்து எழுதுவது தவறா? இல்லையா?**

எச்.என்.நசீர், கொழும்பு-06.

*அழகை அழகென்று வர்ணிப்பது தவறில்லை. பெண்ணிடம் இருப்பது வெறும் அழகு மட்டும்தான். பெண்புத்தி பின்புத்தி என்றெல்லாம் எழுதுவதும், கேலி செய்வதும் தான் தவறு. முரசு அப்படியான ஆக்கங்களை வெளியிடுவதில்லை என்று தெரியும் தானே!*

□□

**★சித்திரைக்கு முன்னர் சமாதானம் பிறக்குமா?**

ஏ.கென்னடி, கல்முனை.

*வெற்றிக் கோப்பையை தூக்கிக்காட்டினால்தான் மரியாதை என்றரீதியில் இரு தரப்புமே வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறது. ஆதலினால் சித்திரை வந்தாலும் போர் நித்திரைக்குப் போகாது. சமாதானம் முத்திரையும் பதிக்காது. இங்கே சமாதானக் கோஷம் வெறும் முகத்திரை மட்டும்தான். மெல்ல அகற்றிப் பார்த்தால் போர் முகம் தெரியும். அதுதானுங்கோ நிஜமுகம்.*

□□

**★டியர் சிந்தியா! தமிழுக்கு அமுதென்று பெயர் என்பதை தமிழர்களே மறப்பது ஏனோ?**

மு.பவானி, நீர்கொழும்பு.

*அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சென்று நினைக்கிறார்களோ?!*

□□

**★இந்தியாவில் பிரபலமாக இருக்கும் சந்திரசாமிக்கு மந்திர தந்திரம் தெரியுமா?**

எம்.எம்.வாகிட், மருதானை.

*தெரிந்த மந்திரம்: பமீலா நம! தெரிந்த தந்திரம்: பமீலா அஸ்திரம்!*

□□

**★டியர் சிந்தியா! IQ என்றால் என்ன?**

வி.சோதிநாதன், அவிசாவளை.

*ஒருவருக்குள்ள அறிவுத்திறன்! இன்னொன்றும் இருக்கிறது. அது EQ. அறிவுத்திறன் உணர்வுகள் மீது செலுத்தும் ஆளுமை. அறிவிருந்தால் மட்டும் போதாது. அதனை சரியாக பிரயோகிக்கவும், கட்டுப் படுத்தவும் தெரிந்திருப்பதை வைத்து EQ அளவை மதிப்பிடலாம். உங்கள் EQ எப்படி சோதிநாதன்?*

□□

**★தற்காலத்தில் காதல் தோல்வி சகஜமாகி வருகிறதே?**

கு.அம்பிகா, வவுனியா.

*மனசாரக் காதலிக்காமல், மின்சாரக் காதலாக இருப்பதால் 'பவர்' கட்டானவுடன் போய்விடுகிறது.*

□□

**★நடிகை நக்மாவின் முகவரியை சொல்லுங்கள்?**

வா.மகேசன், மொரட்டுவ.

*இவ்விடம் முகவரிகள் விநியோகிக்கப்பட மாட்டாது.*

□□

**★மூன்றாவது மத்தியஸ்தம் தொடர்பாக நீர் என்ன நினைக்கிறீர்?**

எம்.ஜமால்டீன், களுத்துறை.

*பிரச்சனையைத் தீர்க்கும் விருப்பம் இங்கு பேச்சில் ஈடுபடுபவர்களுக்கு இருந்தால், எந்த மத்தியஸ்தமும் இலகுவாக இருக்கும். இல்லாவிட்டால் இழுத்தடிப்புத்தான்!*

□□

**★ஜெயலலிதாவை கடவுளோடு ஒப்பிடும் அவரது கட்சிக்காரர்களது செயல் பிழையல்லவா?**

எஸ்.சுமித்திரா, கண்டி.

*அதொன்றுமில்லை சுமித்திரா, தங்கள் தலைவியை நேரில் காணமுடியாத அவரது கட்சித் தலைவர்கள் மரியாதையாக கேலி செய்கிறார்கள். கடவுளையும் காணமுடியாதல்லவா?*

□□

*★அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களின் தயக்கத்திற்கு என்ன காரணம்? குண்டு வெடிக்கும் என்றா?*

பி.அப்பாஸ், ஹட்டன்.

*குற்றமுள்ள மனம் குறுகுறுக்கும்.*

□□

**★பிரபுதேவா-நக்மா 'லவ்பேட்ஸ்' எப்படி?**

எஸ்.அன்வர் சதாத், பாலமுனை.

*காதலன்-புயல்- இது-மழை. புயல்தானே வேகம்!*

# இராமாயணம் அங்கம் 18

இராமா.....இராமா.....இராமா...! என்று மூன்று முறை கூவி அழைத்து விட்டு மயக்கமுற்று தசரதர் தரையில் விழுந்ததும் உண்மையில் கைகேயி பயந்து போய்விட்டாள். மன்னருக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று அவள் மனம் சஞ்சலப் பட்டது. அவளுடைய பார்வை, திரையின் பின்புறம் நின்று கொண்டு தனது சைகைகள் மூலம் கைகேயியை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த மந்தரையின் மேல் பட்டது. அவள் தன்னிடம் வருமாறு கைகேயியை அழைத்தாள். அருகில் சென்றதும், "பெண்ணே! மன்னர் போடும் வேடத்தில் நீயும் மயங்கிவிடாதே! இதுமட்டுமல்ல, இராமனைக் காட்டுக்கனுப்பினால் தன் உயிரே போய்விடும்.... "நீயே விதவையாகி விடுவாய்" என்று கூட எதையாவது சொல்லி உன்மனதை மாற்றப்பார்ப்பார். நீ எதற்கும் விட்டுக் கொடுத்து விடாதே! இப்பேற்பட்ட மாபெரும் இராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தி, எத்தனையோ போர் முனைகளில் வெற்றி கண்ட வீராதி வீரர், இதற்குப் போய் மயக்கமுற்று விழுந்து விடுவாரா? இதனை யோசித்துப் பார்! மன்னர் உண்மையில் மயக்கமடையவில்லை; வெறுமனே கண்களை மூடிப்படுத்துக்கிடக்கிறார். சற்று முன் நீயே நாடகமாடினாயே! அது போலத்தான் உன் மனதினை மாற்ற மன்னர் போடும் நாடகமடி! அதோ! பார்....! அவருடைய உடல் அசைகிறது. ஓடிப் போ...! நான் சொன்னவற்றை மறந்துவிடாதே!" என்றாள்.

## வணங்காமுடி மன்னர்.....

'விதவையாகி விடுவாய்' என்று ஒரு வார்த்தை மந்தரையின் வாயிலிருந்து உதிர்ந்த போது கைகேயி ஒரு கணம் துணுக்குற்றாள். இருப்பினும் கூனியின் கதைகளை முழுமை யாக நம்பியவளாக மன்னவர் முன்போய் நின்றாள். தசரதரும் சற்றுக் கண்திறந்தார். தான் அதுவரை கண்டது கெட்டகனவாகத் தான் இருக்குமோ என்று கூட எண்ண லானார். ஆனால் தலைவிரி கோலமாக- விகார உருவமுடன் தன் எதிரே நின்ற கைகேயியைக் கண்டதும், தான் கண்டது கனவல்ல, நனவுதான் என்பதை உணர்ந்து கொண்டார்.

### பண்பற்றவனா பரதன்?

"கைகேயி! என் அன்புக்குரியவளே! உன்னை இன்று வரை எந்நாளிலும் கடிய வார்த்தைகள் கூறி இம்சித்தவனல்லவே! உனக்கு எத்தகைய குறையும் வைக்கவு மில்லையே! உன் மீது வேறு எவரிடமு மில்லாத அளவு காதல் கொண்டிருப்பதை நீ நன்கு அறிவாய். நீயும் இன்றுவரை என்



மனம் நோக நடந்ததில்லையே! இராமனிடத் திலும் அவன் அன்னையைவிட அதிக வாஞ்சை கொண்டவள் நீ! அப்படியிருக்க அவனுக்கு முறைப்படி சேர வேண்டிய இளவரசுப் பட்டத்தைக் கொடுக்கலாகாதென் கிறாய். மூவுலகம் போற்றும் அயோத்தி மாமன்னன் தன் கடமையிலிருந்து தவறிவிட் டான் என்ற அவப் பெயரை ஏன் ஏற்படுத் தப் பார்க்கிறாய்? பரதன் குணம் உனக்குத் தெரியாதா? பண்பு நெறி பிறளாத பரதன் தன் அண்ணன் இராமனிடம் வைத்துள்ள பாசத்தை அறிய மாட்டாயா? இராமனிடம் பரதன் செலுத்தும் பக்தியை நீ தெரிந்த தில்லையா? சின்னஞ்சிறுவர்களாக அவர்கள் விளையாடித்திரியும் காலத்திலும்கூட இராமன் நின்றிருந்தால் பரதன், இலக்குமணன், சத்துருக்கன் ஆகிய மூவரும் ஆசனங்களில் அமரமாட்டார்களே! இராமன் முன் இருக்கைகளில் அமரக் கூச்சப்பட்டு ஒதுங்கி ஓரமாக நிற்பார்களே!

இத்தகைய பண்பு நிறைந்த பரதன் தனது அண்ணன் இராமன் முன் அரியணை யில் ஏறி அமர எவ்வாறு மனம் துணிவான்? தனது தம்பி அரியணை ஏறி அரசாள வேண்டும் என்று விரும்பினால் இராமன் எதுவித மறுப்பும் கூறாமல் மனமகிழ்ந்து இராச்சிய பாரத்தை தம்பிக்கே தடை எதுவு மின்றி அளித்து விடுவானே! ஆனாலும் உன் மகன் பரதன் இதற்குச் சம்மதிப்பானா? இராமனுக்கு பட்டாபிஷேகமென்றால் பெரு மகிழ்வோடு முன்னின்று அலுவல்களை முடித்துவைக்க பரதன் துடிப்பானே! உன் மகனின் குணம் உனக்கே தெரியவில்லை. இதனால் தான் நீ இத்தகைய முடிவுக்கு வந்திருக்கிறாய்!

"கைகேயி! உண்மையில் நீ...நீயாக இந்தக் கோரிக்கையை வைக்கத் துணிந்திருக்க மாட்டாய். உன்னுடைய சுபாவம் எனக்கு நன்கு தெரியும். உன்னுடைய வெள்ளை மனத்தில் யாரோ விஷம் தடவிவிட்டார்கள்."

இவ்வாறு அழுது புலம்பி, திக்கித் திணறி தசரத மன்னர் கைகேயியின் காலடியில் கிடந்தவராகப் புலம்பினார். ஆனால் அவளு டைய காதுகளின் வழி புகுந்து கருத்தினில் அமர்ந்து கொண்ட கூனியின் குரலே இடை விடாது ஒலித்துக் கொண்டிருந்தது. கொடிய விஷப் பாம்பு சீறிப் பாய்வது போல் கைகேயி சீறினாள்.

### விஷத்தை விடக் கொடிய வார்த்தைகள்.

"சூரிய வம்சத்திலுதித்த மன்னர்கள் எவரும் கொடுத்த வாக்கிலிருந்து தவறியதாக சரித்திரமே கிடையாது. மூத்த மகனுக்குத்தான் பட்டம் கட்ட வேண்டும் என்று சட்டத்தைக் கடைப்பிடிக்கத் துணிந்த மன்னவரானால்; என் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியையும் எனக்களித்த இரு வரங்களையும் நிறைவேற் றாத இரு குற்றங்களுக்கும் ஆளாகுவீர்கள். அது மட்டுமல்லாமல் நான் கோரிய இரு வரங்களையும் நீங்கள் தரமறுத்தால் நான் கொடிய விஷத்தைப் பருக ஆயத்த மாகியுள்ளேன். இதோ எனது இடது கை விரலில் இருக்கும் கணையாளியினுடன் இணைந்த கூட்டுக்குள் கொடிய விஷம் இருக்கிறது. மூடியைக் கழற்றிவிட்டு அவ்விஷத்தின் ஒரு துளியினை நாக்கினில் பட விட்டாலே என் உயிர் பறந்து விடும். 'மனையாளுக்குக் கொடுத்த வரங்களை மன்னன் தரமறுத்ததனால் மரணமானாள்' என்ற புகழுடன் தொடர்ந்து மகிழ்ச்சியாக ஆட்சி புரியுங் கள். இதுதான் எனது கடைசிக் கோரிக்கையும் எச்சரிக்கையுமாகும்!"

விஷத்திலும் கொடிய வார்த்தைகளைக் கொட்டிய கைகேயி முன்னை விட வைராக்கியம் கொண்ட வளாக மாறியதும் தசரத மன்னரின் உடலிலும் உள்ளத்திலும் உறுதி குலைந்து போய்விட்டது. கைகேயியின் கோரிக்கை முதன் முதலில் அவருக்கு அதிர்ச்சியை அளித்தது. எனினும் அக்கோரிக்கை எப்படியாவது பின்வாங் கப்பட்டுவிடும் என்ற நப்பாசையில், அதிர்ச்சியி லிருந்து சற்று விடுபட்ட

இராஜகுமாரன்

வராகக் காணப்பட்டார். ஆனால் கைகேயி- பற்று, பாசம், பதிபக்தி போன்ற சகலவற்றை யும் துறந்தெறிந்துவிட்டு பிடிவாதக்காரியாக நிற்பதைக் கண்டு மேலும் தளர்ந்து போனார். 'இராமன் காடேக வேண்டும்' என்ற கைகேயி யின் கோரிக்கைதான் தசரத மன்னருடைய உயிரையே ஊசலாட வைத்துவிட்டது. மயங்குவதும் சற்று நேரத்தில் தெளிவு ஏற்படுவதுமாகக் கிடந்தார்.

மறுபடியும் மயக்கம் ஓரளவு தெளிந்த தும் கைகேயியின் கால்களைக் கெட்டியாகப் பிடித்தார்.

"கைகேயி! நான் கூறியவற்றையெல்லாம் மறந்துவிடு. இராச்சியபாரத்தை நீயே பொறுப்பிலெடுத்துக்கொள். உன் கையா லேயே இராமனுக்குப் பதவியினைக் கொடு. அப்போது இந்த உலகுள்ளளவும் உன் புகழும் பெருமையும் நிலைத்து நிற்கும். என் உயிரினும் மேலான இராமனை கானகம் ஏக விட்டுவிடாதே! அவ்வாறு அவன் போனால் அவன் தாய் கோசலை உடனே உயிர் துறப்பாள். சனகர் மகள் சீதை- இராமனையே நம்பி வந்தவள். அவள் மனம் எவ்வாறு புண்படும்? நீயும் ஒரு பெண்தானே! உன்னுடைய முடிவினை மாற்றிக்கொள்!"

### தலை வணங்கா மன்னன் தாள் பணிந்தான்

தரணி போற்றும் தசரதச் சக்கரவர்த்தி இன்று தரையில்- தன் மூன்றாவது தாரத்தின் பாதங்களில் மண்டியிட்டுக் கெஞ்சும் நிலைக் குள்ளானார். மன்னர் தன் காலடியில் வீழ்ந்து கிடப்பதைக் கண்ட கைகேயியின் மனம் கல்லாக இறுகியது. அவள் தன் பிடியில் மேலும் அழுத்தம் செலுத்தலானாள்.

"எனக்கு எத்தகைய காரணத்தைக் கூறியும் ஏமாற்றும் எண்ணத்தை விட்டு விடுங்கள். நாளிகைகள் உருண்டோடிக் கொண்டிருக்கின்றன. நடு நிசியும் கடந்து விட்டது. உடனடியாக இராமனைக் காட்டுக்கு அனுப்பும் கட்டளையைப் பிறப் பியுங்கள்." இவ்வாறு கைகேயி வைராக்கியத் துடன் கூறியதும் தசரதரின் அவயவங்கள் அத்தனையும் செயலிழக்க ஆரம்பித்து விட்டன. தனது வலக்கரத்தை மட்டும் உயர்த்தி ஏதோ சைகை செய்தார். இப் பொழுது கூனியின் சைகையும் கைகேயியின் கண்ணில் பட்டது. இந்த வேளையினையே தக்க சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி அதி காரத்தை தன்பால் எடுத்துக் கொள்ளும்படி கூனி- மந்தரையின் சைகை அமைந்திருந்தது. வாயிலை நோக்கி நடந்தாள். ஒரு காவலனை

## வனிதையின் காலடியில்.....

அழைத்து, அமைச்சர் சுமந்திரரை அழைத்து வரும்படி ஆணையிட்டாள்.

சுமந்திரர் அங்கு வந்து சேர்ந்தார். அமைச்சரானாலும் அந்தப்புரமல்லவா? விரும்பியபடி அங்கு அவரால் எங்கும் செல்ல முடியாது. ஆனால் அவர் நின்றிருந்த இடத்திலிருந்து பார்க்கும் போது படுக்கை அறை ஒன்றில் மஞ்சத்தில் தலை வைத்து தரையில் மன்னர் சுருண்டு கிடப்பதை அவரால் காண முடிந்தது. சக்கரவர்த்தி சுய நினைவுடனில்லை என்பதை அவர்

## வீழ்ந்து கிடந்தாரே!

உள்ளுணர்வு உறுத்தியது. அறையிலிருந்து வெளியே வந்த கைகேயி, சுமந்திரரிடம் இராமரை மன்னர் உடனே பார்க்க விரும்புவ தாகக் கூறி அனுப்பி வைக்கும்படி கூறினாள்.

ஓரளவு மயக்கம் தெளிந்த நிலையில் இருந்த தசரதருக்கு கைகேயியின் குரல் கேட்டது. ஆனால் அவருடைய உடம்பை அசைக்க முடியவில்லை. அவருடைய உள்ளத்தில் எண்ண அலைகள் எழுந்தன.

'கைகேயிக்குக் கொடுத்த வாக்குக்குக் கட்டுப்பட்டவன் நான்தானே! இராமனை அந்த வாக்குறுதி எந்த வகையிலும் கட்டுப் படுத்தப்போவதில்லை. மக்களிடத்தில் இராமனுக்கு செல்வாக்கு அதிகமாக இருப் பதனால், 'பட்டத்தைத் துறந்து காட்டுக்குப் போ' என்றாலும் அவன் போகாமலிருக் கலாம். அவனுக்கு அத்தகைய உரிமையும் இருக்கிறது. அவ்வாறு இராமன் செய்வா னானால் 'நான் வாக்கினை மீறியவன்' என்ற பழிச்சொல்லுக்கு இடமளிக்க மாட்டேனே! ஆனால் என் மகன் இராமன் அவ்வாறு செய்வானா? இவ்வாறு, இராமன், தன் ஆணை என்று கைகேயி கூறப்போகும் வார்த்தைகளைத் தட்டிவிட்டு துணிந்து பட்டத்தைச் சூட்டிக் கொள்ள வேண்டுமே, என்று தசரதர் பிராத்தித்தார்.

### முன் செய்த வினையின் பின் கண்ட பலன்

இதற்கிடையில் தசரத மன்னர் அரை குறை மயக்க நிலையில் கிடக்கும்போது, அவர் இளைஞனாக இருந்த காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் அவருடைய நினைவுக்கு வந்தது. கானகத்தில் ஒரு சமயம் வனவேட்டைக்காக தசரதர் சென்றிருந் தார். அப்போது ஒரு புதரின் அருகே ஒரு செடியின் அசைவு தெரிந்தது. அதனுள் மான் ஒன்று பதுங்கியிருப்பதாகக் கருதிய மன்னவர் தன்னுடைய வில்லினில் நாணேற்றி எய்தார். செடியினருகேயிருந்து ஓர் இளைஞனின் அவலக்குரல் கேட்டது. தசரதர் துடிதுடித்தார். மான் என்று எண்ணி ஒரு மனிதன் மீது பாணத்தைச் செலுத்தியிருந்தார். ஓடிச்சென்று இளைஞனை எடுத்து தன்மடிமீது கிடத்தி ஏதேதோவெல்லாம் செய்து பார்த்தார். அவன் உயிரைக்காப்பாற்ற முடியவில்லை. இறக்கும் போது, தான் ஒரு ரிஷிகுமாரன் என்றும் பார்வை இழந்த தன் பெற்றோருக்குத் தான் மட்டுமே பணிவிடைசெய்து வருவதாகவும் கூறி அவர் கள் இருக்குமிடத்தையும் கூறிவிட்டு கண்களை மூடிக் கொண்டான். ரிஷிகுமார னின் சடலத்தை எடுத்துக் கொண்டு வயோதிப தாய்தந்தையரிடம் சென்ற தசரதருக்கு எவ்வாறு அவர்களைச் சமாதானப் படுத்துவது என்று தெரிய வில்லை. இருவரும்புத்திர சோகத்தால் துடி துடித்தனர். "என் மகனைப் பிரிந்து புத்திர சோகத்தால் நான் துடி துடிப் பது போல் நீயும் புத்திரசோகம் தாங்காது செத்து மடியக்கடவது" என்று அந்த வயோதிப முனிவர் சாபமிட்டு உயிர் துறந்தார்.



இந்தக் காட்சியினையே கைகேயியின் அந்தப்புரத்தில் கிடந்த தசரத மன்னரின் மனக்கண் கண்டு கொண்டிருந்தது. 'முற் பகலில் செய்ததெல்லாம் பிற்பகலில் விளை யும்' என்ற உண்மை புலனாகியது. தெரிந்தோ தெரியாமலோ ஒருவன் செய்யும் தவறு எப்படியும் அவன் வாழ்நாளில் எப்போதா வது பிரதிபலித்தே தீரும் என்பதையும் அவர் கண்டு கொண்டார். முன்பு தான் செய்தவினை இன்று வந்து சூழ்ந்து விட்டமையினால் இதிலிருந்து மீள முடியாது என்பதனையும் உணர்ந்தார்.

★ ★ ★

ஒருவர் மீது கோபம் கொண்டு, பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் மனத்தின் அடித்தளத்தில் தேங்கி நின்றாலும் அதனால் பெரும் ஆபத்துகள் தோன்று கின்றன. இராமபிரான் மீது எவரும் எத் தகைய குறையையும் கண்ட தில்லை. பார்ப் போரெல்லாம் அவரிடம் ஒருவகைப் பற்றுக் கொண்டு பற்றிக் கொள்ளுகின்றனர். அயோத்தியிலோ மிதிலையிலோ இராம பிரானை வெறுத்தவர் எவரும் இல்லை. இளவரசுப் பட்டம் சூட்டுவதற்கு மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தோ மந்திரிப் பிரதானி களிடமிருந்தோ எத்தகைய எதிர்ப்புக்குரலும் எழுந்ததில்லை. ஆனால் கைகேயிதான் இராம பட்டாபிஷேகத்துக்கு முதல் எதிர்ப்புக்குரல் கொடுத்தாள். அதுவும் அவள் தானாகக் குரல் எழுப்பவில்லை. மந்தரை என்பவள் தான் மூல காரணமாக இருந்திருக்கிறாள். ஆகவே மந்தரை இராம பட்டாபிஷேகத்தைத் தடை செய்ய முற்பட்டமைக்கும் ஒரு காரணம் இருந்ததாகக் கூறப்படுகிறது.

### கூனிக்கு ஏனிந்த கோபமோ?

இராமரும் சகோதரர்களும் சிறுவர்களாக விளையாடிக் கொண்டிருக்கும்போது நடை பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் இது. இராமர் சிறிய வில்லொன்றை கையில் வைத்து அம்புகளைத் தொடுத்துக் கொண்டி ருந்தார். அந்த வழியே மண்குடத்துடன் சென்று கொண்டிருந்த மந்தரை என்னும் கூனி மீது இராமரின் சிறு அம்பு பட்டுவிட் டது. அது காயத்தை ஏற்படுத்தும் அம்பல்ல; சிறிதளவு நோகண்டிருக்கும். இதனை ஒரு பெரும்பிரச்சனையாக ஆக்கி கூனி பலத்த சப்தமிட்டுத் திட்டியிருக்கிறாள். குறும்புத் தனத்தையே பெருந்தனமாகக் கொண்டிருந்த இராமன் தனது மற்றொரு கணையினால் கூனியின் இடுப்பிலிருந்த தண்ணீர்க்குடத்தை அடித்தான்; அது உடைந்தது- நீரும் கொட்டி யது. அத்துடன் கூனி தரையில் வீழ்ந்து விட்டாள்.

இச்சம்பவத்தால் இராமன் மீது மந்தரை எப்போதும் கோபம் கொண்டவளாகவே காணப்பட்டாள். இராமன் பலதடவை- அந்தச் சிறுவயது விளையாட்டுத்தனத்தை மன்னித்து மறந்து விடும்படி கூனியிடம் கெஞ்சியிருக்கிறான். ஆனால் கூனியின் அடி மனத்தில் இச்சம்பவம் பனிபோல் உறைந்து கிடந்தது. தக்க தருணம் வந்ததும் பனி உருகுவது போல் அவள் உள்ளக் கிடக்கை உருமாறி பெருவெள்ளமாகச் சீறிப் பாய்ந்தது. தனக்கு இராமன் செய்த 'கொடுமை'க்கு கைகேயி மூலமாகத் தண்டனை தரத் திட்டமிட்டாள் மந்தரை.

✤ ✤ ✤

பொழுது புலர்வதற்கு இன்னும் நான்கு நாளிகைகளே இருந்தன. கைகேயியின் கட்டளையை ஏற்று இராமனை அழைத்து வருவதற்காக அந்தப் புரத்திலிருந்து வெளி யேறிய சுமந்திரரின் கண்களில் அழகாக அலங்கரிக்கப்பட்ட சக்கரவர்த்தியின் விழாக் கால இரதம் தென்பட்டது. முதல் நாளிரவு மன்னருக்குக் கூறியபடி குறிப்பிட்ட நேரத்தில் உபேந்திரர் இரதத்துடன் வந்திருந்தார். தனக்கு முன்னதாகவே அமைச்சர் அங்கு வந்து விட்டதைக் கண்ணுற்ற உபேந்திரர் தான் தாமதித்து வந்து விட்டாரோ என்று எண்ணி அமைச்சர் முன் சென்று முகமம் கூறிவிட்டு, மன்னர் புறப்பட ஆயத்தமாகி விட்டாரோ என்று கேட்டார். இருள் விலகாத அந்த வேளையிலும் அமைச்சரின் முகத்தில் கண்ட கலக்கம் உபேந்திரரையும் ஒரு கணம் உலுக்கியது.

"மன்னர் உடல் நிலை சீரற்றுப் போயிருக்க வேண்டும். மகாராணி கைகேயி அம்மையாரின் முகத்திலும் மகிழ்ச்சிக்களை தென்படவில்லை. இளவரசர் இராமரை உடனே அழைத்து வரும்படி மகாராணி யாரே எனக்கு உத்தரவிட்டார்கள். என் அனுமானப்படி ஏதோ விபரீதம் நடந்திருக் கிறது. எந் நாளும் போலில்லாது மன்னர் தரையில் கிடந்து தலையை மட்டும் மஞ்சத்தில் புதைத்த வண்ணம் கிடப்பதை தொலைவி லிருந்து கண்டேன். என்மனமும் ஒரு நிலையில் இல்லை." இவ்வாறு கூறிய சுமந்திரர் விரைவாக அவ்விடம் விட்ட கன்றார்.

✪ ✪ ✪

அயோத்தி மாநகரம் எங்கும் விழாக் கோலம் பூண்டு காணப்பட்டது. மக்கள் சாரிசாரியாக வந்து குவிந்த வண்ணம் இருந்தனர். எல்லோரும் பட்டாபிஷேகம் நடைபெறும் சிறப்பு மண்டபத்தை நோக்கியே சென்று கொண்டிருந்தனர். அம் மண்டபத் திலிருந்து வேத மந்திரங்களின் ஒலி எழுந்து விண்ணை முட்டிக்கொண்டிருந்தது.

வசிட்ட மாமுனிவரும் அவர்தம் சீடர்களும் வேதியர்கள் சூழ, மங்கல, வாத்தியங்கள் முழங்க, பொற்கலசங்களில் புண்ணிய நதிகளின் தீர்த்தங்களை எடுத்துக் கொண்டு ஊர்வலமாக வந்து கொண்டிருந் தனர்.

இக்காட்சிகளைக் கண்டுகொண்டு விபரிக்க முடியாத உள்ளுணர்வுகளை அடக் கியவராக அமைச்சர் சுமந்திரர், இராமரும், சீதையும், தங்கியிருக்கும் இடத்தை வந்தடைந்தார். (தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி இல—16

**பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்**

**சரியான விடை** சம்பரன்

1. செல்வி. சிவவீணாதாரிணி சிவபாலன். டிக்கோயா எஸ்டேட், டிக்கோயா.
2. எஸ்.ஐ.எம். ஃபரீத். 137. புளக் 'ஜே', சம்மாந்துரை.
3. செல்வி. சுபாசினி சேவியர். பிறவுண்ஸ்விக் எஸ்டேட், மஸ்கெலியா.
4. மு. சரவணன். டேமேரியா, பசறை.
5. பி. உதயேந்திரன். இல.212ஏ, வாசல ரோட், கொட்டஎன, கொழும்பு-13.

### இராமாயணப் போட்டி 18

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:-** இராமரின் பட்டாபிஷேகத்துக்கு முதல் எதிர்ப்புக்குரல் கொடுத்தது யார்?

பெப்ரவரி 10ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:18.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல— 1772
கொழும்பு.





# வண்ண நுதல்



அழகில் ஆபத்தும் இருக்கிறது ஜாக்கிரதை என்ற எச்சரிக்கை இந்த வண்ணத் தவளைவிடயத்தில் கச்சிதமாகப் பொருந்தும்.

இதன் நாவில் சுரக்கும் உமிழ்நீரில்தான் சமாச்சாரமே இருக்கிறது. அதாவது கொடிய விஷம் இருக்கிறது. இதன் ஒரு கிராம் உமிழ்நீரில் 50 மனிதர்களை கொல்லும் சக்தி இருக்கிறது. தவளைகளில் மிக அபாயமானது இது.

சிவப்பு, கரும்பச்சை, கடும் மஞ்சள் ஆகிய மூன்று நிறங்களில் இந்த ரகத் தவளைகள் இருக்கின்றன.

அமெரிக்காவின் மத்திய மற்றும் தென் பகுதிகளிலும், இந்தியாவின் அடர்ந்த காடுகளிலும் இவற்றைக் காணலாம்.

"நச்சு நாக்குத் தவளை" என்று இதனை ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள். விஞ்ஞானப் பெயரும் ஒன்றுண்டு. (உச்சரிப்பதற்கு கொஞ்சம் கஷ்டம்) 'டென்ட்ரோபேட்ஸ் புமிலியோ'! நிறத்தில் அழகு, நாக்கில் விஷம், பொல்லாத தவளைதான்.






# ஆடும்வரை அசத்தல்

மாட்டின் குறோ, நியூசிலாந்து அணியின் நம்பிக்கை நட்சத்திரம். கடந்த உலக கிண்ணப் போட்டியில் (1992) நியூசிலாந்து அணியின் கப்டனாக இருந்து, அரையிறுதிப் போட்டிவரை அணியை நடத்திச் சென்றவர். இம் முறை மாட்டின் குறோவை விட அனுபவம் குறைந்த லீயெமன் கப்டனாக இருந்தாலும் மாட்டின் குறோதான் உண்மையான ஹீரோ.

1983ம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இருந்து கடைசியாக 92 இல் நடந்த உலகக் கிண்ண போட்டிவரை மாட்டின்குரோ பங்குபெற்றியிருக்கிறார். அதாவது மூன்று உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்கு கொண்டுள்ளார். மூன்றிலும் மொத்தமாக குவித்துள்ள ரன்கள் 718. இம்முறையும் லாவகமாக ரன்களை குவித்து ஆயிரம் ஓட்டங்களை தாண்டுவதுதான் மாட்டின் குறோவுக்குள்ள சவால்.

ஏற்கெனவே விவியன் ரிச்சாட்ஸ் 1013 ரன்கள் குவித்து உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக ரன் குவித்த வீரர் என்ற புகழைத் தட்டிக்கொண்டார்.


அவருக்கு அடுத்தபடியாக ரன் குவித்தவர்களில் டேவிட்பூன் மட்டுமே இம்முறை பங்கு பெற்றுகிறார். அவுஸ்ரேலிய வீரரான டேவிட்பூன் 87ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியிலும், 92 உலகக் கிண்ணப் போட்டியிலும் அடிக் குவித்தது 815 ரன்கள்.

எனவே-டேவிட்பூனுக்கும் மாட்டின் குறோவுக்கும் இடையில்தான் போட்டி. உலகக் கிண்ண போட்டிகளில் ஆயிரத்தைதாண்டி விவியன் ரிச்சாட்ஸின் சாதனையை இவர்களில் முறியடிக்கப்போவது யார்?




மாட்டின் குறோ

# அன்புவந்தல்லோ அணைச்சுக் கொண்டல்லோ




பூனை மீது மனதார நேசம் வைத்துவிட்டார் குரங்கார். அன்புக்கு உண்டோ தடுக்கும் பேதம்! வவுனியாவில் கிளிக் செய்யப்பட்ட காட்சி. கிளிக் செய்தவர் இரா.இரங்கசாமி. அபூர்வக் காட்சி!

# கிரிக்கெட் திருவிழா

1983 இல் இந்தியாவுக்கு உலகக் கிண்ணத்தை பெற்றுக்கொடுத்த கப்டன் கபில்தேவ். இரண்டுமுறை உலக சாம்பியனாக இருந்த (1975-1979) மேற்கிந்தியதீவு அணியை இந்தியா வீழ்த்தியது. அதே போட்டித் தொடரில் சிம்பாவேக்கு எதிராக கபில்தேவ் 175 ரன்களை குவித்தார். ஆட்டமிழக்கவில்லை. கபில்தேவின் ஆகக்கூடிய எண்ணிக்கையும், அவர் அடித்த ஒரே ஒரு சதமும் அதுதான்.




இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் பந்துவீச்சில் சாதனை படைப்பதில் போட்டி அனில் கும்ளேக்கும், ஷேன் வோனுக்குந்தான். இருவரும் இந்திய, அவுஸ்ரேலிய அணிகளின் நம்பிக்கை நட்சத்திரங்கள். ஷேன் வோனுக்கு சர்ச்சைகள் மூலமாக நல்ல பிரபலமும் கிடைத்துள்ளது.




1992ல் உலகக் கிண்ணப் போட்டியில் இம்ரான்கான் தலைமையில் பாகிஸ்தான் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இங்கிலாந்துக்கு எதிராக நடந்த போட்டியில் அதனை வீழ்த்தியது பாகிஸ்தான். இம்ரான்கான் ஓய்வு பெறமுன்னர் பெற்றுக்கொடுத்த பெரிய வெற்றி அது.

இந்த இரு கப்டன்களும் இப்போது பார்வையாளர்கள். இம்ரான்கான் கடந்த வருடத்தில் மாப்பிள்ளையாகிவிட்டார்.

## சென்டிமென்ட்

1975 முதல் 1992 வரை 5 உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. 5 போட்டிகளிலும் ஒரு சென்டிமென்ட் பொதுவாக இருக்கிறது. இறுதிப் போட்டியில் பூவா தலையா போட்டுப் பார்த்ததில் யார் முதலில் துடுப்பாடும் அதிஷ்டம் பெற்றார்களோ அந்த அணிதான் ஐந்து முறையும் உலகக் கிண்ணத்தை தட்டிச்சென்றது. இம்முறை எப்படி?